
# ஈழம்

## உலகை உலுக்கிய கடிதங்கள்



சாவிலும் மீண்டெழுவோம்

# ஈழம் –
# உலகை உலுக்கிய கடிதங்கள்

தொகுப்பு

சூரியதீபன்

கண. குறிஞ்சி

புதுமலர் பதிப்பகம்

ஈரோடு

ஈழம் – உலகை உலுக்கிய கடிதங்கள்

| | |
|---|---|
| தொகுப்பு | சூரியதீபன் கண.குறிஞ்சி |
| முதற்பதிப்பு | ஜூன் 2009 திருவள்ளுவர் ஆண்டு 2040 |
| வெளியீடு | புதுமலர்பதிப்பகம் |
| | 10/176 வைகை வீதி |
| | வீரப்பன்சத்திரம் (அஞ்சல்) |
| | ஈரோடு 638 004 |
| | அலைபேசி 94433 07681 |
| மின் அஞ்சல் | newflower_kurinji@yahoo.co.in |
| அட்டை வடிவமைப்பு | மவுஸ் பாயிண்ட் |
| | சென்னை 600 005 |
| அச்சாக்கம் | ஸ்ரீ விக்னேஷ் பிரிண்ட்ஸ் |
| | சென்னை 600 083 |
| விலை | ரூ.40 /– |

காணிக்கை

ஈழத் தமிழர்களுக்கு
ஆதரவாகத் தீக்குளித்து
ஈகம் செய்த
உலகத்தமிழர் அனைவருக்கும்

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை | 5 |
| 2. | வால்ட் விட்மன் கவிதை | 7 |
| 3. | ஒரு பெண் புலியின் உணர்ச்சிக் கடிதம் | 9 |
| 4. | புலிகளே மக்கள்! மக்களே புலிகள்! | 17 |
| 5. | ரூபன் கடிதம் | 22 |
| 6. | முருகதாசன் கடிதம் | 29 |
| 7. | ஈழமக்கள் ஒரு புழுவிலும் கேவலமானவர்களா? | 39 |
| 8. | தென்னாசியாவின் அதியுயர் கல்விமான்கள் கடிதம் | 42 |
| 9. | மக்கள் இயக்கங்களின் தேசியக் கூட்டமைப்பின் கடிதம் | 46 |
| 10. | உலகப் பத்திரிகையாளர் கூட்டமைப்புக் கடிதம் | 51 |
| 11. | லசந்த விக்ரமசிங்கே கடிதம் | 56 |
| 12. | இன்குலாப் கடிதம் | 66 |
| 13. | பெரியார் வழியா? அண்ணா வழியா? | 68 |
| 14. | முத்துக்குமார் கடிதம் | 71 |
| 15. | ஈழத் தமிழ் உறவுகளுக்கு ஒரு தமிழகத்து உறவின் மடல் | 83 |

## நம் கைவிரல்களைப் பின்னியபடி....

**நா**ன் முதலில் மனிதன். இரண்டாவதாய் தமிழன். அடுத்ததாகச் சிலர் என்னை இந்தியன் என்கிறார்கள். நான் இல்லை என்கிறேன். பிறகு நான் சர்வதேச மனிதன்.

இந்தியர்கள் என்று உச்சரிக்கிற யாரும் சர்வதேச மனிதர்களாகவும் இல்லை; தமிழர்களாகவும் இல்லை. அதனாலேயே அவர்கள் மனிதர்களாகவும் இல்லை.

நான் தமிழனாக இருப்பதால் மனிதனாக இருக்கிறேன் என்பது இயல்பானது போலவே, இந்தியனாக இருப்பவன் மனிதனாக இல்லாததும் இயல்பானது.

இல்லையென்றால் எந்த மனிதனும் இங்கே இருபது கிலோ மீட்டருக்குள் இருக்கிற பூமியில் இலட்சக்கணக்கில் மனித உயிர்கள் கொத்துக் கொத்தாய்க் கொலை செய்யப்பட்ட போது - கண் கொண்டு காணாமல், காது கொண்டு கேளாமல், கருத்து கொண்டு உணராமல் இருக்க முடியுமா? இருந்தார்கள்; இந்தியர்கள் என்பதால் இருந்தார்கள்.மரணங்களின் மேல்நின்று நர்த்தனமாடுகிற எந்த இந்தியனையும் மனிதன் என்று கூற நா கூசுகிறது.

இந்தியரின் தேசப்பற்றினைப் பற்றி எழுதுகிறபோதெல்லாம், இப்போது எழுதுகோலுக்கு நடுக்கம் எடுக்கிறது.

மனிதர்கள் மேல் கொண்ட பற்றுக்காக முத்துக்குமார் என்ற அக்னிக் குஞ்சு எரிந்தது. பல அக்னிக்குஞ்சுகள் பிறந்தன. ஒவ்வொரு குஞ்சும் ஒரொரு வகையாய்! அநீதிகளுக்கெதிரான ஒரு சகோதரனாய் எரிந்தது முத்துக்குமார் என்றால், சர்வதேச முகத்தின் மீது அறைந்தாற்போல் ஐ.நா. மன்றத்தின் முன் எரிந்தான் முருகதாசன். உறைந்து போன மனித மனங்களை உலுக்கி எடுத்த வான் படைக் கரும்புலி கேனல் ரூபன்... தங்களின் உயிர்களுக்குப் பின்னாவது தமிழினத்தின் மனச்சாட்சி உசுப்பப்படுமென்ற பேரவா அவர்தம் கடிதங்களாகப் பயணித்தது.

ஓர் இதயத்திலிருந்து இன்னொரு இதயத்தைத் தொடுகிற கருத்து வாகனம் - கடிதம். கடிதம் சேருகிற புள்ளியில் சுனைநீர் ஊற்றுப் பீறியடிக்கலாம்; நுங்குச் சுவையின் தித்திப்பை நாக்கு திரும்பத் திரும்பச் சுழற்றலாம். அருவி மொத்தத்தையும் ஒரு தலையில் கவிழ்க்க முயலலாம்.

குளுமையை, சுவையை, இதத்தைத் தருகிற கடிதங்களிலிருந்து வித்தியாசமான தட்ப வெப்பச்சூழலில் பிறந்தவை ஈழம் சார்ந்து எழுந்து வந்த கடிதங்கள். அடிமையை விடுதலை செய்யும் ஒரேயொரு திசை தவிர வேறெதுவும் இல்லாதவை இந்தக் கடிதப் படைப்புகள்.

தமிழினத்துக்கு மட்டுமல்ல, உலகம் முழுமைக்குமான ஆவணங்கள் அவை. இதில் இணைக்கப்பட்டிருக்கும் **தி சண்டே லீடர்** பத்திரிகை யின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க- கொலை செய்யப்படுவோ மென முன்கூட்டியே உணர்ந்து ராசபக்சே அரசின் கொலை வெறியை அம்பலப்படுத்தி எழுதிய கடிதம் மட்டும், சிங்கள இனத் துக்குள்ளிருந்து வந்த கடிதம். அநீதியை எதிர்க்கிற, மனித உரிமைகளுக்காக நிற்கிற எவராயினும் எம்மினத்துக்கு உரியவர். ஒடுக்கப்படுகிற மனிதருக்காகப் பேசுகிற போது அவர்கள் சர்வதேச மனிதர்கள்.

உலகின் மனச்சாட்சியை உலுக்கும் இக்கடிதங்கள், விடுதலை வரலாறு உள்ளளவும் நம்முடன் பேசியபடி, நம் கரங்களைத் தம் விரல்களுக்குள் பின்னியவாறு நம்முடன் பயணிக்கும்.

இக்கடிதங்களைத் தொகுத்து வெளியிடுகையில், தானும் ஒரு தீபச் சுடரை ஏந்திய பெருமிதத்தைப் **புதுமலர் பதிப்பகம்** பெறுகிறது.

ஜூன் 2009
சென்னை

**சூரிய தீபன்**

## விடுதலை விதை வளராத
## கல்லறை எதுவுமே இல்லை

பயந்திருந்த மன்னர்கள்
திரும்பி வந்தார்கள்
பரிவாரத்தோடு, கொலையாளிகளோடு
மத குருக்களோடு, தண்டல்காரர்களோடு
சிப்பாய்களோடு, சிறையதிகாரிகளோடு
வக்கீல்களோடு, வலிய சவுக்குகளோடு
பிரபுக்களோடு, பின்பாட்டுக்காரர்களோடு
ஒவ்வொரு மன்னனும்
ராசரீகமாய்த் திரும்பி வருகிறான்.

இப்போது
புதிதாகத் தோண்டப்பட்ட சவக்குழிகளில்
பிணங்கள் மிதக்கின்றன -
ரத்தம் தோய்ந்த இளைஞரின் பிணங்கள்.

தூக்கு மேடைக் கயிறுகள்
கனமாக இழுபடுகின்றன
மன்னர்களின் துப்பாக்கி ரவைகள்
எங்கும் பறக்கின்றன
அதிகார ஜந்துக்கள் ஆரவாரமாய்ச் சிரிக்கிறார்கள்.

அனைத்தும்
இவை அனைத்தும் நல்லதே!

இளைஞரின் பிணங்கள்,
தூக்கு மேடையில் தொங்கும் தியாகிகள்,
ஈய ரவை துளைத்த இதயங்கள்
இவர்களெல்லாம்,
குளிர்ந்து உறைந்து அசைவற்று
தோற்றமளிக்கிற இவர்களெல்லாம்,
கொல்லப்படாத ஜீவ சக்தியோடு
வேறு வேறு இடங்களில் உயிர்த்தெழுகிறார்கள்.

ஓ! அரசர்களே! அதிகாரிகளே!
அவர்களெல்லாம்
வேறு இளைஞர்களுக்குள்ளே ஜீவிக்கிறார்கள்.
உங்களை எதிர்த்து
மீண்டும் போர் செய்யத் தயாராக
சகோதரர்களுக்குள்ளே உயிர்க்கிறார்கள்.

விடுதலைக்காகக் கொலை செய்யப்பட்ட கல்லறைகளில்
விடுதலை விதை வளராத கல்லறை எதுவுமே இல்லை.
இந்த விதைகளெல்லாம்
மீண்டும் விதைகளை உருவாக்கும்.
காற்று, தொலை தூரம் சுமந்து போய்
மீண்டும் விதைக்கும்
மழையும் பனியும் போஷித்து வளர்க்கும்.

கொடுங்கோலரின் ஆயுதங்களால் கொல்லப்பட்டவரின்
ஆவிகளனைத்தும்
பூமி முழுதும் கண்ணறியாமல்
சுற்றி நடக்கும்
மெல்லிய குரலில் எச்சரிக்கும்
புதிய புரட்சி நாளுக்கு
யோசனை சொல்லும்.

விடுதலையே !
மற்றவர்கள் உன்னிடம் நம்பிக்கை இழந்தாலும்
என்றென்றைக்கும் நான் மட்டும்
நம்பிக்கை இழக்கப்போவதில்லை.



- *கவிஞர் வால்ட் விட்மன்*

## ஒரு பெண்புலியின் உணர்ச்சிக் கடிதம்

*சிங்கள ராணுவத் தாக்குதலின் காரணமாக இலங்கையில் அல்லலுறும் தமிழ் மக்கள் காக்கப்பட வேண்டும் என்பதற்காகத் தன்னுயிரைத் தீயில் மாய்த்துக் கொண்டவர் முத்துக்குமார். இவர் இறப்பதற்கு முன்பாக எழுதிய கடிதவரிகள் உலகத்தமிழ் மக்களிடையே பெரும் எழுச்சியையும், இலங்கைத் தமிழருக்கான போராட்டத்தின் ஆதரவையும் அதிகரிக்கச் செய்தது. அண்மையில் கொழும்பில் விமானத் தாக்குதல் நடத்தி மாண்ட விடுதலைப்புலிகளின் தற்கொலைப் படையினைச் சேர்ந்த போராளி ரூபனும் தன் கைப்பட தன்னாட்டு மக்களுக்காக எட்டுப் பக்கங்கள் கொண்ட ஒரு கடிதத்தை மரணசாசனமாக எழுதி வைத்துச் சென்றிருக் கிறார். இந்தக் கடிதம் புலிகளின் ஆதரவு இணையதளங்களில் வெளியாகி, இலங்கைத் தமிழர் ஆதரவு இதயங்களை மேலும் உலுக்குவதாக அமைந்தது.*

இந்த இரு கடிதங்களும் ஏற்படுத்திய பாதிப்பு இன்னும் அகலாத நிலையில், அந்த வரிசையில் தற்போது மேலும் ஒரு கடிதம் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது. 'தேசம் காக்கப் புறப்பட்டு விட்ட சேயிடமிருந்து' என்று தலைப்பிடப்பட்டிருக்கும் இந்தக் கடிதத்தை வன்னிப்பகுதியில் உள்ள இரணைப்பாலை என்ற இடத்தைச் சேர்ந்த **தேவகி** என்ற பதினெட்டு வயது இளம்பெண் ஒருவர் எழுதியுள்ளார். பெரும் சிரமத்துக்கிடையில் பள்ளிப்படிப்பை முடித்துவிட்ட இந்தப் பெண், கல்லூரிக்குச் செல்ல மறுத்தவராய் ஒரு போராளியாகத் தன்னை மாற்றிக் கொண்டு புலிகள் இயக்கத்துடன் தன்னையும் இணைத்துக் கொள்ளப்போகிறார். தன்னுடைய இந்த முடிவினை நியாயப்படுத்தி தனது தந்தையைச் சாந்தப்படுத்தும் விதமாக இந்த இளம்பெண் எழுதி யிருக்கும் இந்தக் கடிதம், படிப்பவர்களின் நெஞ்சை உருக்குவதாகவும் இந்தப் பெண்ணுக்கு இத்தனை அரசியல் ஞானமா என்று வியக்க வைப்பதாகவும் இருக்கிறது.

அன்புள்ள அப்பாவுக்கு!

வழமைபோல நலம்; நலமறிய ஆவல் என்று எழுத எனக்கு இன்று மனம் வரவில்லை; காரணம், நீங்கள் அறிந்ததே.

பூமிப்பந்து சுற்றுகையையோ அல்லது சுழற்சியையோ நிறுத்தி னாலும், என் மனப்பந்து எம் மண்ணை விட்டு அகலாது என்பதை உளமார உணர்ந்து, பனிவிழும் தேசத்தில் எம்மை(யும்) நினைத்து ஏங்கிக் கொண்டிருக்கும் உங்களுக்காகவும் அண்ணா மற்றும் அண்ணிக்காகவும் இம்மடலைச் சற்று விரிவாக எழுது கிறேன்.

கடந்த வருடம் நீங்கள் எழுதி அனுப்பிய கடிதம் சில வாரங்கள் முன்னர் பலதடைகள் தாண்டி, உடைத்து ஒட்டப்பட்டு, இடம் பெயர்ந்து இயங்கிய எமதூர்த் தபாலகத்தில் இருந்து எமக்குக் கிடைத்தது.

அதில் நீங்கள் எதிர்வு கூறி எழுதியிருந்தவாறு, இங்கு நாளாந்த (அன்றாட) நிலவரம் வரவர மோசமாகிக் கொண்டே போகிறது. கடந்த வருடம் ஐந்தாம் மாதம் 23-ம் திகதி எங்களுடைய வீட்டுக்கும் முறிகண்டிச் சந்திக்கும் இடையில் சிறிலங்கா பயங்கரவாத அரசின் ஆழ ஊடுருவும் படை நடாத்திய 'கிளைமோர்' தாக்குதலால் 6 சிறார்கள் உட்பட்ட 16 பேர் அநியாயமாய் அவலச் சாவடைந்து விட்டதைப் பற்றியும், புதூர் நாகதம்பிரான் கோயில் விழாவுக்குச் சென்று கொண்டிருந்த மக்கள் மீது இரவு நேரத்தில் மாங்குளத்திற்கும் கரிப்பட்ட முறிப்பிற்கும் இடைப்பட்ட 19 -ம் கட்டைப் பகுதியில் 'கிளைமோர்' தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை பற்றியும் அறிந்து நீங்கள் மிகவும் பயந்ததாகவும், கவனமாக இருக்கும்படியும் எழுதி இருந்தீர்கள்.

அப்பா! அன்றைய சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் உடல்கள் மறுதினம் சனிக்கிழமை, மக்கள் வணக்கத்துடன் ஒரே இடத்தில் பெருங்கதறல்களுடன் அடக்கம் செய்யப்பட்டதை என் கண்களால் நேரிற் கண்டேன் என்று நான் உங்களுக்கு எழுதிய மடலை அனுப்புமுன், நானும் அம்மாவும் எமது அக்கராயன்குளப் பிரதேசத்தை விட்டு இடம் பெயர வேண்டியவர்களாகி விட்டிருந்தோம்.

அதன் பின் நிகழ்ந்த கோழைத்தனமான - அப்பாவி மக்கள் மீதான சிறிலங்காப் படையினரின் ஆழ ஊடுருவும் அணியினரின் பல்வேறு கொடூரத் தாக்குதல்களுக்குப் பின்பாகவும், இன்று வரையும் எமது தாயகம் எங்கும் எத்தனையோ சாவடிப்புகள் பல்வேறு வடிவங் களில் சிங்கள அரச படைகளாலும், ஒட்டுக்குழுக்களாலும்

குறிப்பிட்ட சில நாடுகளின் போர் உதவிகளுடன் நிகழ்த்தப்பட்டு விட்டன.

கொத்துக் கொத்தாகக் குடும்பம் குடும்பமாக எமது உறவுகள் பல சிங்களப் பேரினவாதப் பூதத்தின் இனப்படுகொலையில் உயிரிழந்து விட்டன. எமது மக்கள் பல்லாயிரக்கணக்கில் வயது வேறுபாடின்றிக் காயப்பட்டு, ஊனமுற்று சிகிச்சை எதுவுமின்றிப் பட்டினியோடு பரிதவித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

அப்பா! பாருங்கோ, எத்தனை தரம் நாங்கள் அந்தக் கோயிலுக்கு அந்தப் பாதையில் போய் வந்திருக்கிறோம்? நீங்கள் வெளிநாடு போனதன் பிற்பாடு அம்மாவும் நானும் சித்தி வீட்டுக்குப் போகிற போதும், மருத்துவர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவ மனைக்குப் போகிற போதும், பல தடவைகள் போய்வந்த பாதை அது.

ஆனால், இங்கு இப்போதுள்ள நிலைமையை நீங்கள் எல்லோரும் தினமும் இணையதளங்களூடாக அறிந்து கொண்டுதானே இருப் பீர்கள்? சில வாரங்கள்முன் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் என்னுடன் படித்த பிள்ளை ஒருவர் எறிகணை வீச்சில் காயப்பட்டு இருந்ததை அறிந்து பார்க்கச் சென்றபோது, நானும் எதிர்பாராத வகையில் பல்குழல் பீரங்கித் தாக்குதலில் அகப்பட்டுக் கொண்டேன்.

இப்போது நினைத்தாலும் குலை நடுங்குகிறது. அதில் நான்கூட அகப்பட்டுக் காயப்பட்டோ இறந்தோ இருக்கலாம்தானே? அப்பா, நான்கு பேருள்ள ஒரு குடும்பத்தில் தந்தையும் மூத்த மகனும் அந்த இடத்திலேயே சாக, தாயும் இளைய மகளும் அதே சம்பவத்தில் படுகாயம் அடைந்து அங்கங்களை இழந்து இருக்கிறார்கள்!

அப்பா! ஐம்பத்தெட்டில் நடந்த இனப்படுகொலையின்போது, இலங்கைத் தீவின் தென்பகுதியில் சிறுவர்களாய் இருந்த நீங்களும் அம்மாவும் எவ்வளவு தூரம் துன்பப்பட்டு, மயிரிழையில் உயிர் பிழைத்தீர்கள் எனப் பாட்டாவும் அப்பம்மாவும் சொன்ன வரலாற்றுக் கதைகள் இன்னும் பசுமரத்து ஆணியாய் என் மனதில் நன்றாகப் பதிந்துள்ளன.

பின், 77ஆம் ஆண்டு இனப்படுகொலையின்போது அண்ணா வுடன் மலைநாட்டிலிருந்தபோது அகதியாகிப் பிரபல பாடசாலையில் உயிருகஞ்சி நீங்கள் தஞ்சமடைந்ததும், பிறந்து சில நாட்களேயான பாலகனாய் இருந்த பெரியண்ணா கடும் தொற்றுநோயினால் பாதிக்கப்பட்டு எதிர்பாராத வகையில் உயிரிழந்ததும், நீங்கள் சொல்லி நான் நன்கு அறிவேன்.

அதன்பின்,மீண்டும் 83-ஆம் ஆண்டு இனப் படுகொலையின் போது, எமது வீட்டிற்குக் காடையர் கூட்டம் தீயிட, ஒருவாறு தப்பிப் பிழைத்துக் கப்பலில் வடக்கு நோக்கி அகதியாய் அனுப்பப்பட்ட அவலமும், மாற்றுடையின்றி நீங்கள் தவித்ததும், பக்கத்து வீட்டு ஆட்கள் உதவியுடன் குடிசை போட்டு அவர்கள் வளவுக்குள் தாற்காலிகமாய்த் தங்கியதும், பங்கீட்டு அட்டை உணவுக்காகச் சங்கக்கடை வாசலில் விடியுமுன்பே போய் நின்றது பற்றியும் நீங்களும், அம்மாவும், சின்னண்ணாவும் அவ்வப்போது கூறிய அனுபவக்கதைகள் இன்னும் என் மனப்பாறையில் ஆழப் பதிந்து அழியாது உறைந்துள்ளன.

இருபதாண்டுகள் முன், 'அன்புவழி'யில் 'பூமாலை'யோடு என்று கூறிக் கொண்டு அயல் நாட்டிலிருந்து வந்திறங்கிய ஆக்கிரமிப்புப் படையினன் ஒருவன், ஒருநாள், தேசம் காக்கின்ற காவல் தெய்வங் களுக்கு உணவு கொடுத்த ஒரு மூதாட்டி பற்றித் தெரியுமா என்று கேட்டுப் பள்ளி சென்ற அண்ணாவின் காதைப் பொத்தி அடித்ததில், அண்ணாவின் செவிப்பறை வெடித்துக் குருதி கசிந்தது அண்ணா வுக்கு மறந்திருக்காதுதானே?

அதன்பின், நான் பிறந்த பின்பு குடா நாட்டுக்குள்ளேயே எத்தனை தரம் சொந்தவீட்டை விட்டு இடம் பெயர்ந்து அலைந்து திரிந்து இருக்கிறோம் என்று உங்களுக்கும் நினைவிருக்கும்தானே?

அப்பா! நீங்களும் அண்ணாவும் உங்களுக்கு ஒரு கடமை, பொறுப்பு இருக்கிறது என்று கூறியபடி அதைச் செய்தீர்கள். ஆனால் நான்..? இதுவரை உங்களதும் அம்மாவினதும் ஆசைப்படி, பல துன்பங் களுக்கு இடையில் படித்து முடித்து விட்டேன். இப்போது பல்கலைக்கழகம் போகக்கூடிய தகுதி எனக்கு இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும்.

**ஆனால் யோசித்துப் பாருங்கோ, பல்கலைக் கழகம் போவதற்கு உரிய சூழ்நிலை இருக்கிறதா, போனவர்களுக்குப் பாதுகாப்பு உத்தரவாதம் இருக்கிறதா? என்று கடந்த ஒரு வருடத்தில் மட்டும், அங்குள்ள அரச படையும் அதன் கூலிப்பட்டாளங்களைச் சேர்ந்த வர்களும் எத்தனையெத்தனை மாணவர்களைச் சுட்டுத் தள்ளி விட்டங்களென்று உங்களுக்குத் தெரியுமா?**

எத்தனை அப்பாவி மாணவியரை மானபங்கப்படுத்தி இருக் கிறாங்கள் தெரியுமா? யுத்த நிறுத்தம் வந்தபின் சமாதானம் வந்து விட்டது, சுக வாழ்வு கிடைத்துவிட்டது, பிரச்னை தீர்ந்தது என்று நீங்களும் மற்றவர்கள் மாதிரி நம்பி நம்பி ஏமாறி இருக்க மாட்டீர்கள்

என்றே நினைக்கிறேன். யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்க வந்தவர் களே தாக்கப்பட்டதும், தாங்கள், யுத்தத்தைத்தான் கண்காணிப்ப தாக அவர்களே அறிக்கை விட்டதும் நீங்கள் அறிந்திருப்பீர்கள் தானே?

இதைவிட வேறென்ன வேண்டும் இங்கு இருந்த நிலை பற்றிக் கூற? ஆனால் தற்போது சமரசம் பேசி தூது வந்து பேச்சுவார்த்தைக்கு இடைத்தரகராய் இருந்தவரே அண்மையில், எங்கள் தரப்பு, எமது மக்களின் சுய பங்களிப்பிலும், எதிரியிடமிருந்து கைப்பற்றியும் சிறுகச் சிறுகச் சேகரித்த ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்று கூறி அறிக்கை விட்டதை அறிந்த போது, எமக்கு அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை. **யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச் சாத்தாகி இரண்டாயிரத்து ஐந்நூற்றுக்குச் சற்று மேற்பட்ட இன்றளவுமான நாட்களுக்குள் இந்த சர்வதேசத்தின் உண்மை முகம் எது என்பதும், உள் நோக்கம் என்னவென்பதும் எமக்குப் புரிய வில்லை என்று இனியும் நாங்கள் கூற முடியுமா?**

அப்படி நினைத்து, நம்மை நாமே, ஏமாற்றலாமா? **உங்கள் தலைமுறைத் தலைவர்கள் போல நம் தலைமுறைத் தலைமையு மில்லை; உங்கள் தலைமுறை போல ஏமாற்றப்பட நாங்களும் தயாராக இல்லை.**

அம்மாவுக்கு ஏனோ நாம் கடைசியாகக் கட்டி வாழ்ந்த நம் சொந்த வீட்டை விட்டு வெளியேறும் வரை யதார்த்தம் புரியவில்லை. இல்லையில்லை, புரியாத மாதிரி இருந்திருக்கிறா என்றுதான் சொல்ல வேண்டும். அவகூட இருந்ததால், என்னால் எங்களுடைய தாய்நாட்டுக்குச் சின்னச் சின்னப் பங்களிப்புத்தான் செய்ய முடிந்தது.

பதுங்கு குழி வெட்டுவது, உடுப்புச் சேர்ப்பது, இளநீர் சேர்ப்பது, 'கிபீர்' தாக்குதல்களில் காயம்பட்டவர்களுக்கு முதலுதவி செய்வது, குருதித்தானம் வழங்குவது போன்றவற்றை மட்டும்தான் இதுவரை நான் செய்து இருக்கிறேன்.

**இப்படியான வேலைகளைப் பொதுவாக எல்லோருமே செய்ய லாம். ஆனால், எல்லையில் நிற்க எல்லோராலும் முடியாது. என்னைப்போல இளவயது ஆட்கள்தான் இப்போ அதற்கு அவசியம் தேவை.**

இந்த நிலை என்று மாறுமோ எனக்குத் தெரியாது. ஆனால், நிச்சயம் மாறும். அதற்குரிய காலம் கனிந்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். சந்தேகமே வேண்டாம். அஞ்சி அஞ்சி .. அடங்கி ஒடுங்கி

நாம் ஊரூராக ஓடத் தேவையில்லை. எதிரிக்குப் பயந்து குலை நடுங்கின காலம், காலமாகி விட்டது! நம் சேனைகள் சாணக்கி யத்துடன் சாண் இறங்குவது, முழம் முழமாய் முன்னேறி எம் மண்ணை முழுமையாய் மீட்டுச் சாதனை படைக்கவே!!

சுற்றிவளைப்புகளும், தேடுதல்களும், சித்திரவதைகளும் வன்புணர்வுகளும், அநியாயக் கருவழிப்புகளும், காணாமற் போகச் செய்தல்களும், கடத்தல்களும், கொள்ளையடிப்புகளும், கொத்துக் குண்டு வீச்சுத் தாக்குதல்களும், பதுங்கு குழி வாழ்க்கையும் இனி நமக்கில்லை!

பட்டினி போட்டு, பாதைகளை மூடி, நோய் தீர்க்கும் மருந்து களைத் தடை செய்து, மருத்துவ வசதிகளை நிறுத்தி, குண்டுகளை மழை யாய்ப் பொழிந்தும், கிளைமோர் தாக்குதலால் அப்பாவிகளைக் கொன்றழித்தும், நம் சுதந்திர தாகத்தை நசுக்கிட எண்ணுபவனுக்கு, நாம் எல்லோரும் இறுதிப் பதிலடியைப் பரிசாகக் கொடுக்கின்ற காலம் கனிந்து, நெருங்கி வந்துவிட்டது.

அதற்காக, ஆயிரமாயிரமாய்த் தம்முயிர் ஈந்த மாவீரர் கனவை நனவாக்கிடவும், உலகெங்கும் அகதியாய் அலைந்து வாழுகின்ற நம் தமிழர் மானத்துடன் தலைநிமிர்ந்து எங்களுடைய சொந்த மண்ணில் வாழ்வதற்காகவும், நானும் என்னை, எதிர் வரும் 'மகளிர் எழுச்சி நாள்' முதல், முழுமையாய் முழு நேரப் போராளியாய் மண் மீட்புப் போரிலே இணைத்துக் கொள்ளப் போகிறேன்.

இதுவரை நான் முழுநேரப் போராளியாவதற்கு இருந்த ஒரே தடை எனது வயது. அதுவும் அன்றுடன் தீர்வது உங்களுக்குப் புரியும்தானே. நீங்களும் அண்ணாவும் தாயகம் நீங்கி அகதியாகப் புகலிடம் நாடிப் பனிவிழும் தேசமொன்றுக்குச் சென்று ஏறத்தாழ எட்டாண்டுகள் ஆகி இருந்தாலும், இவ்வளவு நாளும் இங்கே நடந்த சம்பவங்கள், சண்டைகள், இடப்பெயர்வுகள், தாக்குதல்கள், மரணங்கள், வீரச்சாவுகள் எல்லாம் பள்ளி மாணவியாய் இருந்த என்னை எத்தனை தூரம் பாதித்து இருக்கும் என்று உங்களுக்கும் நன்றாக விளங்கும்தானே?

**என்னைப் பொறுத்தவரையில், வீட்டிற்கு ஒருவராவது காலமிட்ட கட்டளைப்படி போராடினால்தான் எமதுமண் விரைவில் மீட்கப் பட்டு, மாணவர் சுமுகமாகக் கற்கக்கூடிய நிலைமை நிரந்தரமாக்கப் படும்.**

அப்பா! இப்போதெல்லாம் எமது கிராமத்தவரில், அயல்வீடுகளில்,

வீட்டுக்கு இரண்டு, மூன்றென மாவீரரும் போராளிகளும் உள்ள குடும்பங்களும் உள்ள நிலையில், வீட்டுக்கு ஒரே பிள்ளையாய் இருந்தும் போராளியாகி உள்ளவர் மத்தியில், அண்ணா இங்கிருந்து செய்யாத பணியை, நானாவது நிறைவேற்றாமல் இருக்கலாமா? அப்படிச் செய்தால், இந்த மண் எம்மை மன்னிக்குமா?

இப்போதும் அம்மா, உங்களையும், அண்ணா அண்ணியையும் நிழற்படத்தில் மட்டும் பார்த்துள்ள தன் பேரப்பிள்ளைகளையும் எப்போ நேரில் பார்ப்போம் என்ற பெரும் ஆவலில் இருக்கிறா. எமக்கருகில் விளையாடித் திரியும் தன் பேரக் குழந்தைகளின் வயதுப் **பிஞ்சுப் பாலகர், எதிரியின் தாக்குதல்களில் கண்முன்னே கொல்லப்படும்போதும், காயப்பட்டு குருதி வெள்ளத்தில் மிதக்கும்போதும், அவ படும் பாட்டை எழுத்தில் விவரிக்க என்னால் முடியாது.**

அவளுக்கு நான் எது பற்றிச் சொன்னாலும் முன்பு விளங்குவ தில்லை. ஆனால், கடந்த சில நாட்களுக்கு முன் கொடியவன் **கோத்தபாய தன் படையினரை உற்சாகப்படுத்தும் வகையில் ஆற்றிய உரையில், 'இனிமேல் முல்லைத்தீவில் அகப்படும் பெண்கள் அனைவரும் படையினருக்கு விருந்தாகட்டும்; அங்கு அகப்படும் ஆண்களின் இரத்தத்தினால் இந்து சமுத்திரம் சிவப்பாகட்டும்' என்று கூறியது அவளுக்கு எல்லாவற்றையும் நன்கு தெளிவாக்கிவிட்டது.**

தரைப்புலி, கடற்புலி, வான்புலி, கரும்புலி என்று சிறப்புப் படையணிகளுடன் வளர்ந்து பெரு விருட்சமாகியுள்ள எமதியக்கம் தற்போது மக்கள் படை, எல்லைப்படை, மாணவர்படை என்றும் கிளை பரப்பி வியாபித்துள்ளது உங்களுக்கும் தெரியுமென நம்புகிறேன்.

**எனக்கும் மனச்சாட்சி இருக்குதானே! நானும் உணர்வுள்ள ஒரு சாதாரண மனிதப் பிறவிதானே? தன்மானமும் இனமானமும் காக்க வேண்டியது எனது கடமையும்தானே? தமிழீழ அன்னை மண் இதனைத்தானே எங்களிடம் எதிர்பார்க்கிறது?**

முதல் மாவீரன் சங்கர் அண்ணா, தியாக தீபம் திலீபன் அண்ணா, முதல் பெண்புலி மாலதி அக்கா, வான் கரும்புலிகள் ரூபன் அண்ணா, சிரித்திரன் அண்ணா உள்பட ஏறத்தாழ இருபத்து நான்காயிரம் மாவீரரும் ஆயிரமாயிரம் போராளிகளும், எமதருமை தேசியத் தலைவரும் இத்தனை இலட்சம் மக்களுக்கும் எதனை

எதிர்பார்த்து உள்ளார் களோ, அதனை நிறைவேற்றுவதும் எனது கடமை அல்லவா? மேலும் அப்பா, அண்ணா, மருமக்களுக்கு எனதன்பைத் தெரிவியுங்கோ. பேரப்பிள்ளைகளுக்கு தமிழை நன்கு கற்பியுங்கோ. அவர்களுக்கு எங்களுடைய வரலாற்றைச் சரியான முறையில் சொல்லிக் கொடுங்கோ. தேசப்பற்றோடு தமிழர்களாய்த் தமிழ் உணர்வுள்ளவர்களாய் வீரமும் மானமும் உள்ள மனிதர் களாய்த் தொப்பூழ்க்கொடி உறவுகளை மறவாதவர்களாய் வளரச் செய்யுங்கோ.

வேறென்ன அப்பா?

இதை எழுதத் தொடங்கும் நேரத்தில்தான் வான்புலிகளின் முதற் கரும்புலித் தாக்குதல் வெற்றிச் செய்தி புலிகளின் குரலினூடாக என் காதுகளில் வந்து வீழ்ந்தது. இப்போது எமக்கு அண்மையிலுள்ள மைதானத்தில் அந்தக் கரும்புலிகள் இருவரது நினைவாகவும் வேறு சில மாவீரர் நினைவாகவும் வீர வணக்க நிகழ்வு தொடங்கி விட்டது. இந்த மண் எங்களின் சொந்தமண் என்ற பாட்டுக் கேட்கிறது.

அம்மா உள்பட எல்லோரும் புறப்பட்டு விட்டார்கள். முடிந்தால், மீண்டும் இன்னுமொரு மடலில் சந்திப்போம்.

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

இப்படிக்கு,
**என்றும் உங்கள் அன்பு மறவாது**
**தேசம் விடுதலை காண உழைக்கின்ற**
**அன்பு மகள்**
**தேவகி**

*(நன்றி-- வை. கதிரவன் குமுதம் ரிப்போர்ட்டர் 5.03.2009)*

❖ ❖ ❖

## புலிகளே மக்கள்! மக்களே புலிகள்!

*(ஜனவரி 30- காந்தி மறைந்த நாள். சாதாரணமாய் ஒரு துணி கொண்டு மறைப்பதுபோல் அந்தத் துக்க தினத்தை மூடிவைத்துவிட்டு, தமிழ்ச் சமுதாயத்தைத் தன் இறப்பின் பின்னால் அணிதிரளச் செய்தது முத்துக்குமாரின் கடிதம். ஈழ விடுதலைப் போருக்கு எதிராய் சர்வதேச சமூகம் செய்த துரோகங்களை அம்பலப்படுத்தியது ஐ.நா.மன்றத்தின் முன் தீக்குளித்த முருகதாசன் கடிதம். ஈழத்தில் நேற்று நடந்ததையும் இன்று நடப்பதையும் நெஞ்சு பதைக்கச் செய்யும் காட்சிகளை நம் முன் விரிக்கிறது கனடாவிலிருந்து ஒரு தமிழ்ச்சகோதரி ஆனந்த விகடனுக்கு எழுதிய இக்கடிதம்.)*

என் அபிமான விகடனுக்கு,

எனது பெயர்..........யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ... தற்போது கனடாவில் ...............வசித்து வருகிறேன்: விகடன் எனக்குக் கிட்டத்தட்ட 20 வருடத் தோழன்.

எப்போது விகடனை எடுத்தாலும், ஒரே மூச்சில் வாசித்து முடிப்பது என் வழக்கம். ஆனால் இப்போது என்னால் அப்படி வாசிக்க முடிவதில்லை. ஈழப்போரைப் பற்றிய, எங்கள் வேதனைகள் பற்றிய கட்டுரைகளைப் படிக்கும்போதெல்லாம் துக்கத்தில் மூச்சு முட்டுகிறது. ஈழப் பிரச்சினைகளை உலகுக்கு எடுத்தியம்புவதில் விகடனின் பங்கு காத்திரமானது.

கடந்த 04.03.2009 இதழில் வெளியான "*யுத்தம் யாரை விட்டது?*" என்ற தலைப்பிலான த. அகிலனின் "மரணத்தின் வாசனை" பற்றிய அறிமுகம் எனது தூக்கத்தை அடியோடு தொலைத்துவிட்டது. அது பற்றிய எனது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளவே இந்தக் கடிதத்தை எழுதியுள்ளேன்.

இதைப் பிரசுரித்தாலும் விட்டாலும் எனது பெயர், முகவரியை மட்டும் எக்காரணம் கொண்டும் வெளியில் விடாதீர்கள். இது யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் வாழும் பெற்றோரையும், என் அண்ணனின் குடும்பத்தையும் அவலத்துக்கு உள்ளாக்கும் என்று அஞ்சுகிறேன்.

அகிலனுக்குப் புலம்பெயர் மண்ணிலிருந்து ஒரு கடிதம்...

இழப்புகள் தந்த வலியினால் வார்த்தைகள் வறண்டுபோய் மூடி வைத்துவிட்ட பேனாவை மறுபடியும் எடுக்கின்றேன். உனது '*மரணத்தின் வாசனை*' நூலைப் பற்றி விகடனில் வெளிவந்த கட்டுரைக்காக. என்னை மன்னித்துக்கொள்... உனது நூலை

முழுமையாகப் படிக்கக் கிடைக்காமலே, இதை எழுத நேர்ந்ததற்கு. எனினும் அதன் உணர்வுபூர்வமான வலிகளை விகடன் எடுத்துக் காட்டியிருந்தது.

ஈழத்தில் தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவருக்குமே இழப்புக்குப் பஞ்சம் இல்லை. இதில் உனது இழப்பு சிறிது, எனது இழப்பு பெரிது என்று அடிபட்டுக் கொள்ள முடியாது. இதில் புலம் பெயர்ந்த மக்களும் அடக்கம். உனது வேதனை வரிகளை விமர்சிக்க முடியாது. ஆனாலும்கூட ஒரு சில நெருடல்கள் என் மனதைத் துண்டுகளாக உடைத்துத் தூங்கவிடாமல் பண்ணியது.

ஐந்து வேளையும் இணையதளத்தில் செத்தவர்களின் பெயர்ப் பட்டியல் பார்ப்பது நீ மட்டுமல்ல. வன்னி மண்ணில் இருக்கும் தங்கள் பெற்றோரை, சகோதர-சகோதரிகளை, உறவுகளை எண்ணி உணவு இறங்காமல் நடைப்பிணமானவர்கள் இங்கும் இருக் கிறார்கள்.

உன் அம்மம்மாவை சைக்கிளில் ஏற்றிக்கொண்டு, உன் பதின் பருவத்துக் கடைசி வயதுகளில், பொடியன் மறுபடி பிடித்த ஆனையிறவில் உன் வீடு பார்க்க நீ போன தருணத்தில், ராணுவக் காலனிகள் சூழ்ந்த யாழ் பல்கலைக்கழக விடுதிக்குள் நான் விம்மலையும் வேதனைகளையும் தொண்டைக்குழிக்குள் தேக்கி வைத்துக் கொண்டு சுருண்டு படுத்திருந்தேன். தன் பதின் கடைசி வயதுகளில் போராளியாகிய என் தம்பி, அதே ஆனையிறவுச் சமரில் படுகாயமடைந்து மரணப்படுக்கையில் கிடப்பதாக, என் அம்மா முல்லைத் தீவிலிருந்து செய்தி அனுப்பியிருந்தார். அதே ஆனை யிறவுத் தளத்தின் வெற்றி விழாவில் மக்கள் கலந்து மகிழும்போது, நீ சொன்ன கிரிக்கெட் ஸ்கோரின்படி 400 வீடுகளில் பிள்ளைகளை இழந்திருக்கிறார்கள் (என் தம்பி பிழைத்துக் கொண்டான்).

எங்கள் மக்களின் துயரங்களை வெளியில் கொண்டுவரும் உன் படைப்பு உன்னதமானதுதான். அப்பாவிப் பொதுமக்களையும் பச்சிளம் பாலகர்களையும் படுகொலை செய்யும் போர் எனும் அரக்கனின் பிடியில், எங்கள் மக்கள் மரணத்தின் முன் மண்டியிட்டுக் கிடக்கிறார்கள் என்பதை வெளி உலகம் கண்டும் காணாமல் இருக்கும். உண்மைதான் சகோதரா. ஆனாலும் கூட பொதுமக்கள் - போராளிகள் என்று வெளி உலகம் பிரித்துப் பார்ப்பதைப் போலவா நீயும் பார்க்கிறாய்?

உன்னை நேசித்த காயத்திரி தன் மண்ணை நேசித்து நஞ்சுமாலை சூடிக்கொண்டது கூட அவளின் வீரச்சாவின் பின்னர்தான் உனக்குத்

தெரிய வந்ததா சகோதரனே? துவக்குப் பிடித்தவன் மரணத்தை நிச்சயித்துக் கொண்டவன். யுத்த முனையில் களமாடுபவனின் உயிர் என்பதும் துப்பாக்கிக் குண்டுபோல ஓர் ஆயுதமே என்ற இரட்டை வரிகளில் அந்நியப்படுத்திவிட்டாயே? அவர்கள் என்ன பிறக்கும் போதே தாய், தந்தை, குடும்பம் ஏதும் இல்லாமல் கழுத்தில் குப்பியும் கையில் குண்டுமாகப் பிறந்தார்களா?

மருத்துவப் பீடத்துக்குத் தெரிவாக வேண்டும் என்ற கனவுடன் படித்தவன் என் கடைசித் தம்பி. தனது எதிர்காலப் படிப்புக்கு உறு துணையாக இருக்கும் என்பதற்காகவே பள்ளியில் செயின்ட் ஜோன்ஸ் ஆம்புலன்ஸ் முதலுதவிப் படையில் சேர்ந்து கொண்டவன். அதே முதலுதவிப்படை, அவனை மனிப்பாயில் ராணுவம் நிகழ்த்திய 'முன்னேறிப் பாய்ச்சல்' நடவடிக்கையில் காயம் அடைந்த பொதுமக்களை மீட்கும் பணியில் ஈடுபடுத்தியது. வீட்டிற்குத் திரும்ப வந்தவன், எத்தனை பிணங்களைத் தூக்கினேன் தெரியுமா? கையைக் கழுவக் கழுவ ரத்தம் ஒட்டியிருக்கிறது என்று அரற்றிக் கொண்டு இருந்தான். அடுத்த மாதமே வீட்டைவிட்டுப் போய் விட்டான். நீ சொன்னபடி துவக்கு தூக்கிக்கொண்டு மரணத்தை நிச்சயித்துக் கொண்டான். தனது பிள்ளைகளின் கல்வி, எதிர்காலம் என்று கனவு கண்ட என் பெற்றோர், கடைசிப் பிள்ளை கனவைக் கலைத்தாலும், மற்றைய மூவரும் ஈடு செய்வார்கள் என்றிருந் தார்கள். அவர்களது கனவைத் திரும்பச் சிதறடித்துவிட்டு, 95 ல் யாழ் மண்ணில் இருந்து இடம்பெயர்ந்தபோது, எனது அடுத்த தம்பியும் தன் தம்பியின் தடம் ஒற்றிப் போய்விட்டான்.

இவர்கள் மரணத்தை நிச்சயித்துக் கொண்டார்கள் என்று நாங்கள் தண்ணீர் தெளித்து விடவில்லை சகோதரா! அவர்கள் கள முனையில் நிற்கும் ஒவ்வொரு கணமும் நாங்கள் செத்துப் பிழைக்கும் வாழ்வை வாழ்பவர்கள். பாம்பு கடித்து இறந்தாலும், பாலியல் வல்லுறவுக்கு உட்பட்டு இறந்தாலும், களத்தில் வீரமரணம் என்றாலும், இழப்பு வலி தரும் உணர்வுகள் மட்டுமே வெவ்வேறானவை. என் கடைசித் தம்பியின் வீரமரணச் செய்தி கேட்டுக் கதறித் துடித்தபோது, கட்டிப் பிடித்து அழுவதற்கு அவன் உடல்கூடக் கிடைக்கவில்லை. சட்டம் இடப்பட்ட புகைப்படமே மிச்சம் இருந்தது எங்களுக்கு.

இவர்கள் வலுக்கட்டாயமாகப் போரில் நுழையும் சண்டியர்கள் அல்ல; காலம் காலமாகப் போர் எங்களில் திணிக்கப்பட்டது. இயக்கத்துக்காரியான உனது மச்சாளின் பேச்சு குறைந்திருந்தது என்று எழுதி இருந்தாய். தயவு செய்து இப்படி எழுதுவதன் மூலம் அவர்களை இரும்பு மனிதர்கள் என்று உலகுக்குப் படம் பிடித்துக்

காட்டிவிடாதே! அவர்கள் அன்பானவர்கள்; கலகலப்பானவர்கள். அடுத்தவன் அழிவைப்பார்த்தே, 'ஐயையோ' என்று பதறி ஆயுதம் எடுத்தவர்கள். யார் அழிந்தாலும் எனது வாழ்வு, எனது படிப்பு, எனது உயிர் முக்கியம் என்று கடக்க முடியாதவர்கள் அல்ல.

இணையதளத்தில் செத்தவர்களின் பெயர்களைப் பார்த்துக் கொண்டு இருப்பதாக எழுதி இருந்தாய். கனடாவில் இருந்து நானும் அதையே செய்கிறேன் சகோதரா! சிறிய வித்தியாசம். நெஞ்சுக் குழிக்குள் ரயில்கள் தடதடக்க, மாவீரர் பட்டியலில் அடுத்த தம்பியின் பெயர் உள்ளதா என்று பார்க்கும் கணப் பொழுதுகளும் மிகக் கொடுமை யானவை. அதில் அவன் பெயர் வரவில்லை என்று உணர்ந்து வரும் அந்தச் சிறு நிம்மதியை, அதில் உள்ள மற்ற பெயர்கள் எல்லாமே என் சகோதர சகோதரிகளாக மாறி அடித்துச் செல்ல, எஞ்சி நிற்கும் வெறுமை ஆளையே கொல்லும்.

பொதுமக்கள் இறந்தாலோ, காயப்பட்டாலோ, பெயர் விவரம் எங்களை உடனே வந்து சேரும். போராளிகள் இறந்தால்கூட, தாமதமாக என்றாலும், பட்டியல் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். ஆனால், காயம் அடைந்து விழுந்துகிடக்கும் போராளிகளின் பெயர் எந்தப் பட்டியலிலும் வராது சகோதரா!

எங்கள் போராளிகள் வெற்றிபெறும் போதெல்லாம் முழு நீள ஆக்ஷன் திரைப்படம் பார்ப்பதுபோல், நீ சொன்னதுபோல்... கனவுகளைத் தின்னும் கற்பனைக்குதிரைகளில் தொலைவுகளைக் கடந்துவிட்டு, இப்போது கிளைமாக்ஸ் பிடித்தபடி அமையாத போது... இது சரிப்பட்டு வராது, என் உறவுகள் என்னுடன் இருந்தால் போதும் என்று வாழ்பவர்கள்- புலம் பெயர் மண்ணிலும் வாழ் கிறார்கள்; வன்னி மண்ணிலும் வாழ்கிறார்கள்.

அது போலவே, சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கட்டாயத்தினால், போராட்டத்தில் இருந்தும் நாட்டில் இருந்தும் வெளியேறி விட்டு, கடல் கடந்து, கண்டம் கடந்து ஈழம் போய்ச் சேர மாட்டோமா? என்று மனம் குமுறுபவர்கள் புலம்பெயர் நாடுகளிலும் இருக் கிறார்கள் ஆயிரக்கணக்கில். அதன் வடிவாகத்தான் லட்சங்களைக் கொட்டி வெளிநாடு வந்த முருகதாசன் ஐ.நா. வாசலில் தீயூட்டிச் செத்துப் போனான்.

எங்களை விட்டுவிடு. புலம் பெயர்ந்து வந்தாலும் எங்கள் வாழ்வுகள் ஈழத்தில் புதையுண்டு கிடக்கின்றன. ஈழத்தில் எம் மக்கள், கொத்துக் கொத்தாகச் செத்துமடிவதைக் கண்டு மனம் வெதும்பித் தன்னைத் தீயிட்டு, இந்த அவலத்தை உலகறிய வைத்தானே முத்துக்குமார், அவன் எந்த கிளைமாக்ஸை எதிர்பார்த்திருந்தான்? அவனைத்

தொடர்ந்து எத்தனை பேர்? இவர்களின் குடும்பங்களையும் எமது நாட்டின் போர் முத்தமிட்டுச் சென்றுள்ளதே! இவர்களின் இழப்புக்கு எதனை ஈடுவைக்கப் போகிறோம் நாம்?

தான் இறந்தாலும் பரவாயில்லை, என் மக்கள் வாழ வேண்டும் என்று கரும்புலியாய் செல்லும் எங்கள் வீரனின் தியாகத்துக்கும், தான் இறந்தாலும் பரவாயில்லை, ஈழத் தமிழன் வாழவேண்டும் என்று தன்னை அழித்த முத்துக்குமாரின் தியாகத்துக்கும் வித்தியாசம் தெரியவில்லை எனக்கு "எங்கள் இனிய உறவுகளே, எங்கள் மக்கள் அழிந்துகொண்டு இருப்பதைப் பார்த்து அதற்கு எதிராக எழுந்து நிற்பதற்கு நாங்கள் தலைவணங்குகிறோம். ஆனாலும், மேலும் **மேலும் முத்துக்குமாரைப் பின்பற்றுபவர்களைப் பார்த்துக் கை தொழுது கேட்கின்றோம். சாவில் எழுதிய ஜாதகங்கள் எங்களுடையதாக இருக்கட்டும். மரணத்தின் வாசனை உங்கள் வாசலுக்கும் வருவதைப் பார்த்திருக்க எங்களால் முடியவில்லை. எங்கள் வரலாறு ரத்தத்தால் வரையப்படுகிறது. அதற்குத் தீச்சுவாலைகளால் சட்டம் இடாதீர்கள் என்று கேட்கத் தோன்றுகிறது.**

**உதிரியாகத் தீக்குளித்துச் சாவதை விடுத்து ஒன்றுபடுங்கள் மக்களே!** ஈழத்தமிழனைக் காக்க என்று தினம்தோறும் புதிதுபுதிதாக அமைப்புகள் தொடங்குகிறார்கள் அரசியல்வாதிகள். **எதற்கு இத்தனை அமைப்புகள்? மக்களே, உங்கள் போராட்டம் தவறான பாதையில் போக விடாதீர்கள். உங்களுக்குப் பின்னால் அத்தனை கட்சிகளையும் அணி திரட்டுங்கள் என்று வேண்டுகிறேன் நான் - தமிழகத்து உறவுகளை!**

புலம் பெயர் நாடுகளில், பயங்கரவாதம் என்று தடை செய்யப்பட்ட அமைப்பு பற்றிக் கதைக்காமல், உங்கள் கவன ஈர்ப்பை நடத்துங்கள் என்றார்கள். நாங்களும் செவிசாய்த்தோம். எங்கள் போராட்ட உணர்வை, தமிழீழ உணர்வை ஒதுக்கி வைத்து, மக்கள் அழிவதை மட்டும் எடுத்துக் காட்டினோம். அவர்களோ, மக்களை வெளியேற்றி ராணுவத்திடம் கொடுத்துவிட்டு, இனி புலிகளை அழியுங்கள் என்று சொல்ல ஆசைப்பட்டார்கள். நாங்கள் விழித்துக் கொண்டோம். இப்போது 'புலிகள்தான் மக்கள், மக்கள்தான் புலிகள்' என்ற போராட்டத்தை அங்கீகரி என்றே போராடுகிறோம். உன் எழுத்துக்களும் இதையே செய்யட்டும், சகோதரா! அவர்களின்றி நாங்கள் இல்லை. நாங்கள் இன்றி அவர்கள் இல்லை. இதை உலகுக்கு உணர்த்து!

*(நன்றி --ஆனந்தவிகடன் 01.04.2009)*

❖ ❖ ❖

## முத்துக்குமார் வைத்த தீ

## ஐ.நா. வாசலில் பரவுகிறது

-விமானத் தாக்குதல் நடத்தி

பலியான **ரூபன்** கடிதம்

*கொழும்பில் தற்கொலை விமானத்தாக்குதல் நடத்திப் பலியான விடுதலைப் புலிகளின் வீரர் கேணல் ரூபன் தாக்குதலுக்கு புறப்படுவதற்கு முன்பு ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். 10 பக்கம் கொண்ட அந்தக்கடிதம் கடந்த 15-ம் தேதி எழுதப்பட்டுள்ளது. கடிதத்தில் பல்வேறு உருக்கமான தகவல்களைக் குறிப்பிட்டுள்ளார்.*

**கடிதம் வருமாறு:-**

எனது அன்பிற்குரிய மக்களே மற்றும் புலம்பெயர் மக்களே!

மாவீரர்களாகப் போகின்ற நாங்கள் உங்களுக்குத் தலைவணங்கு கின்றோம். நீங்கள் எழுச்சி கொண்டு உங்களது உறவுகளாகிய எமது மக்களின் அழிவைக்கண்டு நடத்தும் போராட்டங்களைக் கேட்டு மகிழ்ச்சியும் தன்னம்பிக்கையும் அடைகின்றார்கள்.

மாவீரன் முத்துக்குமார் இட்ட தீ இன்று ஐ.நா.வாசலில் கூட பரவி யிருக்கின்றது. இப்பொழுதுதான் தமிழரின் பிரச்சினை உலகத்தின் காதுகளில் விழத் தொடங்கியுள்ளது. எனவே எமது தமிழினத்தின் விடிவிற்கு நீங்கள் செய்யும் தொடர்ச்சியான போராட்டம் பலம் சேர்க்கும். தமிழகத்தில் இருக்கும் அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து போராட வேண்டும். அப்போதுதான் மத்திய அரசின், உலகத்தின் ஐ.நா.வின் காதுகளில் விழும்.

மனம் தளராதீர்கள். தொடர்ச்சியாகப் போராடுங்கள். தமிழ் மக்களிற்கு விடிவு வரும்.

நீங்கள் செய்த உதவிகளால்தான் எமது போராட்டம் வளர்ச்சியடைந்து நின்றது. அதனைத் தொடர்ச்சியாகச் செய்யுங்கள். விடுதலைப்புலிகள் வேறு மக்கள் வேறல்ல. இது மக்கள் போராட்டம் என்று உலகத்திற்கு எடுத்துக்கூறுங்கள். தினம் தினம் உங்களது உறவுகள் இங்கே கொல்லப்படுகின்றார்கள். அதிலும் கொடுமை இறந்தவரைக்கூட எடுத்து அடக்கம் செய்ய முடியவில்லை.

மருந்தில்லை, உணவில்லை, உடையில்லை, உறையுளில்லை. எவ்வளவு கொடுமைகளை சிங்கள ராணுவம், அரசு செய்கின்றது. தமிழரை வவுனியா திறந்த சிறைச்சாலைக்கு வரவழைத்து தமிழினத்தை அழித்து சிங்கள இனத்தை உருவாக்கப் போகின்றது.

வன்னியிலே இருந்து உலக நிறுவனங்களையும் கடைசியாக செஞ்சிலுவைச் சங்கத்தையும் வெளியேற்றி எமது மக்களின் அவலம் வெளியே தெரியாவண்ணம் மூடிமறைக்க முயல்கின்றது.

விரைவிலே எமது மக்களுக்குக் கொடிய நோய்கள் பரவப் போகின்றது. இவற்றை நீங்கள் உலகத்திற்குத் தொடர்ச்சியாகப் போராடி எடுத்துக் கூறுங்கள். கேளுங்கள் தரப்படும்; இல்லாவிட்டால் தட்டுங்கள் திறக்கப்படும்.

உலகத்தில் வாழ்ந்த யூத இன மக்கள் எல்லோரும் சேர்ந்து தங்களுக்கென்று இஸ்ரவேல் என்றொரு நாட்டை உருவாக்கியதுபோல நீங்கள் எல்லோரும் சேர்ந்து தமிழீழத்தை அமைக்க உருவாக்கத் தயாராகுங்கள்.

எமது மாவீரர்களின் கனவை நனவாக்குங்கள்.

**வன்னி மக்களுக்கு...**

அன்புள்ள தமிழீழ மக்களே குறிப்பாக வன்னியில் வாழும் மக்களே,

நீங்கள் அனுபவிக்கும் கொடும் வலி கண்டு எனது மனம் குமுறுகிறது, கலங்குகின்றது. எமது மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் என்றுதான் எமது தேசியத் தலைவர் பிரபாகரன் போராட்டத்தைத் தொடங்கினார். அவ்வேளை நீங்கள்தான் அவருக்கு உத்வேகம் கொடுத்து ஆதரித்துப் போராட்டத்திற்கு வலுச் சேர்த்தீர்கள். உங்கள் பிள்ளைகளை போராட்டத்தில் இணைத்து எமது அமைப்பை வளரச் செய்தீர்கள். நாம் காலங்காலமாக வாழ்ந்த மண்ணில் சுதந்திரமாக வாழத்தான் ஆசைப் பட்டோம். அது தவறா?

உலகத்தில் வாழும் மக்களில் எமது தமிழ் இன மக்கள் உயிர் உயிரில்லையா? எவ்வளவோ நாடுகள் சுதந்தரம் அடைந்ததற்குக் காரணமாக இருந்த உலக நாடுகள், எமது தமிழினத்தை மட்டும் சிங்கள தேசம் அழிக்க விட்டு வேடிக்கை பார்ப்பதன் காரணம்தான் எனக்குப் புரியவில்லை.

எமக்காகத் தமிழகத்தில் இருக்கும் மக்களும், புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் இருக்கும் மக்களும் உங்களின் விடிவிற்காக தீக்குளிப்புகளும், பலவகையான அகிம்சைப் போராட்டங்களையும் நடத்தி வருவது உங்களுக்குத் தெரிந்ததே. அவர்களால் வெளியே இருந்து செய்யக்கூடியதைச் செய்கிறார்கள்.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் உங்களைப் போராட்டத்தில் இணைத்து, உங்கள் விடிவிற்கான இறுதிப்போரில் போராட வேண்டும். தேசியத் தலைவரின் கைகளைப் பலப்படுத்த வேண்டும்.

எதிரியானவன் பல்வேறு சூழ்ச்சிகள் செய்து அதாவது, படிப்படியாக உங்களை உங்களது இடங்களில் இருந்து இடம் பெயர வைத்து உணவுத்தடை, மருந்து தடை போட்டு உங்களின் மேல் குண்டுமழை பொழிந்து, தினம் சாவுக்குள் வாழவைத்து, பாதுகாப்பு வலயம் என அறிவித்து அதற்குள் உங்களை விட்டு குண்டு மழை பொழிந்து உங்கள் உறவுகளைக் கொன்று உங்களைத் தனது திறந்த சிறைச் சாலைக்கு வரச் செய்கின்றான். ஏன் தெரியுமா?

யூத இனத்தை ஹிட்லர் பலவகை முகாம்களை அமைத்து யூத இனத்தை அழித்தது போல், மகிந்தவும் உங்களை அழிக்கப் போகின்றார். அது தெரியாமல் நீங்கள் அதற்குள் அகப்படக்கூடாது. **கோத்தபாய ராணுவத்திற்குக் கூறியிருப்பது தெரியுமா? தமிழரில் பெண்கள் உங்களுக்கு, ஆண்கள் கடலிற்கு என்று. அதனடிப்படையில் இங்கிருந்த எத்தனை பெண்கள் கற்பழிக் கப்பட்டு, ராணுவ மருத்துவமனைகளில் ராணுவத்தைப் பராமரிப்பதற்கு விடப்பட்டுள்ளார்கள் என்று தெரியுமா? இதைவிட எவ்வளவோ கொடும் செயல்கள் வெளியே தெரியா வண்ணம் உள்ளது.**

அன்புக்குரிய மக்களே,

எமக்கு இந்த இழிவுநிலை தேவையா? நிச்சயமாக இதை நீங்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள். ஏனென்றால் அதற்காகத்தான் நீங்கள் போராடி வருகின்றீர்கள்.

அதற்காக 24 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்களை அர்ப்பணித் திருக்கின்றீர்கள். இவர்கள் யார்? போராளிகளாகப் பிறந்தவர்களா? இல்லை. காலம்தான் போராளிகளாக்கியது. போராளிகள் பிறப்ப தில்லை அவர்கள் உருவாக்கப்படுகின்றார்கள். யார் உருவாக்கியது.

சிங்கள தேசம் எமக்குரியதைத் தந்திருந்தால் எமது தேசியத் தலைவர் ஆயுதமேந்த தேவை ஏற்பட்டிருக்காது. நாம் விரும்பியோ விரும்பாமலோ எம்மை போராட சிங்கள தேசம் பணித்துவிட்டது. 30 வருடங்களாகப் போராடி, உங்களது இறுதி லட்சியமாம் தமிழீழத்தை அடையும் நேரம் வந்திருக்கும் வேளை நீங்கள் போராட்டத்தை விடப்போகின்றீர்களா? உங்கள் விடிவிற்காக நீங்கள்தான் போராட வேண்டும்.

நீங்கள் போராடாவிட்டால் உங்களுக்காக யார் போராடுவது? (If we don't fight for our freedom, who else will?)வன்னியில் இருக்கும் 2,50,000 பேரில் 50,000 பேர் போராட வலுவில்லாமலா இருக்கிறீர்கள்? சிந்தித்துப் பாருங்கள். 50,000 இளைஞர் யுவதிகள் போராட்டத்தில் இணைந்து போராடினால் சிங்கள ராணுவம் வந்த இடம் தெரியாமல் பறந்திடும்.

அன்புக்குரிய தம்பி, தங்கை, அக்கா, அண்ணா உறவுகளே!

போராட்டத்திற்கு வயதெல்லை கிடையாது.வயது பார்த்தா ராணுவம் உங்களைக் கொல்கிறது. 1990-ம் ஆண்டு 14 வயதில் நான் போராடப்புறப்பட்டேன். காரணம் இடப்பெயர்வு; பாடசாலை இல்லை. நாம் நிம்மதியாக வாழ எமக்கென்று ஒரு தேசம் வேண்டுமென்பதால் நீங்களும் அதேபோல்தான் நினைப்பீர்கள்.

சிங்கள ராணுவம் ஏற்படுத்திய வலி காணாதா? இன்னும் வலியை ஏற்படுத்தினால்தான் நீங்கள் போராடுவீர்களா?

அன்புக்குரிய மக்களே!

எமது தேசியத் தலைவர் காலத்தில் நீங்கள் சுதந்திரம் அடையா விட்டால், ஒரு காலமும் நீங்கள் சுதந்திரமாக வாழ மாட்டீர்கள் என்பதைத்தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழீழத் தேசியத் தலைவர் கூறியது போல ஒரு விடுதலை இயக்கம் தனித்து நின்று போராடி விடுதலையை வென்றெடுத்ததாக வரலாறு இல்லை. '**ஒரு விடுதலை இயக்கத்தின் பின்னால் மக்கள் சக்தி அணிதிரண்டு எழுச்சி கொள்ளும் பொழுதுதான் அது மக்கள் போராட்டமாக முழுமையும் முதிர்ச்சியும் பெறுகின்றது. அப் பொழுது தான் விடுதலையும் சாத்தியமாகின்றது.**'

கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும். கேட்டோம், தந்தார்களா? இல்லை. என்ன தந்தார்கள்னி தாங்கொணா வலியைத் தந்தார்கள். அதன் பின்னர் என்ன செய்ய வேண்டும்னி தட்டுங்கள், நிச்சயமாகத் திறக்கப்படும்.

எல்லோரும் சேர்ந்து ஆயுதம் ஏந்தி விசைவில்லைத் தட்டுங்கள், நிச்சயமாக சுதந்திரம் கிடைக்கும். தமிழர்க்கு இருந்த போர்க்குணம் குன்றி விட்டதா? இல்லை... அதை நீங்கள் இன்னும் வெளிக் காட்ட வில்லை. அந்தத் தருணம் வந்துவிட்டது. நான் யார்? நாங்கள் யார்? உங்களது பிள்ளைகள். நீங்கள் வளர்த்து விட்டவர்கள். நாங்கள் வெளிநாடுகளில் இருந்து வந்து போராடவில்லை.

என் அன்புக்குரிய தாய்மாரே! தந்தைமாரே!

எனது குடும்பத்தில் ஒரு மாவீரர் எனது குடும்பத்தில் இரு மாவீரர் எனப்பார்க்காதீர்கள். போராட வலுவுள்ள உங்களது பிள்ளைகளை நீங்கள்தான் அனுப்பி வைக்க வேண்டும். அப்போதுதான் இளம் சந்ததிக்குச் சுதந்திரமான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கலாம்.

எமக்கென்று ஒரு தேசிய ராணுவத்தைக்கட்டி எழுப்புங்கள். இந்தப் பூமிப்பந்திலே இருப்பை, பலம்தான் தீர்மானிக்கின்றது.

வலிந்தவன் பிழைப்பான் என்ற தத்துவத்திற்கேற்ப எல்லோரும் சேர்ந்து தேசியத் தலைவரின் கையைப் பலப்படுத்துங்கள். எம்மிடம் தேவையான ஆயுதம் உள்ளது. மிகுதி எதிரியிடம் உள்ளது. எமக்குத் தேவையானது எல்லாம் ஆளணி ஒன்றுதான்.

பல மடங்கு கொண்ட ஆளணியையும் உலக நாடுகள் வழங்கும் ராணுவ தளவாடங்களையும் கொண்டுள்ள சிங்கள ராணுவத்திற்கு எதிராக குறைந்த ஆளணியை வைத்து இரண்டு வருடத்திற்கு மேலாக நாம் போராடுகின்றோம் என்றால் யாருக்கு வெற்றி... நீங்கள் நினைத்துப் பார்த்தீர்களா?

**நாங்கள் அழிவதுபோல் சிங்கள தேசமும் அழிந்து கொண்டுதான் இருக்கின்றது பொருளாதாரத்தில். இந்தத் தருணம் நீங்கள் திரண்டெழுந்து ஓங்கி ஒரு அடி அடித்தால் எழும்ப முடியாமல் சிங்களம் நொறுங்கும்.**

அன்புக்குரிய இளைஞர்களே! யுவதிகளே!

உங்களிற்கு உங்களது பெற்றோரைப் பார்க்கும் பொறுப்பு இருக்கிறது என்பது தெரியும். தாய்- தந்தையரை காப்பாற்ற

வேண்டும் என்றால் தாய்நாட்டை காப்பாற்றினால்தான் முடியும். இது கற்பனையல்ல. இதுதான் நிஜம். நாம் எவ்வளவு காலம் சாவிற்குள் வாழ்வது? தினம் தினம் செய்தியில் சிங்கள ராணுவத்தின் எறிகணை வீச்சில், வான் தாக்குதலில் இத்தனை பேர் படுகொலை செய்யப்பட்டு காயப் பட்டுள்ளனர் என்பதைத்தான் கேட்கின்றோம், பார்க்கின்றோம்.

இவர்களில் அரைவாசிப்பேர் போராட வலுவுள்ளவர்களாகத்தான் இருக்கின்றார்கள். அந்த வயதில் இவர்கள் ஏன் அநியாயமாகச் சாக வேண்டும். செத்தவர்கள் வீதியோரங்களிலும் காணிகளிலும் புதைக்கப்படுகின்றார்கள். ஏன் இந்த அவலம்? இவர்கள் எல்லாம் எமது அமைப்பில் இணைந்து ஆயுதம் ஏந்தி ராணுவத்தைக் கொன்று வீரச்சாவு அடைந்தால் தமிழன் வீரத்தோடு வாழ்ந்தான் அல்லது வீரத்தோடு மடிந்தான் என்று வரலாறு சொல்லும்.

அன்புக்குரிய மக்களே!

சுதந்திரத்திற்கான காலம் கனிந்து கொண்டிருக்கின்றது. வெண்ணை திரண்டு வரும்போது பானையைப் போட்டு உடைத்து விடாதீர்கள். ஒவ்வொருவரும் தன்னம்பிக்கையாக இருங்கள். உங்களது இன்னல்கள், வலியைக் கண்டுதான் தலைவர் போராட்டத்தைத் துவங்கினார். உங்களிற்கு ஏற்படும் வலியைக் கண்டு அவரது மனம் அப்பொழுதிலிருந்து இப்பொழுதுவரை குமுறிக் கொண்டுதான் இருக்கிறது. அதில் எள்ளளவும் குறைவில்லை. நாங்கள் (மாவீரர்கள்) திரும்பத்திரும்ப உங்களிடம் கேட்பது எல்லாம் தலைவரைப் பாதுகாத்திடுங்கள். அவரின் கையைப் பலப்படுத்துங்கள். உங்கள் பிள்ளைகளைப் போராடவிடுங்கள். தலைவர் நிச்சயமாக உங்களுக்கு சுதந்திரம் பெற்றுத்தருவார்.

**எமக்கும் சிங்கள ராணுவத்திற்கும்தான் யுத்தம். சிங்கள மக்களுக்கல்ல. ஆனால் ராணுவமோ எமது மக்களைக் குண்டு வீசிக்கொல்கின்றது. எமக்கும் சிங்கள மக்களைக் கொல்ல முடியும். சிங்கள மக்கள் இதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.**

ஆனால், நாம் அப்படிச் செய்யவில்லை. நாம் தலைவரை சந்தித்து குண்டு போடப்போகும் பொழுது திரும்பத் திரும்ப வலியுறுத்துவது மக்கள் மீதோ, மருத்துவமனைகள் மீதோ தவறியும் குண்டு போடாதீர்கள் என்று. ஆனால் சிங்கள வான் கழுகுகள் எமது மக்களையும் மருத்துவமனைகளையும் தேடித்தேடி குண்டு போடுகின்றது.

நாம் சிங்களதேச மக்களுக்கு ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகின்றோம். தமிழினத்தை அழித்துவிட்டு நீங்கள் நிம்மதியாக வாழலாம் என்று கனவு காணாதீர்கள். எமது தலைவிதியை நாமே தீர்மானித்து, உங்களுடன் ஒற்றுமையாக வாழத்தான் நாங்கள் விரும்புகின்றோம். இதைத்தான் நாங்கள் திரும்பத்திரும்ப வலியுறுத்தி வருகின்றோம். நாம் எமது மண்ணில் சுதந்திரமாக வாழத்தான் ஆசைப்படுகின்றோம்.

நாம் சிங்கத்தின் குகைக்குள்ளே வெடி சுமந்து போகின்றோம். நாம் யார், தமிழன் யார் எனக் காட்டுவோம். நான் எப்பொழுதும் அநியாயமாகச் சாவதை விரும்பியதில்லை. அந்த வகையில் நான் மாவீரனாக, அதிலும் கரும்புலி வீரனாக எனது தாய்நாட்டிற்கும், மக்களுக்கும் பெருமை சேர்ப்பதை நினைத்து நான் பெரும் மகிழ்ச்சி யடைகின்றேன்.

**திலீபன் அண்ணன் கூறியது போல**

**"மக்கள் புரட்சி வெடிக்கட்டும்**

**சுதந்திரத் தமிழீழம் அமையும்."**

**"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

**தமிழரின் தாகமும் அதுதான்."**


இப்படிக்கு

தம்பி, அண்ணா, மகன், போராளி

**இ.ரூபன்**

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. இந்தக் கடிதம் விடுதலைப் புலிகள் ஆதரவு இணையதளத்தில் வெளியிடப்பட் டுள்ளது.

*(நன்றி சமூக நீதித்தமிழ்ச்தேசம் பிப்ரவரி 2009)*



## முருகதாசனின் மரணப்பட்டயம்

*உலக சமுகத்துக்கு தமிழினத்தின் சார்பில் என் ஆத்மார்த்த வேண்டுகோள்!*

**என் இனத்தின் அழிவைத் தடுத்து நிறுத்தத் தவறிய உலகமே, உங்கள் மனசாட்சியைத் தட்டியெழுப்ப என்னுடைய இனிய உயிரை வழங்குகின்றேன்.**

*எனது பெயர்முருகதாசன், பிறந்த திகதி 02.12.1982*

இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து இலண்டன் நாட்டின் முகவரியில் வசிக்கும் தமிழ் இனத்தைச் சேர்ந்தவன். இலங்கையில் வாழும் தமிழ் இனம் பெரும்பான்மைச் சிங்கள இனத்தின் அரசால் நசுக்கப்பட்டு வதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதனை நீங்கள் எவரும் தடுத்து நிறுத்தவில்லை. பார்த்துக் கொண்டும் ஊக்கம் கொடுத்துக் கொண்டும் இருக்கின்றீர்கள்.

**போர் தொடர்பான நடைமுறைகள், ஜெனீவா பிரகடனம், அடிப்படை மனித உரிமைகள், இன அழிப்பு, அதற்கான சட்டங் கள், நடைமுறைகள் எல்லாவற்றையும் ஐ.நா. மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்பன வைத்திருக்கின்றன. தனது உறுப்பு நாடுகள் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றெல்லாம் சட்டம் வைத்துள்ளீர்கள். ஆனால் இவற்றை யெல்லாம் மீறி எனது தமிழ் இனத்தை ஒட்டுமொத்தமாக இலங்கைத்தீவில் ஸ்ரீலங்கா அரசு படுகொலை செய்து கொண்டிருக்கின்றது.**

இன்று வன்னியில் எனது நான்கரை லட்சம் தமிழ் உறவுகள் எப்படிக் கொடூரமாக வதைக்கப்படுகின்றார்கள் என்பதை உலகின் பிரதிநிதி களான ஐ.நா. அதிகாரிகளும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகளும் அங்கிருந்து வெளியிடும் அறிக்கைகளில் இருந்தே தெரிந்து கொண்டிருப்பீர்கள்.

வன்னியில் என் இனத்தின் நான்கரை இலட்சம் பேர் ஒரு குறுகிய பகுதிக்குள் முடக்கப்பட்டு ஸ்ரீலங்கா அரசப்படைகளால் நாள் தோறும் எறிகணைத் தாக்குதல்கள் மூலமும் வான்குண்டுத் தாக்கு தல்கள் மூலமும் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள். நூற்றுக் கணக்கான என் உறவுகளின் பிணங்கள் வீதிகள்

எங்கும் கிடப்பதை அறிந்தபோது எனக்குத் தாங்க முடியாத துயரமும் அதிர்ச்சியும் ஏற்பட்டது. நாள்தோறும் எமக்குக் கிடைக்கும் செய்திகளில் வீதிவீதியாகக் கொல்லப்பட்டுக் கிடக்கும் என் இனத்துப் பாலகர்கள், பால்குடிக் குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், நோயாளர்கள் பற்றித்தான் தகவல்கள் வருகின்றன.

மருத்துவமனைகள் அங்கு பாதுகாப்பானவையாக இல்லை. மருத்துவமனைகள்கூட குறிவைத்துத் தாக்கப்படுகின்றன. மருத்துவமனைகளைத் தாக்குவதை ஸ்ரீலங்கா அரசே நியாயப்படுத்துகின்றது. அவர்கள் தொடர் தாக்குதல்களை நடத்தி மக்களைக் கொல்கின்றார்கள். வன்னியில் பயங்கரவாதிகள் இருக்கிறார்கள். அதனால் தாக்குவோம் என்கிறார்கள்.

உங்களின் மொழியில் கேட்கிறேன். பிறந்த குழந்தைகள் கொல்லப்படுகின்றார்கள். வயிற்றில் இருக்கும் சிசுக்கள்கூடக் கொல்லப்படுகின்றனர். அவர்களும் பயங்கரவாதிகளா?

மக்களைக் கொல்வது பயங்கரவாதம் என்கிறீர்கள். அங்கு தமிழ் மக்கள், அரசால் நாள்தோறும் படுகொலை செய்யப்படுகிறார்கள். அவர்கள் இடம் பெயர்கின்றபோதும், இடம் பெயர்ந்து ஓர் இடத்தில் தரித்து நிற்கின்றபோதும், மருத்துவமனைகளுக்குச் செல்கின்றபோதும், வீதிகளில் நடமாடுகின்றபோதும் என்று எங்கும் அவர்கள் கொல்லப்படுகின்றனர். கொத்துக் கொத்தாக அவர்கள் படுகொலை செய்யப்பட்டுக் கிடக்கிறார்கள்.

முல்லைத்தீவு சுதந்திரபுரச் சந்தித்திடலில் ஐ.நா.வின் உலக உணவுத் திட்ட அதிகாரிகள் கொடியை ஏற்றி நிலைகொண்டு நிவாரணத்தை வழங்கிக் கொண்டிருந்தபோதும் அந்தத் திடல் மீது 26.01. 2009 அன்று பகல் இரவாக எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. அப் பகுதியில் இருந்த செஞ்சிலுவைக்குழு அலுவலகமும் தாக்கப் பட்டது. அன்று மட்டும் 302 மக்கள் படுகொலை செய்யப் பட்டனர். 1199 பேர் படுகாயமடைந்தனர். அன்று அதிகளவில் உடையார் கட்டு மருத்துவமனை உள்ளிட்ட பகுதிகளெங்கும் பிணக்காடாக இருந்ததை எனது உறவினர் நேரில் பார்த்துத் தொலைபேசியில் சொல்லியபோது நான் அதிர்ந்து விட்டேன். யார் இருக்கிறார்கள், யார் மடிந்தார்கள் என்பதை அறியாமல் உயிருடன் இருந்தவர்கள் அந்த இடத்தை விட்டு ஓடினர். அவலங்களின் சாட்சியாக நின்ற ஐ.நா. அதிகாரி களும், சர்வதேச செஞ்சிலுவைக்குழு அதிகாரிகளும் சிறிய பதுங்கு குழிகளுக்குள் பாதுகாப்புத் தேடி இருந்துவிட்டு அவசர அவசரமாக அங்கிருந்து வெளியேறினர்.

அன்றைய நாள் மறக்க முடியாத அளவுக்கு எனக்குப் பெரும் மன அழுத்தத்தை ஏற்படுத்தியது. இதுபற்றி ஐ.நா. பிரதிநிதிகள், செஞ்சிலுவைக் குழுப் பிரதிநிதிகள் அறிக்கை வெளியிட்டனர். அப்பகுதி பாதுகாப்பு வலயம் என்று ஸ்ரீலங்காவால் பிரகடனப் படுத்தப்பட்ட பகுதியாகும். இவ்வாறு தானே பாதுகாப்பு வலயம் என அறிவித்து அதில் பன்னாட்டுப் பிரதிநிதிகள் சாட்சியாக இருக்க, ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்களைப் படுகொலை செய்து வருகிறது. நாள்தோறும் இத்தயை தாக்குதல்கள் நடக்கின்றன. இது அரச பயங்கரவாதம் இல்லை? அரசே நடாத்தும் இனப் படுகொலை இல்லையா?

இவ்வாறே, போரின்போது மருத்துவமனைகள் இலக்கு வைக்கப் படக்கூடாது என்ற மரபைப் புறந்தள்ளி, ஐ.நா. அதிகாரியும் பன்னாட்டு செஞ்சிலுவைக் குழுப் பிரதிநிதியும் நின்ற வேளையில் ஸ்ரீலங்கா அரசுப்படைகள் காயமடைந்த மக்களுக்குச் சிகிச்சை வழங்கி வந்த புதுக்குடியிருப்பு மருத்துவமனை மீது 02.02.2009 தொடக்கம் 04.02.2009 திகதி வரை குண்டுகளை வீசி நோயாளர் களைக் கொன்றதற்கு உங்களவர்களே சாட்சி.

4ஆம் திகதி ஸ்ரீலங்காவின் சுதந்திர நாள் கொண்டாட்டம். அன்றுதான் புதுக்குடியிருப்பு மருத்துவமனை முற்றாக அழித்துச் செயலிழக்கச் செய்யப்பட்ட நாளாகவும் அமைந்தது.

புதுக்குடியிருப்பு மருத்துவமனை, தொடர் விமானக்குண்டு வீச்சு களாலும் ஆட்லறி குண்டுகளாலும் தாக்கப்பட்டபோது அங்கு அப்பாவி மக்கள் 500 பேர்சிகிச்சை பெற்றார்கள் என்பதை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி உறுதிப்படுத்தி தகவல் வெளியிட் டிருந்தார்.

இதேவேளை, இதற்கு ஒரு கிழமைக்கு முன் 26.01.2009 இல் உடையார் கட்டு மருத்துவமனை தாக்கப்பட்டு மக்கள் கொல்லப் பட்டது தொடர்பாக பி.பி.சி. நிறுவனத்திற்குப் பேட்டியளித்த சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார, புதுக்குடியிருப்பில் மருத்துவமனை இயங்கும்போது மக்கள் ஏன் உடையார்கட்டு மருத்துவமனைக்குப் போக வேண்டும்? எனக் கேட்டு உடையார் கட்டு மருத்துவமனை மீதான தாக்குதலை நியாயப்படுத்தி இருந்தார். உடையார் கட்டு பகுதியை சில தினங்களுக்கு முன்னர்தான் பாதுகாப்பு வலயமெனக் குறிப்பிட்டு அங்கு மக்களை ஒன்றுகூடுமாறு சிறீலங்கா அரசு அறிவித்திருந்த நிலையிலும்கூட, அந்த மருத்துவமனை தாக்கப்பட்டிருந்தது.

அதனை இராணுவப் பேச்சாளர் ஏற்றுக்கொண்டு நியாயப்படுத்தி யிருக்கிறார்.

சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்காரா கூறிய அதே புதுக்குடியிருப்பு மருத்துவமனையே சில தினங்கள் கழித்துத் தாக்கப்பட்டது. 02.02.2009 தொடக்கம் 04.02.2009 வரை குண்டு வீசி நோயாளர்கள் கொன்றொழிக்கப்பட்டார்கள். ஐ.நா.மற்றும் சர்வதேச செஞ்சிலவைச் சங்கப் பிரதிநிதிகள் குறித்த மருத்துவமனை வளாகத்தில் தங்கி நின்ற நிலையிலேயே சிறீலங்கா அரச படைகள் மேற்படி மருத்துவமனைமீது தாக்குதலை மேற்கொண்டன.

பிரித்தானிய ஸ்கை ஒலிபரப்பு நிறுவனத்திற்கு 03.02.2009 அன்று வழங்கிய சிறப்பு நேர்காணல் ஒன்றில் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே எந்த வைத்தியசாலைகளும் இல்லை. அதனால் புதுக் குடியிருப்பு மருத்துவமனை ஒரு நியாயப்பூர்வமான இலக்கு என்று வைத்திய சாலைகள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை நியாயப் படுத்தி சிறீலங்கா ஜனாதிபதியின் சகோதரரும் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ச கருத்துத் தெரிவித்துள்ளார்.

மருத்துவ மனைகள் தாக்கப்படுவதை நியாயப்படுத்தியும் இனியும் மருத்தவமனைகள் தாக்கப்படும் என்பதை வலியுறுத்தியும் மேற்படி சிறீலங்கா அரசின் இராணுவப் பேச்சாளரும் மற்றும் ஜனாதிபதியின் சகோதரரும் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ச ஆகியோர் உத்தியோகப் பூர்வமாகவே உலகச் செய்தி நிறுவனங் களில் கருத்துக்களை வெளியிடுகின்றனர். சர்வதேசச் செய்தி நிறுவனங்களுக்கு இவ்வாறான ஒரு கருத்தை அவர்களால் கூற முடிகின்றது என்றால், மருத்துவமனைகள் தாக்கப்படுவது உலக நாடுகள் கொடுத்துள்ள அங்கீகாரம் என்றுதானே பொருள்படும்.

முள்ளயவலையில் இயங்கிய முல்லைத்தீவு பொதுமருத்துவ மனை, வள்ளிபுனத்தில் இயங்கிய முல்லைத்தீவு பொது மருத்துவ மனை, விசுவமடுவில் இயங்கிய கிளிநொச்சி பொது மருத்துவ மனை, உடையார்கட்டில் இயங்கிய பொது மருத்துவமனை, மூங்கிலாறில் இயங்கிய மல்லாவி மருத்துவமனை, புதுக்குடி யிருப்பு மருத்துவமனை என்பன மருத்துவமனைகள் என்பதற் காகவே தாக்கப்பட்டுள்ளன.

இரு தரப்புகளையும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மதிக்கும்படி கோரும் இந்நாடுகளுக்கு வைத்தியசாலைகளைத் தாக்குவதன் மூலம் வேண்டுமென்றே தமிழர்களை இலக்கு

வைக்கும் சிறிலங்கா அரசு, அதன் காரணமாக அந்தச் சட்டங்களை முழுவதுமாக மீறுகின்றது என்று நன்கு தெரியும்.

சிறிலங்கா அரசினால் முன்னெடுக்கப்படும் இந்தக் கொள்கை நிலைப்பாடு மனித இனத்திற்கு எதிரான தீங்கியல் குற்றமாகும். இந்தக் கொள்கையை முன்னெடுக்கும் சிறிலங்கா அரசின் போக்கால் சென்ற மாதம் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்படவும் காயமடையவும் நேர்ந்துள்ளது.

**எனது தமிழ் மக்கள் இலங்கைத் தீவில் படும் துயரத்தின்பால் உலகின் கவனத்தை ஈர்ப்பதற்காக எனது உயிரைக் கொடுக்கின்றேன். இந்த முடிவை எடுத்து நடைமுறைப்படுத்தும் இடைக் காலத்தில்கூட தினம் தினம் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் இலங்கைத் தீவெங்கும் வீதி வீதியாகக் கொல்லப்படுகின்றார்கள் என்ற செய்திகள் வந்த வண்ணமே உள்ளது.**

இந்த மனிதத் துன்பியல் கொடூரம், மனிதாபிமான உதவிகள் தமிழ் மக்களுக்குக் கிட்டுவதைத் தடை செய்துள்ள இலங்கை அரசின் நடவடிக்கையால் மேலும் தாமதமாகியுள்ளது. அனைத்துலக **சமூகம் இந்த உண்மைகளை முழுமையாக அறிந்துள்ளபோதிலும் பன்னாட்டு மனிதாபிமானச் சட்டங்களைப் பின்பற்றுமாறு சிறீ லங்கா அரசிற்குக் கடும் அழுத்தம் கொடுப்பதைத் தவிர்த்து, சிறீ லங்கா அரசிற்குப் படை மற்றும் பொருண்மிய உதவிகளை வழங்கி வருகின்றமை பெரும் துர்ப்பாக்கியமாகும்.**

தமிழ்த்தேசம், சிங்கள தேசம் ஆகியவற்றின் வாழிடமே இலங்கைத் தீவு என்பது, தமிழ் மக்களின் உறுதியான மாற்றமுறாத கருத்து நிலைப்பாடாகும். இந்த யதார்த்தத்தை அங்கீகரிக்கும் அடிப்படையில்தான் இரு தேசங்களினதும் உண்மையான பிரதி நிதிகள் அதாவது இரண்டு தேசங்களினதும் எதிர்காலப் பாதுகாப்பு, பரஸ்பர நலன் போன்றவற்றிற்காக எவ்வாறு இரண்டு தேசங்களும் கூடிச் செயற்பட்டுத் தமிழரின் தேசியப்பிரச்சினைக்கு நீதியான, நீடித்து நிற்கக்கூடிய தீர்வைக் காணலாம் என்பது குறித்துப் பேச்சுக்களில் ஈடுபட வேண்டும்.

இலங்கைத் தீவு முழுவதும் சிங்கள இனத்தவருக்கு உரித்தானது என்ற கொள்கை நிலைப்பாட்டினால்தான், சிங்களவர்களோடு சமத்துவமாக வாழும் ஓர் அரசியல் ஏற்பாட்டை பேச்சு மூலம் காண்பதற்குத் தமிழினம் எடுத்த அனைத்து முயற்சிகளும்தோற்றுப் போயின. சமத்துவமான தமிழ்தேசம் உள்ளது என்ற இந்த

யதார்த்தத்தை ஏற்று அங்கீகரிப்பதற்கு மறுத்த இந்த பௌத்த சிங்கள இனரீதியிலான தேசியவாதமே இன அழிப்பு நோக்கிலான போர் வழித் தீர்விற்கு சிறீலங்கா அரசைத் தள்ளியுள்ளது.

நான்கு நூற்றாண்டுகளாக அந்தத் தீவில் தமிழ் இனத்திற்கான உரிமைகள் மறுக்கப்பட்ட வரலாறு எல்லோருக்கும் தெரியும். பிரிட்டன் அந்தத் தீவின் பெரும்பான்மை இனமான சிங்களத்திடம் ஆட்சியை விட்டுச் சென்ற வரலாறும் தெரியும். இந்த உரிமைகளுக்காக அறவழியில் தமிழினம் போராடியபோது அதை சிங்கள அரசு வன்முறை கொண்டு அடக்கியதானாலேயே தமிழினம் அடிக்குஅடி கொடுக்க வேண்டிய ஆயுதப் போராட்டத்துக்குத் தள்ளப்பட்டது.

அதாவது, தமிழ் மக்களுக்கு எதிரான சிறீலங்கா அரசின் படை மற்றும் பௌதிக ரீதியிலான அடக்குமுறையை எதிர்த்து நிற்பது அவசியம் என்பதும், அதுவே ஆயுதம் தாங்கிய தமிழர்களின் எதிர்ப்புப் போராட்டத்தைத் தூண்டியது என்பதையும் உலகம் கவனிக்க வேண்டும்.

தமிழ் தேசம் என்ற உண்மை இருப்புநிலையைத் தனது இனஅழிப்புச் செயற்பாடு மூலம் சிதைத்து அழிப்பதுதான், சிறீ லங்கா அரசு தொடுத்துள்ள போரின் நோக்கமாகும். இதை அங்கீ கரிப்பது போல 03.02.2009இல் நோர்வே, யப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் (அல்லது இணைத் தலைமை நாடுகள்) விடுத்த கூட்டறிக்கை அனைத்துத் தமிழர்களின் மனதையும் ஆழக் காயப் படுத்தியுள்ளது.

அதாவது, தமிழ் மக்களது உரிமைப்போரினதும் சிங்கள இன வாதத்தினதும் அடிப்படைகளைத் தெரிந்து கொண்டுமே இணைத் தலைமை நாடுகள் சிறீலங்கா அரசிற்குச் சார்பாகவும் தமிழ் மக்கள் தமது உரிமைப் போரைக் கைவிட வேண்டும் என்றும் கூறி அறிக்கை வெளியிட்டமையும்கூட எனக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியது.

ஓர் இனம் தனது உரிமைகளைக் கேட்பது தவறு என்று உலகம் கருதுகின்றதா? குறிப்பாக ஐ.நா. அவ்வாறுதான் கருதுகின்றதா? உலகத்தில் ஏன் தமிழ் இனத்துக்கு மட்டும் உரிமைகள் மறுக்கப் படுகின்றன அல்லது உரிமை மறுப்புக்கு உலகம் ஆதரவு கொடுக் கின்றது. அந்த மறுப்புக்கு ஏன் உலகம் துணை போகின்றது? நாம் ஏன் அடிமைகளாக இருக்க வேண்டும் என உலகம் நினைக்கின்றது.

இன்று ஓர் அரசு பிரகடனப்படுத்தி ஓர் இனத்தை அழித்துக்

கொண்டிருப்பது தெரிந்தும் உலகமே அதனைத் தடுக்கவில்லை. அறிக்கைகளை மட்டும் வெளியிட்டு விட்டு அமைதியாகி விடுகின்றன. ஆனால் அந்த அமைதியை நீங்கள் அந்த அரசின் இன அழிப்பிற்குக் கொடுத்த அனுமதியாகக் கருதியே சிறீலங்கா அரசு இன அழிப்பைத் தீவிரப்படுத்தியுள்ளது. ஓர் இனத்தின் அழிவைத் தான் நீங்கள் வரலாற்றில் எழுதிக் கொண்டிருக்கிருன்றீர்கள். இன அழிப்பைச் செய்யும் அந்த நாட்டுக்கு நீங்கள் ஏன் அழுத்தம் கொடுக்கிறீர்கள் இல்லை? இதுதான் உங்கள் நடுநிலையா?

1958 முதல் இன்றுவரை தமிழினத்துக்கு உரிமைகள் வழங்கப் படுவதாகக் கைச்சாத்திடப்பட்ட உடன்பாடுகள் எல்லாம் சிறீலங்கா அரசால் பல தடவைகள், குறிப்பாக கடைசி நோர்வே போர் நிறுத்த உடன்பாடு வரை, கிழித்தெறியப்பட்ட வரலாறு எல்லோருக்கும் தெரியும்.

கடைசியாக நடந்த பேச்சுக்களின்போது இணைத்தலைமை நாடுகள் ஸ்ரீலங்காவுக்குச் சார்பாகவே செயற்பட்டன. இந்த பேச்சுக் காலத்தில் ஸ்ரீலங்கா படைத்தரப்பு தன் படையை பலப்படுத்தவே பயன் படுத்தியது என்பதும் தெளிவாகத் தெரிந்தது. பேச்சுக்களின் காலங் களைத் தமிழரை ஏமாற்றும் காலங்களாகவே ஸ்ரீலங்கா அரசு பயன்படுத்தியது.

மக்களைச் சுதந்திரமாக நடமாட விடவேண்டும் என்று சொல்கின் றீர்கள். சிங்கள சிறீலங்கா அரசு எமது தமிழ் மக்களை ஆட்சி புரிய அனுமதிக்க வேண்டுமென மறைமுகமாகச் சொல்கிறீர்கள்.

ஒருபுறம் சிறீலங்கா அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எனது இன மக்கள் கடத்தப்பட்டு கைகள், கால்கள், கண்கள் கட்டப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டு வீதிகளில் அநாதரவாகப் போடப்படு கின்றார்கள். இவற்றைச் செய்வது யார் என்று புள்ளிவிபரங்கள் எல்லாவற்றையும் மனித உரிமை நிறுவனங்கள் கண்டித்து அறிக்கை வெளியிட்டும், நீங்கள் எவருமே அவற்றைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்கு மாறாக அப்பகுதிகளில் மக்கள் சுதந்திரமாக நடமாடலாம் என்கிறீர்கள்.

ஈராக்கிற்கு அடுத்தபடியாக உலகளவில் ஸ்ரீலங்காவிலேயே அதிகளவில் மக்கள் காணாமல் போகின்றனர் என்பதை உலக மனித உரிமைகள் அமைப்புக்கள் அடையாளப்படுத்தியும் நீங்கள் எவரும் அவற்றிற்கு பரிகாரம் காணாது அப்பகுதிகளினுள் மக்களைப் போகும்படி கூறுகிறீர்கள்.

சிங்கள சிறீலங்கா அரசின் ஆளுகையில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக எமது தமிழ் மக்கள் கடத்தப்பட்டும் காணாமற் போயும் உள்ளமை உங்களுக்குத் தெரியாதா? நூற்றுக்கணக்கில் அல்லாமல் ஆயிரக்கணக்கில் நடைபெற்று முடிந்த இவ்வாறு காணாமற் போவதற்கு எதிராக உலக நாடுகள் என்ன செய்தன?

இணைத்தலைமை நாடுகளின் பின்புலத்தில் நோர்வேயின் அனுசரணையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைக் காலத்திற்கூட நூற்றுக்கணக்கான **தமிழ்மக்கள் இலங்கைத் தீவெங்கும் சிங்கள சிறீலங்கா அரச படைகளால் இரகசியமான முறையில் காணாமல் போகச் செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டமைக்கு எதிராக உலக நாடுகள் எதனைச் செய்தன?**

இறையாண்மை என்ற பேரில் நடக்கும் இந்த இன அழிப்பை நீங்கள் அனுமதிக்கிறீர்கள். தமிழினத்தின் மீது இன அழிப்பைச் செய்வது ஸ்ரீலங்கா அரசு என்றவுடன் நீங்கள் இறையாண்மைபற்றி பேசத் தொடங்குகின்றீர்கள். இறையாண்மை கொண்ட அரசின் உறவைப் பேணுவதற்காக அல்லது பாதுகாப்பதற்காக நீங்கள் ஸ்ரீலங்கா அரசுக்கு ஆதரவளிப்பதாகவே நாங்கள் எல்லோரும் கருதுகின் றோம். ஓர் இனத்தை நசுக்க அல்லது இனத்தை அழிக்க நீங்கள் எல்லோருமே ஆதரவளிக்கின்றீர்கள். தமிழர் உரிமைக்காகப் போராட்டம் செய்தால் வன்முறை அல்லது பயங்கரவாதம் என்றெல்லாம் சொல்லுகிறீர்கள். தமிழரை 1958இல் இருந்து ஓர் அரசு அழித்துக் கொண்டிருப்பதை வன்முறையாக நீங்கள் பார்க்க வில்லையா? தமிழினம் இந்தப் பூமியில் வாழும் இனமில்லையா? அவர்கள் உரிமைகளுடன் வாழ உரித்துடையவர்கள் இல்லையா? நீங்கள் ஏன் எம்மை மட்டும் நசுக்க ஒத்துழைக்கின்றீர்கள்?

புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் இருந்து எமது தமிழ் மக்கள் உங்களுக்கு உங்கள் மொழியில் அறவழியில் எனது இனத்தை காப்பாற்றுமாறு குரல்களை எழுப்பினார்கள். ஆனால் எதையும் நீங்கள் காதுகொடுத்துக் கேட்கவில்லை. மிகக்கொடூரமாக வதைக்கப்படும் என் இனத்துக்கு என்னால் இங்கிருந்து எதையும் செய்ய முடியவில்லை. குறைந்தது ஆறுதல் சொல்லக்கூட என்னால் முடியாத கையறு நிலையில் இருப்பது குறித்து நான் வெட்கப் படுகிறேன். வேதனைப்படுகிறேன்.

இந்தச் சூழலில் புலம்பெயர் நிலையில் இருக்கும் எனக்கு, அங்கு அவலப்படும் என் மக்களுக்கு செய்யக்கூடியதாக எதுவும் இல்லை. உங்களுக்கு அழுத்தமாக என் இனத்தின் சார்பில் எனது வேண்டு

கோளைத் தெரிவித்து, என் இனத்தைக் காக்கும் முடிவை எடுக்க வேண்டும் என்பதற்காக எனது உயிரைத் தீயினுக்குக் கொடுக்க முடிவெடுத்துள்ளேன்.

உலக நாடுகளே,

குறிப்பாக, இலங்கை அரசுடன் கைகோர்த்துள்ள இணைத் தலைமை நாடுகளே,

ஐ.நா. நிறுவனமே,

ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள். சிங்கள அரசு எமது தமிழ் மக்களுக்குச் செய்து வந்த கொடுமைகள் நீண்ட வரலாற்றைக் கொண்டது. அந்த நீண்ட துன்பியல் வரலாற்றின் நிகழ்காலப் பரிமாணமாகவே, தமிழ் மக்களின் பிரச்சினையில் உலக நாடுகளின் தலையீடும் ஏற்பட்டது. உலக நாடுகள் தலையிட்டபோது தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்குமென தமிழ் மக்கள் நம்பினார்கள். ஏன் நானும்கூட நம்பினேன். ஆனால் நிகழ்காலத்திலும் நாங்கள் ஏமாற்றப்பட்டுவிட்டதை உணர்கின்றோம்.

சிங்கள அரசின் கபட நாடகத்திற்கு உலக நாடுகளும் துணை போவதைக் கண்டதானாலேயே இந்த ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. எனது தமிழ் மக்கள் தங்களது தாய்நாட்டில் கொடுமைப்படுத்தப் படுவதைக் கண்டும் உலகம் பாராமுகத்துடன் இருப்பது மட்டுமல் லாமல், சிறீலங்கா அரசை ஊக்குவித்து வருவது கண்டு மனம் வெதும்பியே உலகப் பொதுமன்றமாம் ஐ.நா.வின்முன் தீயின் சாட்சியாக என்னை அர்ப்பணிக்க முடிவெடுத்தேன்.

எனது மக்கள் நிர்க்கதியாக விடப்பட்டதற்கும், சிங்கள அரசுடன் சேர்ந்து இணைத்தலைமை நாடுகள் இன அழிப்பிற்குத் துணை போனதற்கும் சாட்சியாக ஐ.நா.மன்றத்தின் முன் இந்தத் தமிழன் முருகதாசன் தீக்குளித்தான் என்ற வரலாறும் சேரட்டும்.

ஒடுக்கப்பட்ட இனங்களுக்கு ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நீதி கிடைக்கச் செய்வதில் ஐ.நா.வின் பங்கு எவ்வாறானது என ஆய்வு செய்யப்படும்போது ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் சார்பாக, இலங்கைத் தமிழ் இளைஞன் முருகதாசன் தீக்குளித்து உயிர் கொடுத்தான் என்ற வரலாறும் சேரட்டும். சிங்கள அரசின் அழிப்பிற்குத் துணை போகும் நாடுகளே, ஐ.நா.வே, இன்னொன்றை யும் புரிந்து கொள்ளுங்கள். **நேற்றைய வரலாற்றின் ஏமாற்றத்தின் சோக வெளிப்பாடாக இந்த முருகதாசன் தீக்குளிக்கின்றான். ஆனால் இன்றைய வரலாறு கடந்த காலமாகும். எதிர்காலத்தில்**

**கோபம் கொள்ளும். தமிழரை அழித்தொழிக்க ஊக்குவித்து உதவிபுரிவோர் மீது எமது வருங்காலச் சந்ததி கோபம் கொள்ளும்.**

உலகத் தமிழினமே உங்களுக்கு ஒன்றைக் கூறுகின்றேன். நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து உலகின் மனசாட்சியை விழித்தெழ வைக்க, உலக சமூகத்தின் மனதையும் அறிவையும் வென்றெடுக்கப் பாடுபட வேண்டும். எமது சுயத்தை நிலைநிறுத்தி எமது உரிமையை நாமே வென்றெடுப்பதற்கான வாய்ப்பும் இதுவே.

எனது தாயக உறவுகளே, சிங்கள் அரசின் போலி முகத்தைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள். அதன் உண்மை முகம் கோரமானது என்பதைப் பல தடவை நீங்கள் உணர்ந்துள்ளீர்கள். உடலால் தொலைவி லிருந்தாலும் உணர்வால் உங்களுடனேயே நானும் இருக்கின்றேன். எம்மைக் களைப்படையச் செய்து, சோர்வுற வைத்து எமது உரிமைகளை எம்மிடமிருந்து பறித்துவிடலாம் எனச் சிங்கள அரசு நினைக்கின்றது. சிங்கள அரசின் இந்த எண்ணத்தைச் சிதறடித்து உறுதியுடன் இருந்து எமது உரிமைகளை நாமே மீட்போம்.

கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்றார் யேசுபிரான். நாமும் எமது உரிமைகளைக் கேட்போம். தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருப்போம். சுதந்திரத்தின் கதவு ஒரு நாள் எமக்காகத் திறக்கப்படும். எம் மக்களின் நல்வாழ்விற்கான கதவு ஒருநாள் திறக்கப்பட்டே தீரும். நாங்கள் கேட்போம். எமது உரிமை களைக் கேட்டுக் கொண்டே இருப்போம். உலகத்திடம், உலக மனச் சான்றின் முன் தொடர்ந்து கேட்போம்.

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.**

உண்மைக்காய் உயிர் தரும் தமிழன்,

**முருகதாசன்**

❖ ❖ ❖

## ஈழமக்கள் ஒரு புழுவிலும் கேவலமானவர்களா?

கருணாநிதித் தாத்தா! எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஈழமக்கள் ஒரு புழுவிலும் கேவலமானவர்களா? இன்று சாவின் விளிம்பில் இருக்கும் என் போன்ற குழந்தைகள் இன்றி எல்லோரையும் காப்பாற்றும்படி உங்களைக் கண்ணீர் மல்க நான் மன்றாடுகிறேன். என் தமிழன் மேல் இரசாயனக் குண்டும் கொத்துக்குண்டும் ... எனப் போட்டு இந்திய அரசாங்கம் பரிசோதிப்பதை, நானும் இந்தியன் என்ற முறையில் வெட்கம் அடைகிறேன். நானாவது பரிகாரம் தேட விழைகிறேன். உங்கள் தமிழ்ப்புலமை மீது ஆணையிட்டுக் கூறுங்கள். உங்கள் உள்ளம் உள்ளூறக் குமுறவில்லையா? நிர்ப்பந்தம் எனக் காரணம் காட்டாமல் தமிழீழ மக்களுக்காக உயிர்ப்பிச்சை கேட்கும் இந்த இந்தியச் சிறுவனின் வேண்டுகோளுக்கு இணங்கி ஆணை பிறப்பியுங்கள் "போர் நிறுத்தம் உடனடியாக அமுலாகிறது" என.

தியாகி முத்துக்குமாரன் ஈழத் தமிழர்களுக்காகச் செய்த தியாகத்தில் தமிழகமே திரும்பிப் பார்த்தது. ஆனால் அதை அரசியல்வாதிகள் நல்லமுறையில் உபயோகிக்கத் தவறிவிட்டனர் என்பதுதான் உண்மை. இதுவே ஈழத்தமிழரின் துர்அதிட்டம்.

ஒரு நாட்டைப் போர் புரியாதே என நம்மால் எப்படிச் சொல்ல முடியும் என நீங்களோ அல்லது உங்களைச் சார்ந்தவர்களோ கூறினால் அப்போ நம் இராணுவத்தை, கடல்படையை ஏன் அவர் களுக்குத் துணையாக அப்பாவிகளைக் கொன்று குவிக்க அனுப்பி னாய்? உன் வார்த்தையைக் கேட்காதவனுக்கு ஏன் உதவி புரிகிறாய்?

தமிழகத்தில் உண்மையைச் சொல்பவர்களுக்கு எல்லாத் தீமை களையும் இழைக்கும் மனிதர்களை நீங்கள் உங்கள் பக்கத்தில் வைத்துள்ளீர்களா? அல்லது கெட்டவர்கள் உங்கள் பக்கமிருந்து உங்களின் பெயரைக் கெடுக்கிறார்களா?உங்கள் மனது என்ன அவ்வளவு பாறாங்கல்லா? அங்கு ஒட்டு மொத்த மக்களும் அலறு கிறார்களே உங்கள் செவிகளில் விழவில்லையா? கண்ணிருந்தும் குருடராய், செவியிருந்தும் செவிடராய், வாயிருந்தும் ஊமையாய் இருக்கக்கூடாது தாத்தா?

உங்கள் உளியின் ஓசை காவியத்தைப் பார்த்து ரசித்தோம் அன்று. அதில் நீங்கள் வர்ணித்த காதல், பாசம், விரகம் போல் அங்கு தமிழீழத்திலும் போரின் மத்தியிலும் இதனினும் மேம்பட்ட காவியங்கள் எழுதப்படாமல் போயுள்ளன. ஓசையின் நாயகனே, ஈழத் தமிழரின் வாழ்வு உன் கையில், போரை நிறுத்துங்கள் என உன் வாயிலிருந்து ஓசை எழுப்பு. உன்னை உலகம் என்ன, உங்கள் சொந்த

மகள் கனிமொழி அவர்களும் என் தந்தை தமிழனுக்கு நல்லது செய்தார் என மனம் மகிழ்வார்.

ஈழத் தமிழர், புலிகள் இவர்கள் உங்களுக்கு ஏதாவது துரோகம் செய்தார்களா? பழிவாங்குவது எனினும் இது சமயமல்ல. அவர்கள் தமது சொந்த மண்ணுக்குப் போராடுவது தவறா? உங்கள் மகள் கனிமொழியும் மேடைகளில் பேசினாரே அவர் துரோகியா? அவரின் வாயை மூடுவதற்குத்தான் பதவி கொடுத்துப் பக்கத்தில் வைத்துள்ளீர்களா?

போர் என்றால் போர் விதி வரம்பு மீறாமல் போர் புரியட்டும் சிங்கள பேரினவாத அரசு. ஆனால், அவர்களுக்கு நேர்மையே கிடையாது. நேர்மையான இந்திய அரசோ அநீதிக்குத் துணை போகிறது. இன்னும் கொடுமை எதுவெனில் இன்று இப்போது இரசாயனக் குண்டை சொந்த மண்ணுக்குப் போராடிய மைந்தர்களின் மேல் ஏவி ஆயிரக் கணக்கில் மண்ணின் மைந்தர்களைப் பலி வாங்கியதே, இது தகுமா?

உங்களுக்குக் கொலை மிரட்டல் விடுத்ததாக இருவரைப் புலிகள் எனக் கைது செய்ததாக அறிந்தேன்.இதற்காக பாவம் அந்தத் தமிழீழ மக்களைப் பழிவாங்காதீர்கள். 'இன்னா செய்தாரரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்.'

நமது இரத்தங்களைக் காப்பாற்ற இக்கணமே ஓடிவாருங்கள்! அங்கு பாதுகாப்பு வலயத்தினுள் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என எனது தாயார் தத்தெடுத்த சிறுவர்கள், அதுவும் அனாதைச் சிறுவர்கள், தத்தெடுக்குமுன் அனைவரும் உடல் உறுப்பு பெரிதளவில் பாதிக்கப் படாதவர்கள். அதில் ஒருத்தி மனநலம் குன்றியவள். ஒருவன் கண் பாதிக்கப்பட்டவன். 3 சிறுமிகள் 3 சிறுவர்கள்.

இவர்களை நான்கு மணித்தியாலங்களும் பார்த்துக் கொள்வதற்கு அநாதரவான இரண்டு ஆசிரியர்கள் எனப் பாதுகாத்து வந்தோம். ஆனால், இன்று வந்தது அந்த அதிர்ச்சிச் செய்தி. ஆறு வாரங்களுக்கு முன் ஒரு ஆசிரியர், ஒரு குழந்தை இறந்து விட்டனர். கோரச் சாவு இவர்கள் கண்முன். மற்றும் இரு குழந்தைகளுக்கு உடல் உறுப்புகள் பாதிப்பு, மற்றையோருக்கு புரையோடிப் போன தீப்புண்கள்.

பெரிதளவில் பாதிக்கப்பட்டதுடன் அந்த வலிப்புடன் ''அண்ணா எங்களுக்குக் காயம்பட்ட இடமில்லாமல் எல்லா உடம்பும் நோகுது அண்ணா, மயக்கம் வருகுது அண்ணா, தாங்க முடியவில்லை, அண்ணா. அம்மா, நீங்கள் இங்கு வாங்கோ நாம் மயக்கத்தில் கூடக் கண்மூட மாட்டோம்.

கண்ணையும் காதையும் திறந்தபடியே இருக்கிறோம். நான் செத்தால் தமிழீழத்தின் ஒரு எண்ணிக்கையை அழித்ததில் மகிந்த அரசு மகிழ்ந்தாலும், தமிழீழத்திற்கு நான் துரோகம் செய்தவனாவேன். என்உயிர் அவ்வளவு மலிவா அம்மா? ஓடி வா அம்மா. அண்ணாக்கள் ஏதாவது செய்து சண்டையை நிறுத்துங்கோ.

அண்ணாக்கள் வலிக்குது, அண்ணா எங்களைப் போல் நிறையப் பேர் இங்க இருக்கினம். அம்மா, அண்ணா ஏதாவது செய்து சண்டையை நிறுத்துங்கோ. நாம் சாகக்கூடாது அம்மா. நான் தமிழீழத்தில் வாழ ஆசைப்படுவது தவறா அம்மா? இது எனது சொந்த மண் என்றாய். அம்மா, இங்கு என் உயிரும் எனக்குச் சொந்தமில்லை என்றாகிற நிலைமையில் நாம் இருக்கிறோம்.

அம்மா காப்பாத்து, அம்மா நீ ஏன் உன்னை அம்மா எனச் சொல்லி வைத்தாய்? காப்பாத்து அம்மா. உங்களையும் அண்ணாக்களையும் பார்க்காமல் உயிர் துறக்க நேர்ந்தாலும், நீங்கள் சொன்னதுபோல தமிழீழம் காணாமல் சாகக்கூடாது என எமது உடல் ஒத்துழைக்கா விட்டாலும் மனதால் உடலுக்குக் கட்டளை போட்டு உயிரைக் கையில் வைத்துள்ளோம்.

தமிழீழம் கேட்பவர்கள் பயங்கரவாதிகள் என்றால் நானும் பயங்கரவாதிதான் அம்மா. சாப்பாடும் இல்லையம்மா. தண்ணியும் இல்லையம்மா(வளர்க்கும் ஆசிரியை) மாமிக்குச் சரியான காயம். ஆனா எங்களைக் காப்பாத்தப் படாதபாடு பாடுறா."

இது மூன்று நாட்களுக்கு முன் கிடைத்த செய்தி என் அம்மாவின் கடும் முயற்சியால் அவர்களுடன் நாம் பேசினோம்.அம்மா சொன்னார். அவர்கள் மிகமிகப் பெரிய அளவில் அழிவைச் சந்திக்கப் போகிறார்கள். அதனால் உடனடியாக ஆவன செய்ய வேண்டும் என.

அதனால் நாம் எமது பாடசாலைகளுக்குப் பெற்றோருடன் போய் அங்குள்ள தலைமை ஆசிரியரிடம் ஈழத்தில் போரை நிறுத்தும்வரை நாம் பள்ளி வரமாட்டோம். தொடர் போராட்டத்தில் பங்கு பற்றப் போகிறோம் என எல்லா மாணவர்களும் ஒன்று திரண்டு அவரவர் பள்ளிகளில் நாளை முதல் தொடங்குவோம்.

கடவுளை நேரில் அழைக்கிறேன். தமிழ் ஈழமக்கள் உயிர் பெற.

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

இப்படிக்கு

மு.சு. சர்மா தமிழ்க்கதிர்

❖ ❖ ❖

## நிரந்தர, சுதந்திரமான போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவாய்ச் செயற்படத் தயார் : தென்னாசியாவின் அதியுயர் கல்விமான்கள் மகிந்தாவுக்குக் கடிதம்

இலங்கையில் போர் நிறுத்தத்தை கண்காணிப்பதற்காக சுதந்திர மான பார்வையாளர்கள் குழுவாகச் செயற்படத் தயார் என்று தெற்கு ஆசிய நாடுகளின் முன்னாள் நீதிபதிகள், மூத்த வழக்கறிஞர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், சமயத் தலைவர்கள் ஆகியோர் சிங்கள அரச தலைவர் மகிந்த ராசபக்சேவுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருக்கின்றனர்.

தென்னாசியாவின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அறிஞர்களான...

**கே.ஜி.கண்ணபிரான்**

*(தேசியத் தலைவர் மக்கள் சிவில் உரிமைக்கழகம் பியுசிஎல்)*

**ஐதராபாத் நீதிபதி இராஜிந்தர் சச்சார்**

*(முன்னாள் தலைமை நீதிபதி புதுதில்லி உயர்நீதிமன்றம்)*

**எழுத்தாளர் அருந்ததிராய்** *(புதுதில்லி)*

**புஷ்கர் ராஜ் பொதுச்செயலாளர்** *(பியுசிஎல்)*

**பமீலா பிலிப்போஸ்** *(வுமன்ஸ் பீச்சர் சர்வீஸ்)*

**சுவாமி அக்கினிவேஷ்** *(புதுதில்லி)*

**பேராசிரியர் அமித் பாதுரி**

*(மதிப்புறு பேராசிரியர் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம்)*

**புதுதில்லி அருட்திரு பி.ஜே. லோறன்ஸ்**

*(பேராயர் தென் இந்தியத் திருச்சபை நாந்தியால் மறை மாவட்டம்)*

**புரபுல் பித்வாய்** *(கட்டுரையாளர் புதுடில்லி)*

**சுமித் சக்கரவர்த்தி**

*(ஆசிரியர் மெயின்ஸ்ட்ரீம் ஆங்கில வார ஏடு புதுடில்லி)*

தபன் போஸ் புதுடில்லி

ரீட்டா மன்சந்தா

(மனித உரிமைகளுக்கான தெற்கு ஆசிய அரங்கம் நேபாளம்)

பேராசிரியர் கமல் மித்ரா செசனாய்

(அனைத்துலக ஆய்வுகள் பள்ளித் தலைவர்

ஆசிரியர்கள் சங்கம் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம் புதுதில்லி)

எர்னஸ்ட் தீன தயாளன் (பெங்களூர்)

பிரதீப் பிரபு (சேத்காரி சங்கதனா, தகானு, மும்பை)

பிரசாந்த் பூஷன் (வழக்குரைஞர் உச்சநீதிமன்றம் புதுதில்லி)

எம்.ஜி.தேவசகாயம்(ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப்பணி அதிகாரி சென்னை)

குமார் முரளீதரன் (பத்திரிகையாளர் புதுதில்லி)

அருட்திரு தயானந்த் கார் (மதுரை)

அருட்திரு. ஹென்றி திபேன் (மக்கள் கண்காணிப்பகம் மதுரை)

எம்.எஸ்.எஸ்.பாண்டியன் (சென்னை)

சுசில் பியாகுரெல் (முன்னாள் ஆணையர் நேபாள மனித உரிமை ஆணையம் காத்மண்டு)

முகாஷீர் ஹசன் (லாகூர் பாகிஸ்தான்)

ஆகியோர் உட்பட மற்றும் பலர் கையெழுத்திட்டு அனுப்பப் பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

மாண்புமிகு இலங்கை அரச தலைவர் மகிந்த இராசபக்ச அவர்களுக்கு,

சிங்களப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிடையில் தீவிரம் அடைந்துள்ள மோதல் காரணமாக, வன்னிப் பகுதியில் உருவாகிவரும் மனிதப் பேரழிவு ஆபத்து குறித்து தொடர்ந்து எங்களின் ஆழ்ந்த கவலைகளை வெளிப்படுத்தி வருகின்ற, தெற்கு ஆசியாவின் அக்கறை கொண்ட குடிமக்களின் மிகப்பெரிய கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாங்கள், ஏப்ரல் 13, 14 ஆகிய இரு நாட்களுக்கு உங்களால் அறிவிக்கப்பட்ட மனிதநேயப் போர் நிறுத்தத்துக்கு முதலில் எங்களது பாராட்டையும் ஆதரவையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மோதல் நிறுத்தப்படுவதை வரவேற்பதாக ஏற்கனவே கூறியிருந்த விடுதலைப்புலிகள் இயக்கம், தற்போது நீங்கள் அறிவித்துள்ள போர் நிறுத்த அறிவிப்பையும் ஏற்றுக் கடைப்பிடிக்கும் என்று நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்.

மனிதநேயப் போர் நிறுத்தம் என்று உங்களால் அழைக்கப் படுகின்ற இந்தப் போர் நிறுத்தத்தை, மோதலில் சிக்கியுள்ள அப்பாவித் தமிழ் மக்கள் இடையே நம்பிக்கையை ஏற்படுத்து வதற்கும், உண்மையில் அவர்கள் மீது கொண்ட அக்கறைதான் இந்தப்போர் நிறுத்தத்திற்குக் காரணம் என்ற உணர்வை ஏற்படுத்துவதற்கும் ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம்.

மோதலில் ஏற்பட்டுள்ள இருதரப்புக்கும் வெளியே, உதவி தேடிச் செல்லக்கூடிய சுதந்திரமான மனிதர்கள் சிலர் இருக்கிறார்கள் என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்பட வேண்டியதும் தேவையாகும். உங்களது படையினர் இதற்கு முன்பு ஆயுத நடவடிக்கைகளை இடை நிறுத்தியபோது, இந்த விடயத்துக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப் படவில்லை.

அதனால், மோதல் பகுதியில் இருந்து வெளியேறி தாங்கள் விரும்பும் இடங்களுக்குச் செல்வதற்குப் போர் நிறுத்தம் அனுமதி அளிக்கிறது என்ற நம்பிக்கை அப்போது ஏற்படவில்லை.

எனவே இந்த முறை,

1. அப்பாவித் தமிழ் மக்கள் இடையே நம்பிக்கையையும் உறுதியையும் உருவாக்கும் பயனுள்ள முயற்சியாக, இப்போது அறிவிக்கப் பட்டுள்ள போர் நிறுத்தத்தை மாற்ற வேண்டும்.

2. போர் நிறுத்தத்தைச் சுதந்திரமாகக் கண்காணிப்பதற்கு அனுமதிக்க வேண்டும். அப்போதுதான் எந்தத் தரப்பும் போர் நிறுத்தத்தை மீறுவதாக ஒன்றின் மீது ஒன்று பழி சுமத்த முடியாது. மோதல் பகுதியில் இருந்து அப்பாவி மக்கள் பாதுகாப்பாக வெளியேறிச் செல்வதைத் தடுக்க முடியாது.

நிலைத்த நீடித்த அமைதிக்கு...

அதற்கான வாய்ப்புகளைத் திறந்துவிடும் வகையில் விரும்பத்தக்க பயன்கள் ஏற்பட வேண்டும் எனில், உங்களால் அறிவிக்கப்பட்டுள்ள போர் நிறுத்தம் நீண்ட காலத்துக்கு நீடிக்க வேண்டியது தேவை என்று ஐ.நா.பொதுச் செயலாளரும், இங்கிலாந்து வெளியுறவு அமைச்சரும் கருதுவதைப் போலவே நாங்களும் கருதுகின்றோம்.

என்ற போதிலும், இலங்கையின் அனைத்துக்குடிமக்களின் அமைதிக்கும், வளவாழ்வுக்கும் அடையாளமாக விளங்கும் சிங்கள, இந்துப் புத்தாண்டை முன்னிட்டு, தற்போது போர் நிறுத்த அறிவிப்பு என்ற முதல் நடவடிக்கையை நீங்கள் எடுத்திருக்கின்றீர்கள்.

இலங்கைக்கும் எங்களுக்கும் இடையே பல பொதுவான வரலாற்றுப் பிணைப்புகளைக் கொண்டுள்ள தெற்காசியர்கள் ஆகிய நாங்கள், நீங்கள் அறிவித்துள்ளபடி ஒரு மெய்யான மனிதநேய முயற்சியாக மாற்றுவதற்காக, போர் நிறுத்தத்தைக் கண்காணிப் பதற்கு எங்களது ஆற்றல்களை வழங்குவதற்குத் தயார் என்ற எங்களின் விருப்பத்தைத் தெரிவிக்கின்றோம்.

தெற்கு ஆசிய நாடுகளின் புகழ்பெற்ற மனிதர்களின் பட்டியலை மேலே நாங்கள் தந்திருக்கின்றோம். உங்களால் அறிவிக்கப்பட்டுள்ள போர் நிறுத்தத்தை ஆதரிப்பவர்கள் இவர்கள்.

உணவு, மருந்து, சுகாதார வசதிகள், இருப்பிடம், மனிதர்களுக்கான பிற அடிப்படையான வசதிகள் முதலியவற்றுக்காகத் தவியாய்த் தவிக்கின்ற பாதிக்கப்பட்ட அப்பாவி மக்கள், அந்தக் கடுமையான துன்பச் சோதனையில் இருந்து மீள்வதற்கு உதவும் வகையில் நம்பிக்கையை உருவாக்குவதாகவும், நடைமுறை உண்மையாகவும் போர் நிறுத்தத்தை மாற்றுவதற்குத் தங்களது ஆற்றல்களைத் தரத் தயாராக இருப்பவர்கள் இவர்கள்.

உங்களால் அறிவிக்கப்பட்டுள்ள இந்தப்போர் நிறுத்தத்துக்கு, தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பு அமைப்பைச் (சார்க்) சேர்ந்த அனைத்து உறுப்பினர்களிடமும் ஆதரவு கோருவதற்காக, இதன் நகலைத் தெற்காசிய நாடுகளின் அரசு தலைவர்கள் அனைவருக்கும் அனுப்பி இருக்கிறோம்.

உங்களால் அறிவிக்கப்பட்டுள்ள மனிதநேயப் போர் நிறுத்தம், தேவையான அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்பதற்காக இதன் நகலைத் தெற்கு ஆசிய ஊடகங்களுக்கும் அனுப்பி இருக்கின்றோம்.

இந்த விடயத்தின் முக்கியத்துவத்தை ஏற்கும் வகையில், நீங்கள் உடனடியாக, ஆக்கப்பூர்வமான முறையில் பதில் அளிப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

- இவ்வாறு அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. *(நன்றி -- தென்செய்தி மே 01 - 15 2009)*

❖ ❖ ❖

# மக்கள் இயக்கங்களின் தேசியக் கூட்டமைப்பு

# (National Alliance of People's Movements NAPM)

29-30, 'A' First Floor Haji Habib Building Naigaon Cross Road, Dadar (East) Mumbai 400 014

Phone: 91-22-24150529 E-mail:napmindia@gmail.com

*39 டாக்டர் அழகப்பா சாலை புரசைவாக்கம் சென்னை 600 084*

*நாள்: 21.04.2009*

பெறுதல்

நாளிதழ்கள் பருவ இதழ்கள் தொலைக்காட்சிகள்

அன்புடையீர்,

இலங்கைத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி, உடனடியாகப் போர் நிறுத்தம் செய். போரை நிறுத்தி மனித உயிர்களைக் காப்பாற்று, போர்க்குற்றங்களை நிறுத்து, சனநாயகத்தையும் மனித உரிமைகளையும் மீட்டெடு என்ற கோரிக்கைகளை முன்வைத்து, மக்கள் இயக்கங்களின் தேசியக் கூட்டமைப்பு நிறைவேற்றிய அறிக்கை இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது. ஈழத் தமிழின அழிப்புக்கு எதிரான பெண்கள் இயக்கத்தின் சார்பில் 13.4.2009 முதல் சாகும் வரை பட்டினிப் போராட்டம் நடத்தி வரும் 20 பெண்களுக்கு ஆதரவாக நாங்கள் குரல் கொடுக்கின்றோம். போரை நிறுத்தி விலைமதிப்பற்ற உயிர்களைக் காப்பாற்யூமாறு சோனியா காந்தியை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

அறிக்கையைத் தங்களின் மேலான இதழில் வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உண்மையுள்ள

டி.காபிரியல்

(ஒருங்கிணைப்பாளர்)

இலங்கைத் தமிழர்களைக் கொல்லாதே, ஜனநாயகத்தைக் காப்பாற்று, மனித உரிமைகளை மதித்து நட, ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்போம்.

போரை நிறுத்து, போர்க்குற்றங்களை நிறுத்து.

இலங்கையின் இன்றைய நிலை அதிர்ச்சியடைய வைக்கிறது. தமிழ்ப்புத்தாண்டில் அறிவிக்கப்பட்ட இரு நாட்கள் போர் நிறுத்தத் துக்குப் பின்னும், இலங்கை அரசிடம் பலரும் வேண்டுகோள் வைத்த பின்னரும், ஏப்ரல் 17ல் ஐ.நா. வின் சிறப்புத் தூதராக அனுப்பப்பட்ட விஜய் நம்பியாரிடம் இலங்கை அதிபர் ராஜபக்சே இறுதி முடிவு காணும் வரை போரை நிறுத்த முடியாது எனத் தெளிவாக அறிவித்து விட்டார்.

பாதுகாப்பு வளையத்துக்குள் தொடர்ந்து வீசப்படும் குண்டு வீச்சால், குடிநீர், உணவு, உயிர்காக்கும் மருந்துகள் கிடைக்காமை யால் வன்னி மக்களின் நிலை பரிதாபமாக உள்ளது. இதன் பின்னரும் பல்வேறு காரணங்களால் பெரும்பான்மை மக்கள் அந்தப் பிரதேசத்தை விட்டு நீங்கவில்லை. நீங்கிய சிலரும் இடை முகாம் களில் (Transit Camps) அனுபவிக்கும் கொடுமைகளால் மோசமான நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர். குடும்பங்கள் சிதைக்கப்பட் டுள்ளன; குறிப்பிட்ட வயதுள்ள ஆண்கள் காணாமல் போகி றார்கள். இந்த எண்ணிக்கை உயர்ந்து கொண்டே போகின்றது. பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாகிறார்கள். அரசியல் சார்புடையவர்கள் காட்டிக் கொடுக்கப் பட்டு அவர்களும் காணாமல் போகிறார்கள். உயிர் இழப்புக்கள் பன்மடங்காகப் பெருகிவிட்டன. ஏப்ரல் 20க்குப் பிறகு பாதுகாப்பு வளையத்தில் இருந்து ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். குரூரமான படுகொலைகள் நிகழப் போகின்றன. மக்களைத் தம்முடனேயே வைத்திருப்பதில் விடுதலைப்புலி களுக்குத் தன்னல நோக்கம் இருக்கிறது என்று காரணம் காட்டுவது, மனித உரிமை மீறல்களுக்கு ஒரு சாக்காகி விடாது. போரை உடனே நிறுத்துவதும், போர்க்குற்றங்களை முடிவுக்குக் கொண்டு வருவதும் தான் ஜனநாயக நெறிகளைக் காப்பதற்கான நிபந்தனைகளாகும்.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் வேரூன்ற விடாமல் செய்வது என்ற பெயரில் இந்தியா; இலங்கைக்குத் தொடர்ந்து இராணுவ, பொருளாதார உதவிகளைச் செய்துவருகிறது. கடந்த **கால்நூற்றாண்டுக் காலமாய் இந்திய உளவுத் துறையான ரா(RAW) வும் பிற உளவுத்துறைகளும் தமிழ்ப் போராளிக் குழுக்களிடையே பிளவையும் மோதலையும் உண்டாக்கியதை நாம் அறிவோம்.**

இவை போன்ற குழுக்களிடையே பிளவையும் மோதலையும் உண்டாக்கியதை நாம் அறிவோம். இவை போன்ற செயல்களால் ஈழத் தமிழரிடையே உண்டு பண்ணிய காயங்கள், இந்திய அமைதிப் படை ஈழத்தில் இருந்தபோது ஏற்படுத்திய விளைவு களை விட மோசமானவை. அந்த மக்கள் அனுபவித்த கொடுமை களின் எதிர் வினையாகவே தன் தந்தையின் கொலை நடந்தது என்று பிரியங்கா காந்தி சொல்லியிருப்பதை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்தியாவுக்குள்ளேயும் உலக அளவிலும் உருவாகியுள்ள எதிர்ப்பு களால் இந்திய அரசின் தொனி சற்றே மாறியுள்ளது என்பதை நாங்கள் வரவேற்கிறோம். வார்த்தைகளும் செயல்களும் எப்போதும் ஒன்றா யிருப்பதில்லை. வாக்குகளை அள்ளிக்கொள்ள அரசியல் இயக்கங்கள் இந்தப் பிரச்சனையைக் கையில் எடுத்துள்ளன. இதைத் தாண்டிப் போரை நிறுத்த வேண்டி பல்வேறு சனநாயக அமைப்கள் கடந்த மூன்று மாதங்களாக பற்பல போராட்டங்களை நடத்தி யுள்ளன. ஆர்ப்பாட்டங்கள், உண்ணா நோன்புகள், கூட்டங்கள், கருத்தரங்குகள், சாலை மறியல்கள், மனிதச் சங்கிலி, பேரணி எனப் பல போராட்டங்களை நடத்தி வருகின்றனர் மக்கள். இதுவரை 14 பேர் தம்மைத் தாமே தீயிட்டுக் கொண்டு இறந்துள்ளனர். கடந்த 13.4.2009 முதல் சென்னையில் பல்வேறு அமைப்புக்களைச் சேர்ந்த 20 பெண்கள் போரை நிறுத்தக் கோரி, சாகும் வரை பட்டினிப் போரைத் தொடர்கின்றனர்.

மக்கள் இயக்கங்களின் தேசியக் கூட்டமைப்பு சார்பில் 20 பெண்களின் போராட்டத்துக்கு, முழுமையான ஆதரவினை தெரி வித்துக் கொள்கிறோம். தேர்தலுக்கு முன்னான எமது அறிக்கையில் இப்பிரச்சினையை எழுப்பியுள்ளது மட்டுமன்றி, தமிழ்நாட்டில் மார்ச் 23 முதல் 31 முடிய இதற்கான பரப்புரை இயக்கத்தையும் மேற் கொண்டோம். மார்ச் 31ல் நாக்பூரில் நடைபெற்ற கூட்டத்தில் பல்வேறு இயக்கங்களின் தேசியக் கூட்டமைப்பு (NAPM) இலங் கைத் தமிழரின் வாழ்க்கையில் அமைதி, சனநாயகம், இறையாண்மை பேணப்பட வேண்டுமென தீர்மானம் நிறைவேறியது.

தமிழ்நாட்டில் சாலை மறியல், கைது, பிப்ரவரி 21ல் பட்டினிப் போராட்டம், மார்ச் 19ல் பெரும் மக்கள் திரள் பங்கேற்ற மனிதச் சங்கிலி எனப் பலவும் நடந்தேறியதில் நாங்கள் பங்கு கொண்டோம். ஏப்ரல் 8 ல் நடைபெற்ற உலக உழைக்கும் மக்களின் போராட்டத்தில் கலந்து கொண்டோம். உள்நாட்டு அளவிலும் உலக அளவிலும்

இந்தப்பிரச்சினையை நாங்கள் எழுப்பினோம். தேர்தலுக்கு முந்தைய காலத்தில் எங்கள் ஒவ்வொரு நடவடிக்கையிலும் இப் பிரச் சினையை இணைத்துச்சென்றோம். எதிர்வருங் காலத்திலும் இந்நடவடிக்கையைத் தொடர்வோம்.

தலைமுறைகளாக நீடித்து வரும் பிரச்சினையை ஒரு நாளில் தீர்த்து விட இயலாது. எனவே இந்தப் பட்டினிப்போரைக் கைவிடுமாறு சகோதரிகளைக் கேட்டுக் கொள்கிறோம். மனித உயிர்களைக் காப்பதும், மனித உயிரிழப்பைத் தவிர்ப்பதுமே நம் குறிக்கோள். புதிய உயிரிழப்புகளுக்கு வழிகோலுவது அல்ல. பட்டிகோலாவில் தமிழ்ப் பெண்டிர் நிறைவேற்றிய தீர்மானங்கள் வழியில் நாம் நடப்போம்.

**போரை முடிவுக்குக் கொண்டு வருவோம்.**

**மனித உயிர் காப்போம்.**

**வெற்றியை நமதாக்குவோம்**

அமைதிப் பேச்சுவார்த்தை தொடங்க, நிபந்தனையற்ற நிரந்தர போர் நிறுத்தத்தை உடனே அறிவிக்குமாறு நாங்கள் வலியுறுத்துகிறோம்.

இடம் பெயர்ந்த வன்னி மக்களுக்கு குடிநீர், உணவு, மருந்துகள் அனைத்தும் கிட்டவும், மனித உரிமைகளை உறுதி செய்யவும் உலக அளவிலான மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், மருத்துவ வல்லுநர்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோரைக் கொண்ட தகுதி வாய்ந்த ஒரு குழுவின் கண்காணிப்பில் செயற்படுத்தப்பட வேண்டும் எனவும் சிறார்கள், பெண்கள், இளைஞர்களைக் காக்க தனிக்கவனம் செலுத்த வேண்டுமெனவும் நாங்கள் வலியுறுத்து கிறோம்.

மக்கள் தம் வாழ்விடங்களுக்குத் திரும்புதலை உறுதிப்படுத்திட, புதைக்கப்பட்ட கண்ணி வெடிகளை அகற்ற, கிராமங்களில் வாழ் வாதாரத்தை மறுபடி உருவாக்க முயற்சி செய்ய வேண்டும்.

இன, மொழி, சாதி, மத, பாலியல் வேறுபாடில்லாத, சம உரிமை களுடன் கூடிய அனைத்து மக்கள் பங்கேற்கும் அரசியல் தீர்வு காண்பதற்குச் செயல்முறைகள் மேற்கொள்ள வேண்டும்.

**தமிழின மக்களின் சுயநிர்ணய உரிமை உறுதி செய்யப்பட வேண்டும்.**

ஆள்கடத்தல், காணாமல் போதல் போன்ற அனைத்து வன்முறைகளுக்கும் முடிவுகாண வேண்டும். ஊடகச் சுதந்திரம் உறுதி செய்யப்பட வேண்டும்.

உழைக்கும் வர்க்கம் தங்களுக்கான உரிமை அமைப்புக்களை உருவாக்கவும், மக்களின் வாழ்வியலை உறுதி செய்யவும் வழி காணப்பட வேண்டும்.

ஒப்பம்

| | |
|---|---|
| **மேதா பட்கர்** | **பி. சென்னையா (ஆந்திரம்)** |
| **பூபேந்திரா ராவூத்** | **ராஜேந்திர ரவி (புதுடில்லி)** |
| **கீதா ராமகிருஷ்ணன்** | **டி. காபரியல் (தமிழ்நாடு)** |
| **சன்னிடி (மராட்டியம்)** | |

மற்றும்

அரசியல் மக்கள் முன்னணியின்

| | |
|---|---|
| **யோகேந்திரா யாதவ்** | **(டெல்லி)** |
| **அஜித்சா** | **(டெல்லி)** |
| **டாக்டர் கரிலம்** | **(மத்திய பிரதேசம்),** |
| **அருணாராய்** | **(ராஜஸ்தான்)** |
| **சந்தீப் பாண்டே** | **(உ.பி.)** |

❖ ❖ ❖

## ராஜபக்சேவுக்கு

## உலகப் பத்திரிகையாளர் கூட்டமைப்பு

## வேண்டுகோள்!

உலக கருத்துச் சுதந்திரக் குழுவைச் சேர்ந்த 30 உறுப்பினர்கள், சிங்களப்பத்திரிகையாளர்களைக் காப்பாற்ற வேண்டியும் இன வெறுப்புணர்வை எதிர்த்தும் இராசபக்சேவுக்கு எழுதிய கடிதம்:-

மூலம் : உலக ப் பத்திரிக்கையாளர் கூட்டமைப்பு பிரஸ்ஸல்ஸ்

(International federation of journalists)

(உலகம் முழுவதுமுள்ள கருத்துச் சுதந்திரம் கோருவோரின் கூட்டம் நார்வே தலைநகர் ஆஸ்லோவில் ஜூன் 2009-ல் கூடியபொழுது கையொப்பமிட்டு அனுப்பப்பட்ட கடித நகல்)

**திரு. மகிந்த ராசபக்சே**

அதிபர்

இலங்கை சோசலிச சனநாயகக் குடியரசு

அதிபர் அலுவலகம், டெம்பிள் டிரீஸ்

150 காலே சாலை கொழும்பு -3 ஸ்ரீலங்கா

மின்னஞ்சல்: secretary@ presidents office.lk

அன்பு அதிபர் மகிந்த ராசபக்சே,

பொருள்: இலங்கையில் பத்திரிகையாளர் மீதான போரை நிறுத்துக!

சுதந்திரமான பத்திரிகையாளர்களையும் ஊடகப்பணியாளர்களை யும் தமிழீழ விடுதலைப்புலிகளோடு தொடர்புபடுத்தி வெளிப் படையாகப் பேசிவரும் இலங்கை அரசு அதிகாரிகள் மற்றும் ஊடக நிர்வாகத்தினரின் பேச்சு, பத்திரிகையாளர்கள்/ஊடகப்பணியாளர் களின் உயிருக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருப்பதை யெண்ணி உலகப் பத்திரிகை சுதந்திரத்திற்கான குழுவினரும் மனித உரிமைக் குழுவினரும் பெருங் கவலை கொண்டுள்ளனர்.

உலகப் பத்திரிகையாளர்கள் கூட்டமைப்பும் பிற உலக அமைப்பு களும் மூத்த பத்திரிகையாளரும் தொழிற்சங்கவாதியுமான பொடலா ஜெயந்தா (PODDALA JAYANTHA)சூன் ஒன்றாம் நாள் கடத்தப் பட்டும், முரட்டுத்தனமாகத் தாக்கப்பட்டும் இருப்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். உங்கள் அரசின் பெருமையை மங்கச் செய்த அரசு எதிர்ப்புப் பிரசாரகர் என்று அரசு உறுப்பினர்கள் இத்தாக்குதலுக்குச் சில நாட்கள் முன்புதான் அவரைக் குற்றஞ் சாட்டியிருந்தனர்.

திரு.ஜெயந்தா ஆறு கொலைகாரர்களால் உலோகம் மற்றும் மரத்தடி களால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். கனமான மரக்கட்டை யால் அவரது கைகள் நசுக்கப்பட்டுள்ளன. முழுநேரப் பத்திரிகை யாளராக அவர் தனது பணியைத் தொடரக்கூடாது என்பதற்காக அவ்வாறு செய்வதாக அவரைத் தாக்கியவர்கள் கூறியுள்ளனர்.

இலங்கை சோசலிச ஜனநாயகக் குடியரசின் அதிபர் என்ற முறையில் நீங்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் மீது வன்முறையை ஏவிவரும் முறையில் உங்கள் அரசின் உறுப்பினர் களும் அதிகாரிகளும் வெளிப்படையாகப் பேசுவதை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்துமாறு மிக்க மதிப்போடு உங்களை வேண்டுகிறோம்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்தான உலகத் தீர்மானத் தில் கையொப்பமிட்ட நாடு என்ற வகையில் இலங்கை அரசு அதன் கடமைகளை நிறைவேற்ற வேண்டும். மேலும் பிரிவு 19-ல் வரை யறுத்தபடி பத்திரிகையாளர் உள்ளிட்ட அனைத்து மக்களின் கருத்துச் சுதந்திரத்தை மதித்து உயர்த்திப் பிடிக்க வேண்டும் என்றும், பத்திரிகையாளர்களின் உயிருக்கு ஆபத்தை உண்டாக்கக்கூடிய செயல்களைச் செய்யக்கூடாது என்றும் நாங்கள் வேண்டுகிறோம்.

ஆகஸ்டு 12, 1949 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜெனிவா மாநாடு மற்றும் ஆயுத மோதல்களில் பலியாவோரைப் பாதுகாக்கும் 1997 ஆம் ஆண்டின் கூடுதல் ஒப்பந்தத்தின்படியும், குடிமக்கள் என்ற முறையில் பத்திரிகையாளர்களைப் பாதுகாக்க வேண்டும் என நாங்கள் இலங்கை அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

1738 ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு அவை தீர்மானத்தின்படியும் 2006 பாதுகாப்பு அவை ஏற்றுக் கொண்டபடியும், போர் வலயங்கள் மற்றும் நெருக்கடி பகுதிகளிலிருந்து செய்தி சேகரிக்கும் பத்திரிகை யாளர்களைப் பாதுகாக்க வேண்டும் என இலங்கை அரசை நாங்கள்

கோருகிறோம். பத்திரிகையாளர்கள், ஊடக வல்லுநர்கள் மற்றும் தொடர்புடைய பணியாளர்கள் ஆகியோரைப் பாதுகாக்கும் உலகச் சட்டப்படி, ஆயுத மோதலில் ஈடுபட்டுள்ள எல்லாப் பிரிவினரும் அவர்கட்கான பொறுப்புகளை முழுமையாக ஏற்றுச் செயல்பட வேண்டும் என அத்தீர்மானம் குறிப்பிடுகிறது.

**உலகிலேயே பத்திரிகையாளர்களுக்கு மிக ஆபத்தான நாடுகளில் ஒன்று என்ற பெருமையை இலங்கை பெற்றுள்ளது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். கொலைகள், ஆள் கடத்தல், ஊடகப் பணியாளர் மீதான தாக்குதல் ஆகியன உங்கள் அரசில் சர்வ சாதாரணமாகப் போய்விட்டது.**

கீழ்க்கண்ட எந்தவொரு வழக்கிலும் யாரும் கைது செய்யப்பட வில்லை; குற்றம் சாட்டப்படவுமில்லை.

★ ஜனவரி 8, 'சண்டே லீடர்' ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கே கொழும்பில் பட்டப்பகலில் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

★ மார்ச் 11, இலங்கை முக்கிய எதிர்க்கட்சியின் ஊடக ஆலோசகரும், அரசுக்குச் சொந்தமான ஒலிபரப்பு நிறுவனத்தின் முன்னாள் இயக்குநருமான டம்மிக கங்காநாத் திசநாயக ஆயுதமேந்திய கும்பலால் கடத்திச் செல்லப்பட்டார்.

★ பிப்ரவரி 26, கொழும்பிலிருந்து வெளியாகும் சுடரொளி மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன் ஆகிய தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியரான ந.வித்யாதரன் வெள்ளை வேனில் கடத்தப்பட்டார். அவர் காவல்துறையால் கைது செய்யப்பட்டதாகப் பிறகு அறிவிக்கப்பட்டது.

★ மே 22, 2008, தி நேஷன் இதழின் இராணுவச் செய்தியாளர் கெய்த் நயாகர் கடத்தப்பட்டு, மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

இத்தகைய தாக்குதல்களுக்குக் காரணமானவர்கள் குறித்து விசாரணை மேற்கொண்டு, கைது செய்து குற்றப்பத்திரிகை வழங்கு வதற்கு இலங்கை அரசின் நிர்வாகம் தவறிவிட்டது என்பதறிந்து நாங்கள் மிகவும் வருந்துகிறோம்.

உங்கள் அரசின் மூத்த உறுப்பினர்களும், பாதுகாப்பு அதிகாரி களும் பத்திரிகையாளர்களைத் துரோகிகள் எனக் கண்டித்து அனல் பறக்கும் விமர்சனங்களைத் தொடர்ந்து முன்வைப்பது குறித்தும் நாங்கள் அதிர்ச்சி அடைந்துள்ளோம். எனவே பத்திரிகையாளர்கள் மீதும், ஊடக நிறுவனங்கள் மீதும் வன்முறை கட்டவிழ்த்து விடப்படு வதற்கு உங்கள் அரசுதான் மறைமுகமான காரணமாக இருக்கிறது என நாங்கள் கருதுகிறோம்.

வன்முறையை ஊக்குவிப்பதைத் தவிர்க்க வேண்டும் எனவும் தேசிய, சர்வதேசிய சட்டங்களின் அடிப்படையில் பத்திரிகை யாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்துக் குடிமக்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்புணர்வு பற்றி கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் உங்கள் ஆளுகைக்குக் கீழுள்ள அரசு மற்றும் அனைத்துப் பணியாளர்களிடமும் நீங்கள் அறிவுறுத்த வேண்டும் என நாங்கள் மிகவும் வலியுறுத்துகிறோம்.

சனநாயக முறையை ஆதரிக்கும் கருத்துரிமை, சுதந்திரத்தின் அடிப்படைப் பங்களிப்பை நீங்கள் ஏற்க வேண்டும் எனவும், உங்கள் அரசுக்கு உவப்பானதாக இல்லாவிட்டாலும், மாறுபட்ட கருத்துக் களையும் எண்ணங்களையும் கட்டாயம் அனுமதிக்க வேண்டும் எனவும் நாங்கள் வேண்டுகிறோம்.

பத்திரிகையாளர்களுக்கு எதிரான எல்லாவகையான அச்சுறுத்தல் களையும் தாக்குதல்களையும் இலங்கை காவல்துறை உடனடியாகத் தீவிரமாக விசாரித்து, இது தொடர்பான குற்றவாளிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாங்கள் கேட்டுக்கொள் கிறோம்.

சுதந்திரமான ஊடகம், சுதந்திரமான வெளிப்பாடு, அனைத்து மக்களின் மனித உரிமை ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ள உள்ளூர் மற்றும் சர்வதேசிய அமைப்புக்களின் சார்பாக இங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள கவலையை ஏற்கும் வகையில், இலங்கை அதிபர் என்ற முறையில் நீங்கள் செயல்படவேண்டும் என மதிப்புடன் கேட்டுக் கொள் கிறோம்.

உங்கள் மதிப்புமிக்க

**அனைத்து உலகப் பத்திரிகையாளர்கள் கூட்டமைப்பு**

(அமைப்புகளின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன)

International Federation of Journalists (IFJ)
Canadian Journalists for Free Expression (CJFE)
Cartoonists Rights Network International (CRNI)
Centre algerian de defense de la liberte de la presse (CALP)
Centre for Journalism in Extreme Situation (CJES)
Centro Nacional de Communicacion Social (CENCOS)
Centro de Periodismo y Etica Publica (CEPET)
Centre for Media Studies and Peace Building (CEMESP)
Comite por la Libre Expresion (C-Libre)
Foro de Periodismo Argentino (FOPEA)

| | |
|---|---|
| Freedom of Expression Institute | ( FXI ) |
| Globe International Reporters' Freedom and Safety | ( IRFS ) |
| Independent Journalism Centre Moldova | ( IJC ) |
| Institute Prensa y sociedad | ( IPYS ) |
| Journaliste en danger | ( JED ) |
| Media foundation for West Africa | ( MFWA ) |
| Media Institute | |
| Media Institute of Southern Africa | ( MISA ) |
| Media Watch | |
| Mizzima News | |
| National Union of Somali Journalists | ( NUSOJ ) |
| Observatorio Latinamericano para la Libertad de Expresion | ( OLA ) |
| Observatory for the Freedom of Press Publishing and Creation in Tunisia | ( OLPEC ) |
| Pacific Freedom Forum | ( PFF ) |
| Pakistan Press Foundation | ( PPF ) |
| Public Association "Journalists" | |
| Sindicato de Periodistas del Paraguay | ( SPP ) |
| South East European Network for Professionalization of Media | ( SEENPM ) |
| Southeast Asian Press Alliance | ( SEAPA ) |
| World Association of Newspapers | ( WAN ) |

❖ ❖ ❖

## " பிறகு அவர்கள் எனக்காக வந்தார்கள்! "

**லசந்த விக்ரமதுங்க**

*தமிழில் - கவிதா*

**எ**ந்தத் துறையும் அதில் பணிபுரிபவர்கள் தங்கள் பணியின் பொருட்டு உயிரைவிட வேண்டும் என்று எதிர்பார்ப்பதில்லை- ஆயுதப்படைகளையும் இலங்கையில் ஊடகத் துறையையும் தவிர. கடந்த சில வருடங்களாக சுதந்திரமான ஊடகத்துறை தொடர்ந்து தாக்குதல்களுக்கு உள்ளாகி வருகிறது. பத்திரிகை மற்றும் தொலைக் காட்சி நிறுவனங்கள் கொளுத்தப்படுகின்றன, குண்டு வைத்துத் தகர்க்கப்படுகின்றன, சீல் வைத்துப் பூட்டப்படுகின்றன அல்லது அதிகாரத்துக்கு இணங்கும்படி வற்புறுத்தப்படுகின்றன. கணக்கற்ற ஊடகவியலாளர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள், மிரட்டப்படு கிறார்கள்; கொல்லப்படுகிறார்கள். இந்த எல்லாப் பிரிவுகளிலும் குறிப்பாகக் கடைசிப் பிரிவில் நானும் இருக்கிறேன் என்பதை எனக்குக் கிடைத்த கௌரவமாகக் கருதுகிறேன்.

நான் ஊடகத்துறையில் மிக நீண்ட காலம் பணிபுரிந்து வருகிறேன். சொல்லப்போனால் 2009 தி சண்டே லீடரின் 15 ஆம் வருடமாக இருக்கும். இலங்கையில் இந்தக் காலகட்டத்தில் நிறைய விஷயங்கள் மாறிவிட்டன. பெரும்பான்மையான இந்த மாற்றங்கள் மோசமாகத்தான் இருந்திருக்கின்றன என்பதை நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. இப்போது நாம் ஒரு உள்நாட்டு யுத்தத்தின் மத்தியில் இருக்கிறோம். அதை நடத்திக் கொண்டிருப்ப வர்களின் ரத்தவெறி எல்லையற்றது. பயங்கரவாதம், அதைச் செலுத்துபவர்கள் பயங்கரவாதிகளாக இருந்தாலும் -அரசாக இருந்தாலும்- தினசரிவிஷயமாகிவிட்டது. விடுதலையின் ஆதாரங் களை அடக்கி ஆளும் முக்கிய வழிமுறையாகக் கொலை இங்கு அரசால் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்று ஊடகவியலாளர்களை; நாளை நீதிபதிகளையும். இரண்டு தரப்புக்குமே இப்போதுபோல எப்போதும் ஆபத்துகள் அதிகமாக இருந்த தில்லை. பின்விளைவுகள் இப்போதைவிடக் குறைவாகவும் இருந்த தில்லை.

பிறகு ஏன் நாங்கள் இதைச் செய்கிறோம்? அதைப் பற்றி நான் அடிக்கடி நினைத்துப் பார்ப்பதுண்டு. நானும் ஒரு கணவன்; எனக்கு அழகான மூன்று குழந்தைகள் உண்டு. எனது துறையையும் மீறிய

பொறுப்புகளும் கடமைகளும் எனக்கு இருக்கின்றன. இந்த ஆபத்து தேவையா? இல்லை என்றே நிறையப் பேர் என்னிடம் சொல் கிறார்கள். எனது துறையை மாற்றி வழக்கறிஞர் பணிக்குத் திரும்பும் படி நண்பர்கள் சொல்கிறார்கள்; அது பாதுகாப்பான, இதைவிட நல்ல வாழ்க்கை முறையைத் தரும் என்பது எனக்குத் தெரியும். இரண்டு தரப்புகளையும் சேர்ந்த அரசியல்வாதிகளும் என்னை அரசியலில் சேருமாறு வற்புறுத்துகிறார்கள்; எனக்குப் பிடித்த துறையில் அமைச்சராக்குவதாக உத்தரவாதம் தருகிறார்கள். இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு இருக்கும் ஆபத்துகளை உணர்ந்திருக்கும் தூதரக அதிகாரிகள், அவர்களது நாடுகளில் தங்குவதற்கான உரிமையைத் தருவதாகவும், பாதுகாப்பான பயணத்துக்கு ஒழுங்கு செய்வதாகவும் சொல்கிறார்கள். எனக்குப் பல தடைகள் இருந்தாலும் என் முன்னிருக்கும் வாய்ப்புகள் பல.

ஆனால் **பதவி, புகழ், பணம், பாதுகாப்பு ஆகியவற்றைத் தாண்டிய ஓர் அழைப்பு இருக்கிறது. அது மனசாட்சியின் குரல்.**

*தி சண்டே லீடர்* பிரச்சினைக்குரிய பத்திரிகையாக இருப்பதற்குக் காரணம், நாங்கள் எதைப் பார்க்கிறோமோ அதை அப்படியே சொல்கிறோம். கொலை, கொள்ளை எதுவாக இருந்தாலும் அதை அந்தப் பெயரிட்டே அழைக்கிறோம். வார்த்தை ஜாலங்களுக்குப் பின் நாங்கள் ஒளிந்து கொள்ளவில்லை. எங்களுடைய புலனாய்வுக் கட்டுரைகளுக்கு ஆதாரமாகச் சமூகப் பொறுப்புணர்வு கொண்ட குடிமக்கள் தரும் ஆவணங்கள் இருக்கின்றன. அவர்கள் பல ஆபத்து களுக்கிடையில் அதை எங்களுக்குத் தருகிறார்கள். நாங்கள் தொடர்ந்து பல ஊழல்களை வெளிப்படுத்தியிருக்கிறோம். இந்தப் பதினைந்து வருடங்களில் ஒருமுறை கூட எங்கள்மீது யாரும் வெற்றிகரமாக வழக்குத் தொடர்ந்தது இல்லை அல்லது நாங்கள் சொன்னது தவறு என்று அம்பலப்படுத்தியதில்லை.

மஸ்காராவும் ஸ்டைலிங் ஜெல்லும் இல்லாமல் தனது முகத்தைச் சமூகம் பார்க்கக்கூடிய ஒரு கண்ணாடியாகச் சுதந்திரமான ஊடகம் இருக்கிறது. எங்களிடமிருந்து உங்கள் நாட்டின் நிலை பற்றி நீங்கள் தெரிந்து கொள்கிறீர்கள். குறிப்பாக உங்கள் குழந்தைகளுக்கு நல்ல எதிர்காலத்தைக் கொடுப்பார்கள் என்று நீங்கள் நம்பித் தேர்ந்தெடுத் தவர்கள் எப்படி நாட்டை நிர்வகிக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்கிறீர்கள். சமயங்களில் நீங்கள் கண்ணாடியில் பார்ப்பது நல்ல சொரூபமாக இருக்காது. ஆனால் உங்கள் பாதுகாப்பான இருக்கை

களின் தனிமையில் நீங்கள் புலம்பும்போது, உங்களுக்கு அந்தக் கண்ணாடியைத் தூக்கிக் காட்டும் ஊடகவியலாளர்கள் அதை வெளிப்படையாகவும் பல ஆபத்துகளை எதிர் கொண்டவாறும் செய்கிறார்கள். இது எங்களுடைய கடமை. அதிலிருந்து நாங்கள் விலகுவதில்லை.

எல்லாப் பத்திரிகைகளுக்கும் ஒரு கோணம் இருக்கிறது. எங்களுக்கும் இருக்கிறது என்பதை நாங்கள் மறைக்கவில்லை. இலங்கையை வெளிப்படையான, தாராளவாத, மதச்சார்பற்ற, ஜனநாயகமாகப் பார்க்க வேண்டும் என்பதுதான் எங்கள் குறிக்கோள். இந்த வார்த்தைகளைப் பற்றிக் கொஞ்சம் யோசியுங்கள். அவை ஒவ்வொன்றுக்கும் தனித்துவமான, ஆழமான ஓர் அர்த்தம் இருக்கிறது. வெளிப்படையாக இருக்க வேண்டிய காரணம், அரசு மக்களின் நம்பிக்கையைத் தவறாகப் பயன்படுத் தாததாகவும், மக்களுக்குப் பதில் கூற வேண்டிய பொறுப்பை ஏற்றிருப்பதாகவும் இருக்க வேண்டும். மதச்சார்பற்றதாக இருக்க வேண்டியதன் தேவை, நம்மைப் போலப் பல இன மக்களும் பல கலாச்சாரங்களும் இணைந்திருக்கும் சமூகத்தில் நமது ஒற்றுமையைக் காப்பாற்ற மதச்சார்பற்ற தன்மையே பொதுத்தன்மையாக இருந்து உதவும். தாராளவாதப் பண்பு இருக்க வேண்டியதற்குக் காரணம், எல்லா மனிதர்களும் வெவ்வேறான தன்மை கொண்டவர்கள் என்பதை உணர்ந்து அவர்கள் எப்படி இருக்கிறார்களோ அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டுமே தவிர, நமது விருப்பத்திற்கு அவர்களை மாற்ற முயலக்கூடாது. பிறகு ஜனநாயகத்தன்மை - அதை நான் உங்களுக்கு விளக்க வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் இந்தப் பத்திரிகையை வாங்குவதை நிறுத்துவதே சிறந்தது.

தி சண்டே லீடர் பெரும்பான்மைக் கருத்தை மறுப்பேதுமின்றி வெளியிட்டுப் பாதுகாப்பை நாடும் பத்திரிகை அல்ல. உண்மை என்னவென்றால் அதுதான் பத்திரிகையை விற்பதற்கான வழி. அதற்கு நேர்மாறாகப் பல ஆண்டுகளாக வெளிவரும் எங்களது கட்டுரைகள் எடுத்துக் காட்டுவது போலப் பலரால் ஏற்றுக் கொள்ள முடியாத கருத்துகளையே நாங்கள் அதிகமும் வெளியிட்டிருக் கிறோம். ஒரு உதாரணத்துக்கு, தொடர்ந்து நாங்கள் பிரிவினை வாதப் பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும் என்று சொல்லி வந்தாலும் அந்தப் பயங்கரவாதத்தின் அடிப்படைக் காரணங்களை ஆராய வேண்டும் என்றும் நாங்கள் சொல்கிறோம். இலங்கையில் நடக்கும் இனப்போராட்டத்தை வரலாற்றுப் பார்வையில் வைத்துப் பார்க்க வேண்டும் என்றும் பயங்கரவாதமாக மட்டும் குறுக்கிப்

பார்க்கக்கூடாது என்றும் நாங்கள் தொடர்ந்து அரசாங்கத்தை வலியுறுத்தி வந்திருக்கிறோம். பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்னும் பெயரில் நடந்துவரும் அரசப்ப யங்கரவாதத்தை எதிர்த்தும் நாங்கள் தொடர்ந்து கலகம் செய்து வருகிறோம். தனது சொந்த மக்களைத் தொடர்ந்து குண்டுவீசிக் கொல்லும் ஒரே நாடு இலங்கைதான் என்ற எங்களது அதிர்ச்சியை நாங்கள் ஒருபோதும் மறைத்ததில்லை. இப்படிப்பட்ட பார்வைகளுக்காக நாங்கள் துரோகிகள் என்று அழைக்கப்படுகிறோம்.இது துரோகம் என்றால் நாங்கள் அந்தப் பட்டத்தைப் பெருமையாக ஏற்றுக் கொள்கிறோம்.

தி சண்டே லீடருக்கு அரசியல் உள்நோக்கம் இருப்பதாகப் பலர் சந்தேகிக்கிறார்கள். எங்களுக்கு அப்படி எதுவும் இல்லை. நாங்கள் எதிர்க்கட்சியை விட அரசாங்கத்தைத் தீவிரமாக எதிர்ப்பதாகத் தோன்றினால் அதற்கு ஒருகாரணம்தான். கிரிக்கெட் உதாரணத்தைக் காட்டுவதற்கு மன்னிக்கவும் - பீல்டிங் சைடிற்குப் பந்து போட்டு எந்தப் பிரயோஜனமும் இல்லை. யு.என்.பி. ஆட்சியிலிருந்த காலகட்டத்தில் நாங்கள் அவர்களது ஊழல்களை வெளிப்படுத்தி அவர்களுக்கு மிகப்பெரிய தொந்தரவாக விளங்கினோம். நாங்கள் தொடர்ந்து வெளியிட்ட புலனாய்வுக் கட்டுரைகளே அந்த அரசாங்கத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று சொல்லலாம்.

எங்களது போர் எதிர்ப்பு நிலைப்பாடு புலிகளின் ஆதரவாகப் புரிந்து கொள்ளப்படக்கூடாது. இந்த உலகில் இதுவரை தோன்றிய அமைப்புகளில் மிகவும் பயங்கரமான ரத்தவெறி கொண்ட ஒரு அமைப்பு, விடுதலைப்புலிகள் அமைப்பே. புலிகளை ஒழிக்க வேண்டும் என்பதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் தமிழர்களின் உரிமைகளை மீறி, அவர்களைக் கருணையின்றிக் கொன்றுகுவிப்பது தவறு மட்டுமல்ல. சிங்களவர்களுக்கு அது அவமானமும்கூட. புத்த தம்மத்தின் பாதுகாவலர்கள் என்று அவர்கள் சொல்லிக்கொள்வது, இந்தக் காட்டு மிராண்டித்தனத்தின் மூலம் என்றென்றைக்குமாகக் கேள்விக்குள்ளாகிவிட்டது. இதில் தடை காரணமாகப் பல விஷயங்கள் வெளிவருவதில்லை.

நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளை ராணுவம் ஆக்கிரமிப்பதன் மூலம் அங்கிருக்கும் தமிழ் மக்கள் தங்கள் சுயமரியாதையை இழந்து இரண்டாம்தரக் குடிமக்களாக வாழவேண்டிய நிலையையே ஏற்படுத்தும். போர் முடிந்ததும் அவர்களுக்கு 'வளர்ச்சி' 'புனர் கட்டமைப்பு' போன்றவற்றைத் தந்து அவர்களைச் சாந்தப்படுத்த முடியும் என நினைக்காதீர்கள். போரின் காயங்கள்

விட்டுச் செல்லும் வடுக்கள் என்றென்றைக்கும் ஆறப்போவ தில்லை. தவிரவும் புலம்பெயர்ந்த தமிழர்களின் மேலதிக வெறுப் பையும் கசப்பையும் நீங்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அரசியல் தீர்வு மூலம் தீர்க்கப்படக்கூடிய ஒரு பிரச்சினை, ஆறாத காயமாகி, தீரவே தீராத பிரச்சினையாக மாறிவிடும். எனக்கு ஏன் இவ்வளவு கோபமும் பதற்றமும் என்றால், எனது தேசத்தின் பெரும்பான்மையான மக்களால் - இந்த அரசாங்கத்தில் உள்ள அனைவராலும் - மிகத் தெளிவான இந்த விஷயத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதால்தான்.

நான் இரண்டுமுறை கொடுமையாகத் தாக்கப்பட்டேன் என்பது பரவலாக அறியப்பட்ட செய்தி. ஒருமுறை எனது வீட்டின் மீது மெஷின் துப்பாக்கி குண்டு மழை பொழிந்தது. அரசாங்கத்தின் உத்தரவாதங்கள் இருந்தாலும் இந்தத் தாக்குதல்களை நடத்தி யவர்கள் பற்றி எந்த விசாரணையும் நடக்கவில்லை; அவர்கள் பிடிக்கப்படவும் இல்லை. இந்தத்தாக்குதல்களில் அரசாங்கத்தின் கை இருக்கும் என்று நம்புவதற்கு எனக்குக் காரணம் இருக்கிறது. இறுதியாக நான் கொல்லப்படும்போது, அரசாங்கம் தான் அந்தக் கொலையை நிகழ்த்தியிருக்கும்.

பொதுமக்கள் அதிகம்பேர் அறியாத முரண்நகையான விஷயம் என்னவென்றால் நானும் மகிந்தவும் கடந்த 23 ஆண்டுகாலமாக நண்பர்களாக இருக்கிறோம். அவரை இப்போதும் அவரது முதல் பெயர் கொண்டு அழைக்கும் மிகச்சிலரில் நானும் ஒருவன். அவருடன் பேசும்போது சிங்கள் 'ஒய' போட்டுப் பேசும் மிகச் சிலரில் நானும் ஒருவன். அவர் பத்திரிகை ஆசிரியர்களுக்காக நடத்தும் கூட்டங்களுக்கு நான் போகாவிட்டாலும் அவரைச் சந்திக்காமல் ஒரு மாதமும் கழிவதில்லை. அதிபரின் இல்லத்தில் பின்னிரவு நேரங்களில் மிக நெருங்கிய நண்பர்களுடனோ தனியாகவோ நான் அவரைச் சந்திப்பது உண்டு. அங்கு நாங்கள் அரசியல் விவாதங்கள் செய்வோம்; கதைகள் பேசுவோம்; பழங்காலத்தை நினைவுகூர்ந்து மகிழ்வோம். அதனால் அவருக்குச் சில விஷயங்கள் கூறுவது இங்கே பொருத்தமாக இருக்கும்.

மகிந்த, நீங்கள் 2005இல் ஜனாதிபதி வேட்பாளராக முந்தியபோது இந்தப் பத்தியில் கிடைத்தது போன்ற ஆதரவு உங்களுக்கு வேறு எங்கும் கிடைக்கவில்லை. எங்களது பத்து வருட காலச் சம்பிர தாயங்களை மீறி நாங்கள் உங்களை முதல் பெயரிட்டு அழைத்தோம். மனித உரிமைகளிலும், சுதந்திரம் சார்ந்த விழுமியங்களிலும்

உங்களுடைய பங்களிப்பு உயரியது என்பதால் புதிய நம்பிக்கையாக உங்களை முன் மொழிந்தோம். ஒரு தவறின் மூலம் நீங்கள் அம்பந்தோதா ஊழலுக்குத் துணை போனீர்கள். பல உள்மனப் போராட்டங்களுக்குப் பிறகு நாங்கள் அந்த ஊழலை அம்பலப் படுத்தினோம். அந்தப் பணத்தைத் திரும்பக் கொடுக்குமாறு உங்களை வற்புறுத்தினோம். பல வாரங்களுக்குப் பிறகு நீங்கள் அதைச் செய்தபோது, உங்களது பெயருக்குப் பெரிய களங்கம் ஏற்பட்டிருந்தது. இன்னும் அதிலிருந்து உங்களால் மீள முடிய வில்லை.

அதிபர் பதவிக்கு நீங்கள் ஆசைப்படவில்லை என்று நீங்களே என்னிடம் ஒருமுறை சொன்னீர்கள். அதன் பின்னால் நீங்கள் போகவேண்டிய தேவை எழவில்லை. அது உங்கள் மடியில் வந்து விழுந்தது. நிர்வாகத்தை உங்கள் சகோதரர்களிடத்தில் விட்டுவிட்டு உங்களது வாழ்வின் மிகப்பெரிய மகிழ்ச்சியான உங்களது மகன்களுடன் நேரம் கழிப்பதே உங்களுக்குப் பிடித்தமானது என்று என்னிடம் சொன்னீர்கள். இன்று எனது மகன்களுக்கும் மகளுக்கும் தந்தை இல்லாத நிலையை ஏற்படுத்தியிருப்பதில் உங்கள் நிர்வாகம் எப்படிச் சிறப்பாகச் செயல்பட்டிருக்கிறது என்பது பார்ப்பவர் களுக்குத் தெரியும்.

என்னுடன் மரணத்தைத் தொடர்ந்து நீங்கள் பொருத்தமான தார்மீகச் சொற்களை உதிர்ப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். காவல் துறை உடனடி விசாரணை செய்யவேண்டும் என்று வற்புறுத்து வீர்கள். ஆனால் நீங்கள் இதற்கு முன்பு உத்தரவிட்ட விசாரணை களைப் போல இதிலிருந்தும் எந்த உண்மையும் வெளிவரப் போவதில்லை. உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் எனது மரணத்துக்குப் பின்னால் யார் இருப்பார்கள் என்று நம் இருவருக்குமே தெரியும். ஆனால் அவரது பெயரைச் சொல்லும் தைரியம் இருக்காது. என் உயிர் மட்டுமல்ல, உங்கள் பாதுகாப்பும் அந்த மௌனத்தில்தான் இருக்கிறது.

உங்களுடைய இளவயதில் நமது நாடு பற்றி உங்களுக்கிருந்த எல்லாக் கனவுகளையும் இந்த மூன்று வருடங்களில் நீங்கள் தவிடு பொடி ஆக்கிவிட்டீர்கள் என்பது வருத்தத்திற்குரியது. இதற்கு முன்பு எந்த ஜனாதிபதியும் செய்யாத வகையில் தேசபக்தியின் பெயரால் நீங்கள் மனித உரிமைகளைக் காலடியில் மிதித்திருக்கிறீர்கள்; ஊழலை வளர்த்தெடுத்திருக்கிறீர்கள்; பொதுமக்கள் பணத்தை வீணடித்திருக்கிறீர்கள். பொம்மைக் கடையில் தனித்து விடப்பட்ட குழந்தையைப்போன்றது உங்கள் நடவடிக்கைகள்.

அந்த உதாரணம் சரியானதல்ல.எந்தக் குழந்தை யும் உங்களைப் போல இந்த மண்ணின்மீது இவ்வளவு ரத்தம் சிந்தப்படுவதற்கான காரணமாகியிருக்காது; குடிமக்களின் உரிமைகளை உங்களைப் போலக் காலடியில் போட்டு மிதித் திருக்காது. இப்போது நீங்கள் அதிகாரத்தின் போதையில் திளைப்பதால் உங்களால் இதைப் பார்க்க முடியாது. ஆனால் எப்போதாவது உங்கள் மகன்களுக்கு நீங்கள் ஏற்படுத்தி வைத்திருக்கும் ரத்தப் பாரம்பரியத்தை நினைத்து நீங்கள் வருத்தப்படுவீர்கள். அது சோகத்தை மட்டுமே தரும். என்னைப் பொறுத்தவரை நான் என்னைப் படைத்தவனை மிகவும் தெளிவான மனத்துடனேயே சந்திக்கப் போகிறேன். உங்களது நேரம் வரும் போது அதையே நீங்களும் செய்ய வேண்டும் என்று நான் விரும்பு கிறேன். என் விருப்பம், அவ்வளவுதான்.

என்னைப் பொறுத்தவரை நான் நிமிர்ந்து நடந்தேன். எந்த மனிதனுக்கும் தலைவணங்கவில்லை என்ற மனநிறைவு இருக்கிறது. இந்தப் பயணத்தை நான் தனித்து மேற்கொள்ள வில்லை. பிற ஊடகங்களைச் சேர்ந்த சக ஊடகவியலாளர்களும் என்னுடன் நடந்தார்கள். அவர்களில் பலர் இறந்து விட்டார்கள், பலர் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். ஒரு காலத்தில் நீங்கள் கடுமையாகப் போராடிய சுதந்திரத்தின்மீது உங்கள் பதவி வீசியிருக்கும் மரணத்தின் சாயல்களுக்குள் சிலர் மெள்ள நடந்து கொண்டிருக்கிறார்கள். உங்களது கண்காணிப்பின் கீழ் எனது மரணம் நடந்தது என்பதை நீங்கள் ஒருநாளும் மறக்க முடியாது. நீங்கள் தீவிரமாக வருத்தப்படுவீர்கள் என்பது எனக்குத் தெரியு மென்றாலும், என்னைக் கொன்றவர்களைப் பாதுகாப்பதைத் தவிர வேறு வழி உங்களுக்கு இல்லை என்பதும் எனக்குத் தெரியும். குற்றமிழைத்தவன் தண்டனை பெறாமல் தப்பிக்க நீங்கள் ஆவன செய்வீர்கள். உங்களுக்கு வேறு வழியில்லை. உங்களுக்காக நான் பரிதாபப்படுகிறேன்; அடுத்தமுறை *சிராந்தி பாவ மன்னிப்புக் கோரப் போகும்போது நீண்ட நேரம் மண்டியிட வேண்டியிருக்கும். தனது பாவங்களுக்காக மட்டுமல்ல, உங்களைப் பதவியில் வைத்திருக்கும் தனது பரந்த குடும்பத்தின் பாவங்களுக்காகவும் பட்டியலிட்டு அவர் மன்னிப்புக் கோர வேண்டியிருக்கும்.

*தி சண்டே லீடரின்* வாசகர்களைப் பொறுத்தவரை எங்களுடைய கொள்கைகளுக்குத் துணை நின்றதற்காக நாங்கள் நன்றியைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும். நாங்கள் அசௌகரியம் ஏற்படுத்தும் பிரச்சினைகளை எடுத்துக் கொண்டோம்; நிற்கக்கூடச் சக்தியற்ற

வர்களுக்கு ஆதரவாக உடன் நின்றோம்; தங்களது வேர்களை மறந்துவிடக்கூடிய அளவுக்கு அதிகாரக் கொழுப்பெடுத்தவர் களுடன் சண்டையிட்டோம்; ஊழல்களையும், கடுமையாக உழைத்துச் செலுத்திய வரிப்பணத்தை நீங்கள் வீணடித்த செயல் களையும் அம்பலப்படுத்தினோம்.அந்தந்தக் காலங்களில் என்ன பிரச்சாரம் நடந்ததோ, அதன் மாற்றுக் கருத்தையும் நீங்கள் அறிந்து கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தோம். இதற்காக நானும் என் குடும்பமும் இப்போது விலை கொடுத்திருக்கிறோம். இந்த விலையை நான் கொடுக்க வேண்டி யிருக்கும் என்பதை மிக நீண்ட காலமாக நான் அறிந்திருந்தேன். இப்போதும் எப்போதும் அதற்குத் தயாராகவே இருந்தேன். இந்த விளைவைத் தடுக்க நான் எதுவும் செய்யவில்லை. எந்த முன் னெச்சரிக்கை நடவடிக்கையோ பாதுகாப்போ எடுத்துக்கொள்ள வில்லை. மனிதக் கவசங்களின் பின் ஒளிந்து கொண்டு ஆயிரக் கணக்கான அப்பாவிகளைக் கொன்று குவித்துக்கொண்டிருக்கும் தன்னைப்போல, நான் பயந்தாங்கொள்ளி அல்ல என்பதை எனது கொலைகாரன் தெரிந்து கொள்ள வேண்டும். கொலை செய்யப் பட்ட அத்தனை பேருக்கிடையில் எனக்கு மட்டும் என்ன தனி இடம்? எனது உயிர் பறிக்கப்படும் என்பது தீர்மானிக்கப் பட்டது, யாரால் என்பதும்கூட. எப்போது என்பது மட்டும்தான் இன்னும் எழுதப்படாமல் இருக்கிறது.

*தி சண்டே லீடர்* இந்த உண்மையான போராட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளும் என்பதும் முன்பே தீர்மானிக்கப்பட்டதுதான். ஏனெனில் இந்தப் போராட்டத்தை நான் தனியாக மேற்கொள்ள வில்லை. *தி சண்டே லீடர்* அழிக்கப்படுவதற்கு முன் எங்களுள் நிறையப்பேரைக் கொல்ல வேண்டியிருக்கும்; அவர்களும் கொல்லப்படுவார்கள். எனது மரணம் சுதந்திரத்தின் தோல்வியாகப் பார்க்கப்படக்கூடாது என்று நான் விரும்புகிறேன். எஞ்சி இருப்பவர்கள் தங்களது முயற்சிகளை மேலும் உத்வேகப்படுத்த எனது மரணம் ஓர் உந்துகோலாக இருக்கவேண்டும். நமது அன்பிற்குரிய தாய்நாட்டில் தனிமனித விடுதலைக்கான ஒரு புதிய யுகத்தை உருவாக்குவதற்கான சக்திகளை எனது மரணம் திரட்டும் என்று நான் நம்புகிறேன். தேசபக்தி என்கிற பெயரில் எத்தனை உயிர்களைக் கொன்றாலும், மனித உணர்வு தழைத்து நிற்கும் என்கிற உண்மையை உங்கள் அதிபருக்கு அது உணர்த்தும் என்று எதிர்பார்க்கிறேன். எல்லா ராஜபக்சேக்களும் இணைந்து எதிர்நின்றாலும், அந்த உணர்வைக் கொன்றுவிட முடியாது.

இத்தனை ஆபத்துகளை நான் ஏன் எதிர்கொள்கிறேன் என்று மக்கள் என்னைக் கேட்கிறார்கள். நான் விரைவில் கொல்லப்படுவேன் என்றும் சொல்கிறார்கள். அது எனக்கும் தெரியும். அதைத் தவிர்க்கவும் முடியாது. ஆனால் இப்போது நாம் பேசவில்லை யென்றால் பேச முடியாதவர்களுக்காகப் பேச யாருமே இருக்க மாட்டார்கள். அவர்கள் சிறுபான்மையினராக இருந்தாலும் சரி, ஒதுக்கப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, பழிவாங்கப்பட்டவர்களாக இருந்தாலும் சரி.

எனது இத்தனை கால ஊடக அனுபவத்தில் என்னை மிக அதிகமாகப் பாதித்தவர ஜெர்மானிய ஆன்மிகவாதி **மார்ட்டின் நெமில்லர்**. அவர் இளம் பிராயத்தில் யூதர்களுக்கு எதிரானவராகவும் ஹிட்லரை மிகவும் மதிக்கிறவராகவும் இருந்தார். நாஜியிசம் ஜெர்மனியை முழுமையாகக் கைப்பற்றிய போதுதான் நாஜியிசம் என்றால் என்ன என்பதை அவர் உணர்ந்தார். ஹிட்லர், யூதர்களை மட்டும் வெளியேற்றவில்லை, மாற்றுக் கருத்துக்கொண்ட எல் லோரையும் ஒழிக்க வேண்டும் என்று நினைத்தார். நெமில்லர் பிறகு பேசத் தொடங்கினார். அந்தக் குற்றத்துக்காக அவர் 1937 லிருந்து 1945 வரை சாச்சென் ஹௌசன் மற்றும் டாச்சௌ வதைமுகாம்களில் அடைக்கப்பட்டார். கிட்டத்தட்ட கொல்லப்பட்டார். நெமில்லர் எழுதிய ஒரு கவிதையை நான் என் பதின்பருவங்களில் முதன்முறையாகப் படித்தேன். எனது மனத்திலிருந்து அது இப்போதும் விலகவில்லை.

*முதலில் அவர்கள் யூதர்களுக்காக வந்தார்கள்*
*அப்போது நான் பேசவில்லை*
*ஏனெனில் நான் யூதன் அல்ல.*
*பிறகு அவர்கள் கம்யூனிஸ்டுகளுக்காக வந்தார்கள்*
*அப்போதும் நான் பேசவில்லை*
*ஏனெனில் நான் கம்யூனிஸ்ட் அல்ல.*
*பிறகு அவர்கள் தொழிற்சங்கவாதிகளுக்காக வந்தார்கள்*
*அப்போதும் நான் பேசவில்லை*
*ஏனெனில் நான் தொழிற்சங்கவாதி அல்ல.*
*பிறகு அவர்கள் எனக்காக வந்தார்கள்*
*அப்போது எனக்காகப் பேசுவதற்கு எவரும் இருக்கவில்லை.*

"வேறு எது நினைவில் இல்லையென்றாலும், இதை மறந்துவிடாதீர்கள்: தி லீடர் உங்களுக்காக இருக்கிறது. நீங்கள் சிங்களராக,

தமிழராக, முஸ்லிமாக, தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவராக, ஓரினச் சேர்க்கையாளராக, அல்லது ஊனமுற்றவராக யாராக இருந்தாலும் சரி, இப்போது நீங்கள் எதிர்பார்க்கும் அதே தைரியத்துடன் தி லீடரின் அலுவலர்கள் உங்களுக்காக எந்தச் சமரசமும் செய்யாமல், யாரிடமும் தலைவணங்காமல், பயப்படாமல் தொடர்ந்து போராடு வார்கள். இந்த உறுதியை அலட்சியமாக எடுத்துக்கொள்ளாதீர்கள். நாங்கள் ஊடகவியலாளர்கள். எத்தகைய தியாகங்களைச் செய் தாலும் அதைப் புகழுக்காகவோ பணத்துக்காகவோ செய்யவில்லை என்பதில் எந்தச் சந்தேகமும் வேண்டாம். அவற்றை உங்களுக் காகவே செய்கிறோம். நீங்கள் அத்தகைய தியாகங்களுக்குத் தகுதி யானவர்தானா என்பது வேறு விஷயம். என்னைப் பொறுத்தவரை, நான் முயன்றேன் என்று கடவுளுக்குத் தெரியும்.

★சிராந்தி - ராஜபக்சேயின் மனைவி

*(நன்றி -- காலச்சுவடு பிப்ரவரி 2009)*



## முள்ளாகக் குத்தும் 'கலைமாமணி' விருது

தரல்

இன்குலாப்

269 மதுரை மீனாட்சிபுரம்

ஐயஞ்சேரி சாலை, ஊரப்பாக்கம் - 603210

காஞ்சி மாவட்டம்

பெறல்

செயலர்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

சென்னை

அன்புடையீர், வணக்கம்.

எனக்களிக்கப்பட்ட 'கலைமாமணி' விருதைப் பின்வரும் காரணங்களால் திருப்பி அனுப்புகிறேன்.

தமிழீழத்தில் நடைபெறும் தமிழினப் படுகொலைக்கு எதிரான தமிழக மக்களின் போராட்டத்தில் முத்துக்குமார் உள்ளிட்ட இளைஞர்கள் உயிர்த்தியாகம் செய்வது தொடர்கிறது. உண்மையான மக்கள் அரசு இங்கு இருக்குமேயானால், இவற்றால் துணுக்குற்றுத் தமிழினத்துக்கு நியாயம் செய்திருக்கும்.

ஆனால் தமிழின ஒழிப்பை முன்னின்று நடத்தும் சிங்களப் பேரினவாத அரசுக்கு, காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு இன்றும் வஞ்சகமாக உதவிக் கொண்டிருக்கிறது. வன்முறையில் நம்பிக்கை அற்றதாகப் பீற்றிக்கொள்ளும் காங்கிரஸ் உள்ளிட்ட கூட்டணிக்கட்சிகள், தமிழக இளைஞர்கள் மேற்கொண்ட உயிர்த் தியாக அகிம்சைப் போராட்டத்தைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை.

**அகிம்சைப் போராட்டங்களைப் பொருட்படுத்தாத வல்லாதிக்க மரபு காங்கிரசுடையது. தமிழ்நாடு என்ற பெயர்சூட்டக் கோரிய தியாகி சங்கரலிங்கனார் உண்ணா நோன்பிருந்து உயிர்துறந்தது காங்கிரஸ் ஆட்சியின்போதுதான். 1965-ல், இந்தி ஆதிக்கத்துக்கு எதிரான உணர்வுகொண்ட தமிழர்கள் தீக்குளித்து உயிர்துறந்த போதும், துப்பாக்கிச்சூடு நடத்தி ரத்தவெறி தீர்த்துக் கொண்டது காங்கிரஸ் ஆட்சிதான். இந்திய அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றக்கோரி திலீபன் யாழ்மண்ணில் உண்ணா நோன் பிருந்து உயிர்நீத்த போதும் பொருட்படுத்தாது, ஈழத் தமிழர்களை ஆயிரக் கணக்கில் கொன்று குவித்ததும், தமிழ்ப் பெண்களை வல்லாங்கு செய்து கொடுமைப்படுத்தியதும் இதே காங்கிரஸ்** ஆட்சிதான்.

இன்று இலங்கையில் போர்நிறுத்தம் கோரித் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் காலவரம்பற்ற உண்ணா நோன்பை மேற்கொண்டிருக்கிறார். அவர் எல்லா நலத்துடனும் நீடூழி வாழவேண்டும். தமிழகச் சட்டமன்றமும் தமிழக மக்களும் ஒருமித்து நடத்திய அனைத்து அறப்போராட்டங்களையும் கண்டு கொள்ளாது, சிங்களப் பேரினவாத அரசுக்குப் படை, கருவி, நிதி முதலியவற்றை வழங்கியது காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசுதான். இது குறித்துத் தமிழக அரசு மேற்கொண்ட செயல்பாடுகள் அனைத்தும், நடுவணரசின் தமிழின விரோத நடவடிக்கைகளுக்கு உதவுவதாகவே முடிந்தன. இந்திய அரசே தமிழகத்தில் நிகழ்ந்த உயிர்த்தியாகங்களைப் பொருட்படுத்தாதபோது, ராஜபக்சே அளவிலான சிங்கள பாசிச அரசு, கலைஞரின் உண்ணா நோன்புப் போராட்டத்தை ஏற்று நியாயம் வழங்கும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? கலைஞர் அவர்களின் இந்தப் போராட்டத்தின் பயனாக, முன்பு கலைஞர் அவர்களே முன்வைத்த இலங்கை அரசுடனான அரசியல் (ராஜீய) உறவைத் துண்டிக்க வேண்டும் என்ற கோரிக்கையையாவது இந்திய அரசு நிறைவேற்றுமா? கலைஞர் அவர்களின் இந்தப் போராட்டம் தமிழகத்தில் மூண்டெரியும் சிங்களப் பேரனவாத எதிர்ப்பையும், இந்திய அரசின் துரோகத்துக்கு எதிரான தமிழ் உரிமை உணர்வையும் மடை மாற்றத்தான் பயன்படும். இன்று கலைஞர் செய்ய வேண்டியது தேர்தலைப் பற்றிக் கவலைப்படாது காங்கிரஸ் கூட்டணியை விட்டு வெளியேறுவதுதான்.

மனிதன், தமிழன், படைப்பாளி என்ற வகையில் இந்தக் கொடுமைகளுக்கு எதிராகச் செயல்பட வேண்டிய கடமை எனக்கும் இருக்கிறது. இந்த வகையில் 2006 - ஆம் ஆண்டு, தமிழக அரசின் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் வழங்கப்பட்ட 'கலை மாமணி' விருது, எனக்குக் கௌரவமாக அல்லாமல், முள்ளாகக் குத்திக்கொண்டிருக்கிறது. இதைத் தமிழக அரசிடமே திருப்பித் தருவதுதான் எனது மனித கௌரவத்தைத் தக்க வைத்துக் கொள்வதாக அமையும்.

தமிழக இளைஞர்கள் நிகழ்த்திய உயிர்த்தியாகங்களுடன் ஒப்பிடும்போது இது நிரம்பச் சாதாரணமானது.

அதனால் இம்மடலுடன் எனக்களிக்கப்பட்ட 'கலைமாமணி' விருதுக்கான தங்கப்பதக்கம், சான்றிதழ் ஆகியவற்றைத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றச் செயலாளர் அவர்களுக்குப் பதிவு அஞ்சலில் திருப்பி அனுப்புகிறேன்

இங்ஙனம்

27.04.2009 **இன்குலாப்**

# பெரியார் வழியா? அண்ணா வழியா?

தமிழக முதல்வர் டாக்டர் திரு.மு.கருணாநிதி அவர்களுக்கு,

வணக்கம்!

கிட்டத்தட்ட பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது தமிழகத்தில், ஈழம் பேசுபொருளாகியிருக்கிறது. எண்பதுகளில் தொடங்கிய உணர்வலைகள், இடையில் போடப்பட்ட அணையை உடைத்து மீண்டும் கிளர்ந்திருக்கிறது. ஈழத்தில் அன்றாடம் குண்டுவீச்சில் சின்னாபின்னமாகும் மக்களின் துயர் பற்றிப் பேசினாலே, அது புலிகளைப் பற்றிய பேச்சாக மாற்றப்பட்டு, ஈழம் குறித்த பேச்சையே தடுத்துவிட வேண்டும் என்ற உங்கள் கூட்டணி நண்பர்களான காங்கிரஸ்காரர்களின் கவலை புரிகிறது.

ஈழத் தமிழர் படுகொலைகளுக்கு இந்தியாவே மௌனசாட்சியாக இருக்கிறது என்ற ஜெயலலிதாவின் அறிக்கையின் விளைவாக, அனைத்துக் கட்சிக்கூட்டத்தைக் கூட்டினீர்கள். 'இருவார காலத்துக்குள் போர் நிறுத்தப்படாவிட்டால், நாற்பது எம்.பி.க்களும் ராஜினாமா' என்றீர்கள்.

காட்சி விரைவாகவே மாறியது. வைகோ, கண்ணப்பன், அமீர், சீமான் என அடுத்தடுத்துக் கைதுகள் நடந்தன. அந்தக் கைதுகளுக்குக் காரணம் ஜெயலலிதா என்று பெரும்பாலானோர் நம்பினார்கள். நீங்களும் ஜெயலலிதாவும் காங்கிரசும் ஆடிய சூதாட்டத்தில் பலியாடுகள்தான்அமீரும் சீமானும். உங்கள் பழைய சகாவான ராமதாஸைப் பாருங்கள். டெல்லியில் புலிகளைப் போராளிகள் என்கிறார். சென்னையில் அவர் சார்பில் பேசுகிற ஜி.கே.மணி, 'புலிகளைப் பார்த்தது கூடக் கிடையாது- எங்களுக்கும் புலிகளுக்கும் எந்த சம்பந்தமுமில்லை' என்று சட்டத்துக்கு பயந்து ராமதாஸின் கருத்துக்கு அந்தர் பல்டி அடிக்கிறார். ஒருமுறை நீங்கள் சொன்னீர்கள், 'தேர்தலில் தோற்றால் பெரியார் வழி; ஜெயித்தால் அண்ணா வழி'. இன்னும் இரண்டரை ஆண்டுகள் மாநில ஆட்சியில் பாக்கியிருக்கும் சூழலில் நீங்கள் பெரியார் வழிக்குத் திரும்பி விட்டதாகவே நினைத்தேன்.

நாளிதழ்களைப் பார்த்தால், நீங்கள் ஈழ மக்களுக்காகச் சுறுசுறுப்பாக நிதி வசூலித்துக் கொண்டிருக்கிறீர்கள்! ராஜினாமா கடிதத்தை முதல் எம்.பி.யாக உங்களிடம் கொடுத்த கனிமொழி ஈழத்துக்கு அரிசியும் ஆடைகளும் அளிக்கிறார் உங்களிடம்! அப்படி யென்றால், போர் நிறுத்தக் கோரிக்கையும் கெடுவும் என்னவானது?

மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி சென்னைக்கு வந்து பேசுகிறார்... பஸில் ராஜபக்சேவோடு டெல்லியிலேயே பேசி முடிவெடுத்து, அதை ஒரு கூட்டறிக்கையாக இரு நாடுகளும் வெளியிட்ட பிறகு, சென்னைக்கு வந்து ஒரு தகவலாக மட்டுமே உங்களிடம் சொல்லி, உங்கள் ஒப்புதலையும் பெற்றுச் செல்கிறார். 'அதுவே எங்கள் கோரிக்கைக்கு வெற்றி' என்கிறீர்கள் நீங்கள்! என்ன பொருள்..? ஈழத் தமிழர் மீதான தாக்குதல் உங்கள் கெடு தேதி முடியும்போது நிறுத்தப்பட்டுவிட்டதா?

சரியாக, 23 வருடங்களுக்கு முன் 4.11.85 தேதியிட்ட 'முரசொலி' யில் உடன்பிறப்புக்கு எழுதிய கடிதத்தில் (மாவீரன் நெடுமாறன் மேற் கொண்ட ஈழப்பயணத்தை வாழ்த்தி எழுதிய மடல்) நீங்கள் சொன்னது உங்களின் நினைவாற்றல் பதிவுகளில் நிச்சயம் அப்படியே தான் இருக்கும் என்று எனக்குத் தெரியும்.

"எங்களுக்குத் தமிழ் ஈழம் தவிர வேறெதுவும் தேவையில்லை என்று இளஞ்சிறார்- சிறுமியர் முதல் எழுபது எண்பதை நெருங்கிய முதியோர் வரையில் அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொன்னதை நெடுமாறனின் செவிகள் வாயிலாக நானும் செவிமடுத்தேன்! 'எங்களுக்குத் தனி நாடு கிடைக்க எங்கள் போராளிகளை ஊக்கப் படுத்துங்கள்! அவர்களை நிர்ப்பந்தித்துப் பிரச்சினையைத் தீர்க்க முயலாதீர்கள்! தனிநாடே எங்கள் லட்சியம்! உங்களால் முடியா விட்டால், எங்கள் தலையில் குண்டுகளைப் போட்டு இலங்கைத் தமிழ் இனத்தையே அழித்து விடுங்கள்!' இந்தச் செய்தியை நெடுமாறன் அவர்களிடம் அழுது புலம்பியவாறு சொல்லுகிற காட்சியை இருதயத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டுதான் பார்க்க முடிந்தது" என்று நீங்கள் எழுதியிருந்தீர்கள்.

85 க்குப் பிறகான சில நிகழ்வுகளின் காரணமாக 'போராளிகளை ஊக்கப்படுத்துவது' என்ற நிலைப்பாடு கேள்விக்குறியாகி இருக்க லாம். ஆனால், ஈழத் தமிழனின் உயிர்குடிக்கும் சிங்கள ராணுவத்தை ஊக்கப்படுத்துகிற காரியத்தை மறந்தோ, மெத்தனம் காட்டியோ நாம் செய்யலாமா?

அரசியல் லாபம் எதுவும் கருதாத ஒரு சாமானியத் தமிழனாக நான் உங்களிடம் கேட்பதெல்லாம் ... நடந்தது நடந்ததாகவே இருக் கட்டும். மத்திய அரசுக்கு வைத்த கோரிக்கைகள் கோரிக்கையாகவே இருக்கட்டும்.

இப்போது நீங்கள் திரட்டுகிறீர்களே... பணம், உடை, உணவு, மருந்து..! இதையெல்லாம் இலங்கை அரசே 'முறையாகத் தமிழ் மக்களுக்கு விநியோகிப்போம்' என்று சொல்வதை நீங்கள் நிஜமா கவே நம்புகிறீர்களா? அல்லது 'ஐ.நா. அமைப்புகள் மூலமும் செஞ் சிலுவைச் சங்கம் மற்றும் மத்திய அரசின் மூலமாகவும் விநி யோகிக்க ஏற்பாடாகியிருக்கிறது' என்று நீங்கள் கூறுகிறீர்களே.. அதை யாவது நிறைவேற்ற இலங்கை அரசு வழிவிடும் என்று நம்புகிறீர்களா?

ஈழத்தின் வடக்குப்பகுதி மீது கொடூரமான போரை சிங்கள ராணுவம் தொடங்கியபோது முதல் வேலையாக அது செய்த வேலை, அங்கு பணியாற்றிக் கொண்டு இருந்த தன்னார்வக் குழுக் களையும் மனித உரிமைப் பணியாளர்களையும் வெளியேற்றியது தானே! அதன் விளைவாகத்தானே இன்று நடுநிலைப் பார்வை யாளர்கள் யாருமின்றி, தங்கள் துன்பத்தைத் தடுக்க ஆளுமின்றி, உயிர் பிழைத்த மிச்சம் மீதி ஈழத் தமிழர்கள் காடுகளில் போய்த் தஞ்சம் அடைந்திருக்கிறார்கள்! இந்நிலையில், நீங்கள் அனுப்புகிற நிதி சிங்கள அரசின் ஆயுதச் செலவுக்குப் போய் விடாது என்பதற்கு என்ன உத்தரவாதம் வைத்திருக்கிறீர்கள்? இந்திய அரசு கொடுத்த ராணுவ உதவியால் தமிழ் மக்கள் மீது குண்டு வீசியவர்கள், இனி தமிழக மக்கள் கொடுக்கிற பணத்தையும் ஈழத்தமிழனுக்கு எதிராகப் பாய்ச்ச மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?!

இதற்கெல்லாம் உங்கள் பதில் அமைதி என்பதாக இருக்கலாம்! அதன் பின்னணி, மத்தியில் ஆளும் காங்கிரசின் மறைமுக நெருக் கடியாகவும் இருக்கலாம். ஆனால், இந்த காங்கிரசின் கூட்டணியும், அதன் நிழலில் இங்கே வாய்த்திருக்கும் இடைஞ்சலற்ற ஆட்சியும் நிரந்தரமல்ல என்பது உங்களுக்குத் தெரியாததா என்ன? என்றும் உங்களோடு இருக்க வேண்டியது தமிழ் இனத்தின் உணர்வு பூர்வமான ஆதரவு அல்லவா?

சிந்தியுங்கள்.. அதன்பிறகே நிதியைச் சேர்ப்பியுங்கள்..!

உங்கள் மீது தீரா அன்புள்ள,

**போருக்கு எதிரான ஒரு தமிழன்**

*(நன்றி -- ஜூனியர் விகடன் 05.11.2008)*

❖ ❖ ❖

# விதியே விதியே என்செய் நினைத்திட்டாய் என் தமிழ்ச் சாதியை...

அன்பார்ந்த உழைக்கும் தமிழ் மக்களே...

வணக்கம். வேலைக்குப் போகும் அவசரத்திலிருக்கும் உங்களை இப்படிச் சந்திக்க நேர்ந்ததற்கு நான் வருந்துகிறேன். ஆனால் வேறு வழியில்லை. என் பெயர் முத்துக்குமார். பத்திரிகையாளர் மற்றும் உதவி இயக்குநர். தற்சமயம் சென்னையில் உள்ள பத்திரிகை ஒன்றில் வேலை செய்து வருகிறேன்.

உங்களைப் போல்தான் நானும் தினமும் செய்தித்தாள்களையும் இணையத்தையும் பார்த்துப் பார்த்து, தினம் தினம் கொல்லப்பட்டு வரும் எம் சக தமிழர்களைக் கண்டு சாப்பிட முடியாமல், தூங்க முடியாமல், யோசிக்க முடியாமல் தவிக்கும் எத்தனையோ பேரில் ஒரு சாமானியன்.

வந்தாரை வாழ வைக்கும் செந்தமிழ்நாட்டில் சேட்டு என்றும் சேட்டனென்றும் வந்தவனெல்லாம் வாழ, சொந்த இரத்தம் ஈழத்தில் சாகிறது.அதைத் தடுத்து நிறுத்துங்கள் என்று குரல் கொடுத்தால், ஆம் என்றோ இல்லை என்றோ எந்தப் பதிலும் சொல்லாமல் கள்ள மௌனம் சாதிக்கிறது இந்திய ஏகாதிபத்தியம். இந்தியாவின் போர் ஞாயமானதென்றால் அதை வெளிப்படையாகச் செய்ய வேண்டியது தானே... ஏன் திருட்டுத்தனமாகச் செய்ய வேண்டும்?

ராஜீவ் காந்தியைக் கொன்றார்கள் என்ற சொத்தை வாதத்தை வைத்துக்கொண்டு, சில தனி நபர்களின் பழிவாங்கல் சுயநல நோக்கங்களுக்காக ஒரு பெரும் மக்கள் சமூகத்தையே கொன்று குவிக்கத் துடிக்கிறது இந்திய அதிகார வர்க்கம்.

ராஜீவ் காந்தி கொலையில் விடுதலைப்புலிகள் மட்டும் குற்றம் சாட்டப் படவில்லை. தமிழக மக்களையும் குற்றவாளிகள் என்று குற்றம் சாட்டியது ஜெயின் கமிசன் அறிக்கை. அப்படியானால் நீங்களும் ராஜீவ் காந்தியைக் கொலை செய்த கொலைகாரர்கள் தானா?

ஜாலியன் வாலாபாக்கில் வெள்ளையன் கொன்றான் என்றார்களே, இவர்கள் முல்லைத்தீவிலும் வன்னியிலும் செய்வதென்ன? அங்கு

கொல்லப்படும் குழந்தைகளைப் பாருங்கள். உங்கள் குழந்தைகள் நினைவு வரவில்லையா? கற்பழிக்கப்படும் பெண்களைப் பாருங்கள். உங்களுக்கு அதுபோன்ற வயதில் ஒரு தங்கையோ அக்காவோ இல்லையா? ராஜீவ் கொல்லப்பட்டபோது காங்கிரசின் முக்கியத் தலைவர்கள் ஏன் அவருடன் இல்லை, கூட்டணிக் கட்சித் தலைவி யான ஜெயலலிதா, தமிழ்நாட்டில் ராஜீவ் கலந்து கொள்ளும் ஆகப்பெரிய பொதுக்கூட்டத்தில் ஏன் பங்கெடுக்கப் போகவில்லை என்பது போன்ற கேள்விகள் கேட்கப்படாமலும், இவர்களால் பதில் சொல்லப்படாமலும் கிடக்கின்றன.

**மக்களே யோசியுங்கள். இவர்கள்தான் உங்கள் தலைவர்களா? பணம், அடியாள் பலம் ஆகியவற்றைக் கொண்டு மிரட்டல் அரசியல் நடத்திவரும் இவர்கள் நாளை நம்மீதே பாயமாட்டார்கள் என்பதற்கு என்ன நிச்சயம்? அப்படிப் பாய்ந்தால் யார் நம் பக்கம் இருக் கிறார்கள்?**

கலைஞரா?.... நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா செய் வார்கள் என்று அப்பொழுதும் அவர் அறிவிப்பார். பிறகு, மத்திய அரசைப் புரிந்து கொள்வார் (?!). பிறகு மறுபடி சரியான முடிவை எடுக்க வேண்டி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்று வார்- இந்த மாசம், இந்த வாரம், இதுவரைக்கும் என்ன எவனும் தொட்டதில்ல என்கிற 'வின்னர்' பட வடிவேல் காமெடியைப் போல.

காகிதம் எதையும் சாதிக்காது மக்களே! இப்பொழுது, உலகத் தமிழினத் தலைவர் என்ற பட்டப் பெயரைச் சூடிக்கொள்ளவும், தமிழ் நாட்டில் இருக்கும் பணத்தையெல்லாம் தன் குடும்பத்திற்கே உரித்தாக்கவும் விரும்புகிற தேர்தல் காலத் தமிழர் கலைஞர், மக்களின் கோபத்தை எதிர்கொள்ளப்பயந்து மருத்துவமனையில் போய் ஒளிந்து கொண்டுள்ளார். தனது மந்திரிகளுக்கு அவசியப் பட்ட துறைகளுக்காகச் சண்டப்பிரசண்டம் செய்து சதிராடிய இந்த சூரப்புலி உண்மையில் தமிழுக்காகவோ தமிழருக்காகவோ செய்த தென்ன? ஒருமுறை அவரே சொன்னார், 'தேனெடுத்தவன் புறங் கையை நக்காமலா இருப்பான்' என்று. இவருடைய பம்மலாட்டத் தையெல்லாம் பார்த்தால் ரொம்பவே நக்கியிருப்பார் போலிருக் கிறதே...

பட்டினிப் போராட்டத்தின் மூலம் களம் இறங்கியிருக்கும் சட்டக்கல்லூரி மாணவர்களே... உங்கள் போராட்டம் வெற்றிபெற சக தமிழனாக நின்று வாழ்த்துகிறேன். உங்களோடு களம் இறங்க முடியாமைக்கும் வருந்துகிறேன். ஈழத்தமிழர் பிரச்சினை

என்றில்லை. காவிரியில் தண்ணீர் விடச் சொல்லும் போராட்டமென்றாலும் சரி, தமிழ்நாட்டிற்காதரவான போராட்டம் எதுவாக இருந்தாலும் சரி, முதலில் களம் காண்பவர்கள் நீங்களும் வழக்கறிஞர்களும்தான். இந்த முறையும் நான்கு மாதங்களுக்கு முன்பாகவே களத்தில் இறங்கியவர்கள் இந்த இரண்டு தரப்பும் தான்.

உங்களுடைய இந்த உணர்வை மழுங்கடிக்கவே திட்டமிட்டு இந்திய உளவுத்துறை ஜாதிய உணர்வைத் தூண்டிவிட்டு, அம்பேத்கர் சட்டக்கல்லூரி அனர்த்தத்திற்கு வழிவகுத்திருக்கலாம் என்பது என் சந்தேகம். உலகம் முழுக்க மக்களுக்கான புரட்சிகரப் போராட்டங்களில் முன்கையெடுப்பவர்களாக இருந்தது மாணவர்கள் என்கிற ஜாதிதான். அதேபோல், தமிழ்நாட்டிலும் உங்களுக்கு முந்திய தலைமுறையொன்று இதுபோன்ற ஒரு சூழலில், இதுபோல் குடியரசு தினத்திற்கு முன்பு களம் கண்டுதான் காங்கிரஸ் உள்ளிட்ட தேசியக் கட்சிகளைத் தமிழ் மண்ணிலிருந்து விரட்டியடித்தது.

ஆக, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தருணம் உங்கள் கைகளுக்கு மறுபடியும் வந்து சேர்ந்திருக்கிறது. பொதுவாக உலகச் சரித்திரத்தில் இப்படியெல்லாம் நடப்பதில்லை. **கடந்தமுறை நடந்ததுபோல், உங்கள் போராட்டத்தின் பலன்களைச் சுயநல மிகள் திருடிக் கொள்ள விட்டுவிடாதீர்கள். போராட்டத்தின் பலன் களை அபகரித்து ஆட்சிக்கு வந்த தி.மு.க. முதலில் செய்த விசயம் மாணவர்கள் அரசியல் ஈடுபாடு கொள்ளக்கூடாது எனச் சட்டம் போட்டதுதான். ஆட்சிக்கு வந்த அது, தமிழின உணர்வுகளை மழுங்கடித்து, ஒட்டுமொத்தத் தமிழினத்தையும் மகஜர் கொடுக்கும் ஜாதியாக மாற்றியது. அந்த மரபை அடித்து உடையுங்கள். மனு கொடுக்கச் சொல்பவன் எவனாக இருந்தாலும், அவனை நம்பாதீர்கள். நமக்குள்ளிருக்கும் ஜாதி, மதம் போன்ற வேறுபாடு களை எரித்துக் கொள்ள இதுதான் தருணம்.**

உண்ணாவிரதத்தையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு களம் காணுங்கள். உண்மையில், இலங்கையில் இந்திய இராணுவ நடவடிக்கை என்பது தமிழர்களுக்கெதிரானது மட்டுமல்ல. ஒட்டு மொத்த இந்தியர்களுக்குமே எதிரானது. சிங்களச் சிப்பாய்களிடம் கற்றுக் கொள்கிற பாலியல் நுணுக்கங்களைத்தானே அவர்கள் அசாமில் அப்பாவிப் பெண்களிடம் பரிசோதித்துப் பார்த்தார்கள். விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கான சிங்கள வன்முறை நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டு, வடகிழக்கு மாநிலப் போராளிகளிடம் பயன் படுத்திக் கூர் பார்த்தார்கள்! போதாதற்கு, ஹைட்டியில் சமாதானப்

பணிக்காக அனுப்பப்பட்ட ஐ.நா.வின் இராணுவத்திலிருந்து இந்திய மற்றும் இலங்கை இராணுவம் அவரவர்களுடைய பாலியல் நடவடிக்கைகளுக்காக அடித்துத் துரத்தப்பட்டதிலிருந்து என்ன தெரிகிறது - இந்தக் கூட்டணிக் கொள்கைக் கூட்டணியல்ல, பாலியல் கூட்டணி என்றல்லவா! ஆக, இந்திய - இலங்கை **இராணுவக்கூட்டு என்பது இந்தியர்களின் அடிப்படை மனித உரிமைகளுக்கும்கூட எதிரானதாக இருப்பதால், அகில இந்திய அளவில் மாணவர்கள், ஜனநாயக அமைப்புகளையும் உங்கள் பின்னால் திரட்டுங்கள்.**

இதையெல்லாம் மக்களே செய்ய முடியும். அவர்கள் சரியான தலைமை இல்லாமல் இருக்கிறார்கள். உங்கள் மத்தியிலிருந்து தலைவர்களை உருவாக்குங்கள். உங்கள் போராட்டத்தைச் சட்டக் கல்லூரி மாணவர்கள் என்ற இடத்திலிருந்து அனைத்து மாணவர்கள் என்று மாற்றுங்கள்.உங்களிடமிருக்கும் வேகமும் மக்களிட மிருக்கும் கோபமும் இணைந்து தமிழக வரலாற்றை அடியோடு மாற்றட்டும். ஆள்பலம், பணபலம், அதிகாரவெறியை உடைத்து எறியுங்கள். உங்களால் மட்டுமே இது முடியும். 'நாங்கள் தமிழ் மாணவர்கள், தமிழ் நாட்டின் உயிரானவர்கள், இங்கு தமிழினம் அமைதி கொண்டிருந்தால் ஏடுகள் தூக்கிப் படிப்போம். எங்கள் தமிழர்க்கு இன்னல் விளைவித்தால் எரிமலையாகி வெடிப்போம்' என்ற காசி ஆனந்தனின் பாடலை ஓர் அறிவாயுதமாக ஏந்துங்கள்.. என் உடலைக் காவல்துறை அடக்கம் செய்து விட முயலும். விடாதீர்கள். என் பிணத்தைக் கைப்பற்றி, அதைப் புதைக்காமல் ஒரு துருப்புச் சீட்டாக வைத்திருந்து, போராட்டத்தைக் கூர்மைப் படுத்துங்கள். எனக்குச் சிகிச்சையோ போஸ்ட் மார்ட்டமோ செய்யப் போகும் தமிழ்நாடு மருத்துவக் கல்லூரி மாணவர்களே... உங்கள் கையால் அறுபட நான் புண்ணியம் செய்திருக்க வேண்டும். காரணம், அகில இந்திய அளவில், மருத்துவக் கல்வியில் இட ஒதுக் கீட்டுக்கு எதிராக உயர்சாதி மாணவர்கள் போராடிக் கொண்டிருக்க, தன்னந்தனியாக நின்று, மருத்துவக் கல்வியில் இட ஒதுக்கீட்டுக்கு ஆதரவாகப் போராடியவர்களல்லவா நீங்கள்? எனக்குச் செய்வ தெல்லாம் இருக்கட்டும். நம் சகோதரர்களான ஈழத் தமிழர்களுக்கு உங்கள் பங்குக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?

தமிழீழம் என்பது தமிழீழத்தின் தேவை மட்டுமே அல்ல, அது தமிழகத்தின் தேவையும்கூட. காரணம், இராமேஸ்வரம் மீனவர்கள். உலகில் ஆடுமாடுகளைப் பாதுகாப்பதற்குக்கூட சட்டமும் அமைப்பு களும் இருக்கின்றன. இராமேஸ்வரம் தமிழனும் ஈழத்தமிழனும்

மாட்டைவிட, ஆட்டைவிடக் கேவல மானவர்களா? எல்லை தாண்டிப் போகும் மீனவர்கள், புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் தாக்கப்பட்டு வருவதாக இந்திய மீடியா திட்டமிட்டுப் பிரச்சாரம் செய்து வருகிறது. இவர்களெல்லாம் செய்தித்தாளே படிப்ப தில்லையா? சென்னையில் கடற்கரைகளில் அடிக்கடி தைவான் நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் வழி தெரியாமல் வந்தவர்கள் என்று கைது செய்யப்படுகிறார்கள். பல ஆயிரக் கணக்கான கிலோ மீட்டர்கள் தூரத்திலிருக்கும் தைவான் மீனவன் வழிதவற முடியு மென்றால், வெறும் பன்னிரெண்டு மைல் தூரத்திற்குள் இராமேஸ் வரம் தமிழன் வழி தவறுவது நம்புவது மாதிரியில்லையாமா?

**தமிழ் நாட்டில் வாழ்ந்து வரும் வெளிமாநிலங்களைச் சேர்ந்த சகோதரர்களே!**

உங்கள் சொந்த மாநிலத்தில்கூட இல்லாத நிம்மதியோடும் பாதுகாப்போடும் வாழக்கூடிய மாநிலம் தமிழ்நாடுதான் என்பது உங்களுக்கு அனுபவத்தால் தெரிந்திருக்கும். நாங்கள் இன்று பெரும் இக்கட்டை எதிர்நோக்கியிருக்கிறோம். ஈழத்திலிருக்கும் எங்கள் சகோதரர்கள் இந்தியர் என்னும் நம் பெயரைப் பயன்படுத்தித்தான் நம் அரசால் கொலை செய்யப்படுகிறார்கள். இந்தப் போராட்டத்தில் நாங்கள் தனித்துவிடப்படுவதை இந்திய அரசு விரும்புகிறது. அப்படி ஆகக்கூடாதென நாங்கள் விரும்புகிறோம். ஆகவே, போராடிக்கொண்டிருக்கும் எங்கள் சகோதரர்களுக்கு உங்கள் ஆதரவும் உள்ளதென மத்திய அரசுக்குத் தெரியப்படுத்துங்கள். அரசுகளில் அங்கம் வகிக்கக்கூடிய உங்கள் தேசிய இனங்களைச் சேர்ந்தவர்களை வற்புறுத்துங்கள். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கப் போகும் உங்களுடைய அந்த நடவடிக்கை, எம் கரத்தைப் பலப்படுத்துவதோடு, எதிர்காலத்தில், ஒரு நவ நிர்மாண் சேனாவோ, ஸ்ரீராம் சேனாவோ தமிழ் நாட்டில் உருவாக விருக்கும் ஆபத்தைத் தவிர்க்கும் என்பதே என் கருத்து.

**தமிழ்நாடு காவல்துறையிலிருக்கும் இளைஞர்களே...**

உங்கள் மீது எனக்கு இருக்கும் மதிப்பு கொஞ்சம் நஞ்சமல்ல. காரணம், தமிழுக்காக மற்றவர்கள் என்ன செய்தார்களோ, அலுவலர்களை **ஐயா** என அழைப்பது போன்ற நடைமுறை ரீதியில் தமிழை வாழவைத்துக் கொண்டிருப்பவர்கள் நீங்கள்தான். மக்களுக் காகப் பாடுபட வேண்டும், சமூக விரோதிகளை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பது போன்ற உன்னத நோக்கங்களுக்காகத்தான் நீங்கள் காவல் துறையில் இணைந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

ஆனால், அதைச் செய்ய விடுகிறதா ஆளும் வர்க்கம்? உங்களைச் சிறுசிறு தவறுகள் செய்ய விடுவதன்மூலம் தன்னுடைய பெருந் தவறுகளை மறைத்துக் கொள்ளும் அதிகார வர்க்கம், உங்களை எந்த மக்களுக்காகப் பாடுபட நீங்கள் விரும்பினீர்களோ, எந்த மக்களுக் காக உயிரையும் கொடுக்கலாம் என்று தீர்மானித்தீர்களோ, அந்த மக்களுக் கெதிராகவே பயிற்றுவிக்கப்பட்ட அடியாள்களாக மாற்று கிறது. டெல்லி திகார் ஜெயிலைப் பாதுகாப்பது தமிழகப் போலீஸ் தான். இந்தியாவின் பழமையான காவல்துறையான தமிழகக் காவல்துறை சிறப்பாகச் செயல்பட்டு வரும் காவல்துறைகளில் ஒன்று. ஆனால் அந்த மதிப்பை உங்களுக்குக் கொடுக்கிறதா இந்திய அரசாங்கம்! மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் தமிழகம் வந்து திரும்பிப் போகையில், சென்னை விமான நிலையத்தில், அவருக்கான பாதுகாப்பை வழங்க அனுமதிக்க மறுத்திருக்கிறார்கள் மத்திய ரிசர்வ் அதிகாரிகள்.

ஏனென்று கேட்டதற்கு, "ராஜீவ் காந்தியை நீங்கள் பாதுகாத்த லட்சணம்தான் தெரியுமே" என்று கிண்டல் செய்திருக்கிறார்கள். ராஜீவ் காந்தியைத் தமிழகக் காவல்துறையால் காப்பாற்ற முடிய வில்லை என்பது எவ்வளவு உண்மையோ, அதே அளவுக்கு உண்மை, ராஜீவோடு இறந்தவர்களில் பலர் அப்பாவி போலீஸ் காரர் கள் என்பது. உங்கள் அர்ப்பணிப்புணர்வு கேள்விக்கப்பாற் பட்டது. ஆனால் மேற்படி வெண்ணெய் வெட்டி வீரர்கள் - அதுதான், இந்திய உளவுத்துறை - ராஜீவின் உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்ற தகவலை அறிந்தபோதும் மெத்தனமாக இருந்தது என்பது பின்னர் அம்பலமானதல்லவா... இதுவரை காலமும் நீங்கள் அப்பாவி மக்களுக்கெதிராக இருந்தாலும், தமிழகத்தின் பெருமைகளில் ஒன்றாகத்தான் இருக்கிறீர்கள். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தருணத்தில், நீங்கள் மக்கள் பக்கம் இருந்தால் மட்டுமே மக்களிடம் இழந்திருக்கிற பெருமையை மீட்டெடுக்க முடியும். ஒருமுறை சக தமிழர்களுக்காக அர்ப்பணித்துப் பாருங்கள். மக்கள் உங்களைத் தங்கத்தட்டில் வைத்துத்தாங்குவார்கள். தமிழனின் நன்றி உணர்ச்சி அளவிடற்கரியது. தன்னுடைய சொந்தக் காசை வைத்து அணை கட்டிக் கொடுத்தான் என்பதற்காகவே அவனுக்குக் கோயில்கட்டி, தன் பிள்ளைகளுக்கு அவன் பெயரை வைத்துக் கொண்டாடிக் கொண்டிருக்கிறான் முல்லையாற்றின் மதுரை மாவட்டத்தமிழன். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், கொந்தளிக்கப் போகும் தமிழகத்தில், மத்திய அரசு அதிகாரிகளுக்கு ஒத்துழைக்க மறுப்பது. ரா, சி.பி.ஐ போன்ற அமைப்புகளைச்

சேர்ந்தவர்களை உள்ளூர் மக்களுக்கு அடையாளம் காட்டுவதும்தான். இதை மட்டுமாவது செய்யுங்கள். மற்றதை மக்கள் பார்த்துக் கொள்வார்கள்.

## களத்தில் நிற்கும் தமிழீழ மக்களே, விடுதலைப் புலிகளே...

அனைத்துக் கண்களும் இப்போது முல்லைத்தீவை நோக்கி, தாய்த்தமிழகம் உணர்வுப்பூர்வமாக உங்கள் பக்கம்தான் நிற்கிறது. வேறு ஏதாவது செய்ய வேண்டும் எனவும் விரும்புகிறது. ஆனால் என்ன செய்வது? உங்களுக்கு அமைந்தது போன்ற உன்னதத் தலைவன் எங்களுக்கில்லையே... ஆனால் நம்பிக்கையை மட்டும் கைவிடாதீர்கள். இது போன்ற கையறுகாலங்கள்தான், கைவிடப் பட்ட நிலைமைக் காலங்கள்தான் சிறந்த மக்கள் தலைவனைக் கண்டு பிடித்திருக்கின்றன. தமிழகத்திலிருந்து அப்படி ஒருவர் இந்தக்காலத்தில் உருவாகலாம். அதுவரை, புலிகளின் கரங்களைப் பலப்படுத்துங்கள். 1965 இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போரை சில சுயநலமிகளின் கையில் ஒப்படைத்ததால்தான் தமிழக வரலாறு கற்காலத்திற்கு இழுபட்டுள்ளது. அந்தத் தவறை நீங்கள் செய்து விடாதீர்கள்.

## அன்பிற்குரிய சர்வதேச சமூகமே, நம்பிக்கைக்குரிய ஒபாமாவே...

உங்கள் மீது எங்களுக்கு இன்னும் நம்பிக்கை இருக்கிறது. ஆனால் இறையாண்மை கொண்ட ஒரு குடியரசு தம் குடிமகனை இன ஒதுக்கல் மூலமாகக் கொடுமைப்படுத்தாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. வசதிக்காக அமெரிக்காவின் கடந்த காலத்தையே எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். உலகப் புகழ் பெற்ற குத்துச்சண்டை மாவீரன் முகமதலி சொன்னானே,"என் சருமத்தி லிருக்கும் கொஞ்ச வெண்மையும் கற்பழிப்பின் மூலமாகவே வந்திருக்குமென்று..." நீங்கள் அமைதியாக இருக்கும் வரை இந்தியா வாய் திறக்காது. ஒட்டுமொத்தத் தமிழர்களும் அழிக்கப்பட்ட பிறகு வேண்டுமானால் அது நடக்கும். அதுவரை, இந்தியாவின் வாயைப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறீர்களா?

வன்னியில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர்தான் நடக்கிறது என்கிறார்கள். புலிகள் கேடயமாகப் பயன்படுத்துகிறார்கள் என் கிறார்கள். அப்படியானால் அரசு சொன்ன பகுதிக்கு வந்த மக்களை ஏன் கொலை செய்தார்கள்? இது ஒன்று போதுமே, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளைச் சார்ந்து நின்றாலும் சரி, இலங்கை அரசைச்

சார்ந்து நின்றாலும் சரி, தமிழர்கள் என்ற காரணத்திற்காகவே அவர்கள் கொல்லப்படுகிறார்கள் என்பதற்கு. இது இனப் படு கொலை இல்லையா? இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆயுதம் கொடுத்தும், ஜப்பான் பணம் கொடுத்தும், கூடுதலாக, இந்தியா நாட்டாமை செய்தும் தமிழர்களைக் கொல்கின்றனரென்றால், நீங்கள் உங்கள் மௌனத்தின் மூலமாகவும் பாராமுகத்தின் மூல மாகவும் அதே கொலையைத்தான் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை ஏன் உணரவில்லை? ஆயுதம் தாங்கிப் போராடுவதால் மட்டுமே யாரும் தீவிரவாதியாகிவிட மாட்டார்கள். அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார். மறத்திற்கும் அஃதே துணை என்று பாடியுள்ளார் எங்கள் திருவள்ளுவர்.

புலிகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்கிறார் ஜெயலலிதா- என்னவோ பிரச்சினையே புலிகள் ஆயுதம் எடுத்ததால் தான் வந்தது என்பதைப் போல. உண்மையில் **புலிகள் தமிழீழ இன அழிப்பிலிருந்து உருவாகி வந்தவர்களே தவிர, காரண கர்த்தாக்கள் அல்லர்.** (They are not the reason; just an outcome)

இந்திய அரசு இந்தப் பிரச்சினையில் ஈடுபட்டிருப்பது வெளிப் படையாகாத வரை, இலங்கைப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை. அதில் தலையிட முடியாது என்றது. சீனா, பாகிஸ்தான், அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையில் ஆதிக்கம் பெறுவதைத் தடுப்பதற் காகச் செய்வதாகச் சொன்னது.

நாடாளுமன்றத்தில் தாக்குதல் நடத்தியது, மும்பை தொடர் வெடிகுண்டுகள், பிறகு அண்மையில் நடந்த தாக்குதல் எனப் பலவாறாக இந்திய மக்களைக் கொன்று குவித்த பாகிஸ்தானோடு இணைந்து கொண்டு தமிழர்களைக் கொன்று குவிக்கிறது. அப்படி யானால், பாகிஸ்தானின் இந்தியா மீதான பயங்கரவாதமென்பது இந்தியா - பாகிஸ்தான் இருதரப்பு அதிகார வர்க்கங்களும் தங்கள் மக்களைச் சுரண்ட பரஸ்பர புரிதலுடன் உருவாக்கிக்கொண்ட ஒன்று என்ற எம் சந்தேகம் ஒருபுறம் இருக்க, இப்போது, விடுதலைப் புலிகள் தீவிரவாதிகள் அதனால்தான் சண்டை என்கிறது.

ராஜீவ் காந்தியைக் கொன்றார்கள் என்கிறது. ராஜிவ்காந்தி ஒரு கவுன்சிலரோ, மாவட்டச் செயலாளரோ அல்ல. அவரை ஏற்கனவே ஒருமுறை கொலை செய்யும் முயற்சி இலங்கையில் நடை பெற்றிருந்த போதும், அந்தக் கொலைகாரன் விசாரிக்கப்பட வில்லை. ராஜீவ் காந்தியைக் கொல்ல முயன்ற அந்தச் சிங்கள வீரன்

ஆகியோரையும் குற்றம்சாட்டப்பட்டவர்களாக இணைத்துக் கொண்டு மறுபடியும் விசாரிக்கப்பட வேண்டும் என்பது என் கோரிக்கைகளில் ஒன்று.

ராஜீவ் மீது புலிகளுக்கு வருத்தம் இருந்திருக்கலாமே தவிர, கோபம் இருந்திருக்க வாய்ப்பில்லை. காரணம், ராஜீவ் இந்திராவின் புதல்வர். இந்திரா, தமிழீழத்தின் சிறு தெய்வங்களில் எம்.ஜி.ஆருக் குப் பக்கத்திலிருப்பவர்.

இந்தியா சொல்லும் காரணங்கள் அடிக்கடி மாறுவதிலிருந்தே இந்தியா நியாயத்திற்குப் புறம்பாகத்தான் இந்தப் போரில் ஈடுபட் டிருப்பது அம்பலமாகி இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சூழலில் நீங்கள் ஏன் நேரடியாகத் தலையிடக் கூடாது? புலிகள் போர் நிறுத்தத் தைப் பயன்படுத்தி ஆயுதம் குவிக்கிறார்கள் என்றது இலங்கை. சந்திரிகாவோ, ரணிலோ, மகிந்தாவோ கடந்த காலங்களில் ஒரு கடவுளாக அல்ல, மனிதர்களாகக்கூட நடந்து கொண்டதில்லை. இவர்கள் ஒரு நிர்ப்பந்தத்தின் பெயரில் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக் கொண்டு விட்டார்கள் என்பதால் மட்டுமே போராளிகள் ஆயுதங் களை ஒப்படைத்துவிட வேண்டும்; புனரமைப்புப் பணிகளில் ஈடுபடக்கூடாது என்று எதிர்பார்ப்பது என்னவகை நியாயம்? தாங்கள் நேர்மையாக நடந்து கொள்வோம் என்ற நம்பிக்கையை உண்டாக்குவதன் மூலமாக மட்டுமே போராளி களை - ஆயுதத்தைக் கீழே வைக்கச் செய்ய முடியும். கடந்த கால அரசுகள் எவையும் அப்படிச்செயல்படவில்லை.

உதாரணம் ரணில்- கருணா. ஆனால், புலிகள் போர்நிறுத்தத்தைப் பயன்படுத்திக் கொண்டு செய்தது ஆயுதம் வாங்கியது மட்டுமல்ல, அது காலகாலமாக நடப்பதுதானே - ஓர் அரசு நிர்வாகத்தையே உருவாக்கி இருக்கிறார்கள். சர்வதேசத்தின் கண்களில் இது தீவிரவாதமா?

அப்பாவித் தமிழர்களைக் காப்பதற்காகத்தான் போரிடுவதாகப் பசப்புகிறது இந்தியா. ஆயுத தளவாடங்களும் உளவு விமானங் களும் தான் இலங்கை போகின்றனவே தவிர, இந்தியாவால் அனுப்பப் பட்ட ஒரு பாராசெட்டமால் மாத்திரையைக் காட்டச் சொல்லுங்கள் பார்க்கலாம். இந்த லட்சணத்தில், தமிழீழ மக்களுக்கான வசதிகளை இலங்கை அரசு செய்யுமாம். அதற்கு இந்தியா உதவுமாம். .... வேலிக்கு ஓணான் சாட்சி! இப்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆம்புலன்ஸ்களைத் தாக்கினார்களே, அவர்களும் விடுதலைப் புலிகளா? பிரான்சின் 17 மனித உரிமையாளர்களைக்

கொலை செய்தார்களே, அவர்களும் விடுதலைப்புலிகளா? சீனாவின் டாங்கிகள், இந்தியாவின் உளவு விமானங்கள், பாகிஸ் தானின் ஆர்டிலரிகள் மட்டுமல்ல... இப்போது எம்மக்களைக் கொலை செய்துவருவது சர்வதேச சமூகத்தின் மௌனமும்தான் என்பதை எப்போது உணர்வீர்கள்- நியாயத்தின்பால் பெருவிருப் கொண்ட ஒரு மக்கள் சமூகம் பூமியிலிருந்து முற்றாகத் துடைத்து அழிக்கப்பட்ட பிறகா?

அபாரிஜின்கள், மாயா, இன்கா வரிசையில் நாங்களும் சேர்க்கப் படுவது உங்கள் நோக்கமென்றால், எங்கள் பழங்கதைகள் ஒன்றின் படி ஒவ்வொரு நாளும் ஏதேனும் ஒரு வீட்டிலிருந்து ஒருவர் வந்து உங்கள் முன்னால் தற்கொலை செய்து கொள்கிறோம்... எங்கள் சகோதரிகளையும் குழந்தைகளையும் விட்டுவிடச் சொல்லுங்கள். தாங்க முடியவில்லை. அவர்களெல்லாம் மனமாரச் சிரிப்பதை ஒரு நாள் பார்ப்போம் என்ற நம்பிக்கையில்தான் நாங்கள் போராடிக் கொண்டிருப்பதே. ஒரு பேச்சுக்கு ஒத்துக் கொள்வதென்றாலும் கூட, விடுதலைப் புலிகள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்றாலும் அப்படி ஒரு தண்டனையை வழங்கும் யோக்கி யதை இந்தியாவுக்கோ இலங்கைக்கோ கிடையாது.

*காலம் கடந்து வழங்கப்படும் நீதி, அநீதியைவிடக் கொடுமை யானது.*

1. இந்தியா உடனடியாக தமிழீழத்தின் பகுதிகளிலிருந்து தன் துருப்புகளைத் திரும்பப் பெற்றுக் கொள்வதோடு, மேற்கொண்டு செயற்கைக் கோள் உதவிகள், ராடார் போன்ற உதவிகளைச் செய்யக் கூடாதென்று சர்வதேச சமூகத்தால் கண்டிக்கப்பட வேண்டும். இலங்கையோடு இந்திய அரசு நடத்தும் முக்கியத்துவமற்ற பேச்சுப் பரிமாற்றங்கள்கூட சர்வதேச சமூகம்மூலமாகவே நடக்க வேண்டும். தமிழக மக்களிடமும் உலகெங்கும் பரந்து வாழும் தமிழீழத் தாரிடமும் இந்தியா பகிரங்க மன்னிப்புக்கோர வேண்டும்.

2. ஐ.நா. பொதுச் செயலாளரான பான் கி மூன், தொடர்ந்து தன் தாயகமான சீனாவிற்கு ஆதரவான நிலைப்பாட்டிலிருந்து, ஒரு தலைப்பட்சமாகச் செயல்பட்டு வருவதால், ஈழம் தொடர்பான முடிவெடுக்கும் அதிகாரம் அவருக்கு வழங்கப்படக் கூடாது.

3. இலங்கை அரசு எந்தெந்த நாடுகளிடமெல்லாம் கோரப்பட்டு புலிகள் மீது தடை விதிக்கப்பட்டதோ அந்தந்த நாடுகளில் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டு, தடை செய்யப்பட்ட அமைப்பின்

உறுப்பினர் என்ற குற்றத்திற்காகச் சிறையிலிருக்கும் அதன் உறுப்பினர்கள் எதுவித நிபந்தனையுமற்று உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

4. புலிகளின் உறுப்பினர்கள் மீதான பாஸ்போர்ட் தொடர்பான குற்றங்கள் மன்னிக்கப்பட்டு, அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

5. புலிகளோடு தொடர்புடையது என்னும் குற்றச்சாட்டின் பேரில் தடை செய்யப்பட்ட தொழில் நிறுவனங்களின் உரிமம் மீண்டும் அளிக்கப்படுவதோடு, தக்க நட்ட ஈடும் வழங்கப்பட வேண்டும்.

6. ராஜீவ் காந்தி கொலை வழக்கு இன்டர்போலால் விசாரிக்கப் பட்டு, உண்மையான குற்றவாளிகள் இனம் காணப்பட வேண்டும்.

7. பிரணாப்முகர்ஜி, கோத்தபாய ராஜபக்சே, சந்திரிகா, உதயணகார, கேகலிய ரம்புக்வெல, பசில் ராஜபக்சே, மகிந்த ராஜபக்சே, பொன்சேகா போன்றோர் நார்கோ அனிலிசிஸ் சோதனைக்குட்பட வேண்டும்.

**8. அமைக்கப்படப்போகிற தமிழீழத்தை அங்கீகரிக்கிற உரிமையை மட்டுமே சர்வதேசம் மேற்கொள்ளலாமே தவிர, அது யாரின் தலைமையில் அமைய வேண்டும் என்பதை தமிழீழ மக்கள்தான் முடிவு செய்வார்கள்.**

9. புலிகள் கை பலவீனமான நேரத்தில், மலையக மக்கள் மீது நடந்து வந்த தாக்குதல், எதிர்காலத்தில் அப்பகுதிகளில் மீண்டும் ஒரு பாரிய இன அழிவு ஏற்படுத்தப்படுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியிருப் பதால், மலையக மக்கள் தமிழீழத்தோடு இணைய விரும்புகிறார் களா என்பதை வாக்கெடுப்பு மூலம் அறிந்து அதன்படிச் செயல்பட வேண்டும்.இந்த விசயத்தில் மலையக மக்களின் முடிவே இறுதி யானது.

10. சென்னையில், குடிபோதையில் அப்பாவித் தமிழர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து, நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட டக்ளஸ் தேவானந்தாவின் தண்டனைக் காலம் பூர்த்தியாகும் காலத்திற்கும் முன் இலங்கைக்குத் தப்பிச் சென்றுவிட்டதால், அவர் கைது செய்யப்பட்டு, தமிழக பொலிசார் வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

11. பத்திரிகையாளரான லசந்தவின் கொலைக்குக் காரணமான அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும்.

12. தமிழ்நாட்டிற்குள் தஞ்சம் புகுந்திருக்கும் சிங்கள பத்திரிகையாளர்

களுக்குத் தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

13. தமிழ்நாட்டிற்கு அகதிகளோடு அகதியாக வந்த சிங்களத் தம்பதியர் மீதான பாஸ்போர்ட் குற்றச்சாட்டு நீக்கப்பட்டு, அவர்களும் அகதிகளாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

14. சுட்டுக்கொலை செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் குடும்பங்களுக்கான வாழ்வாதாரங்கள் உறுதி செய்யப்பட வேண்டும்.

என்றும் அன்புடன்

அநீதிகளுக்கெதிரான உங்கள் சகோதரன்

**கு. முத்துக்குமார்**

கொளத்தூர் சென்னை- 99

அருமைத் தமிழ் மக்களே,

அநீதிகளுக்கெதிரான போராட்டத்தில் நம் சகோதரர்களும், பிள்ளைகளும் அறிவாயுதம் ஏந்தியிருக்கிறார்கள். நான் உயிராயுதம் ஏந்தியிருக்கிறேன். நீங்கள் நகலாயுதம் ஏந்துங்கள். ஆம், உங்கள் கையில் கிடைத்திருக்கும் இந்தத் துண்டறிக்கையை நகலெடுத்து, உங்கள் நண்பர்கள், உறவினர்கள், மாணவர்கள் வசம் கொடுத்து, போராட்டத்திற்கான ஆதரவைப் பெருகப் பண்ணுங்கள்.

நன்றி.

❖ ❖ ❖

## ஈழத் தமிழ் உறவுகளுக்கு
## ஒரு தமிழகத்து
## உறவின் மடல்

என் அன்பான உறவுகளே,

உங்களுடன் நேரடியாகப் பழகிய காலங்களில் உங்களின் உண்மை யான அன்பைப் பெறும் வாய்ப்பைப் பெற்றவள் நான். அந்த அன்பை மனதில் தேக்கி வைத்து இந்த மடலினை எழுதுகிறேன்.

1980-களின் முற்பகுதியில் நான் சிறுமியாக இருந்தபோது, 'கற்பழிப்பு' என்ற சொல்லின் பொருள் தெரியாமலேயே அது கொடூரமானது என்பதை உணர முடிந்தது. ஏனெனில் எங்கோ நாலாம் பக்கத்தின் மூலையில் வரக்கூடிய கொலை, கற்பழிப்பு செய்திகள் தலைப்புச் செய்திகளாகத் தொடர்ந்து வந்தது அந்தக் காலகட்டத்தில்தான். அது ஈழத்தை முன்னிட்டு. அவைதான் கொலை போன்றே கற்பழிப்பு என்று ஊடகங்களால் விளிக்கப்பட்ட வன்புணர்ச்சியும் கொடூர மானது என்பதை மனதில் பதிய வைத்தன. இப்படியும் கொடூரங்கள் நடக்கக்கூடுமா என அதிர வைத்தன.

அன்று எம்மைச் சுற்றி இருந்தவர்கள் அனைவரும் ஈழம் குறித்துப் பேசினார்கள். கூட்டங்கள், ஓவிய மற்றும் புகைப்படக் கண்காட்சிகள், கருத்தரங்குகள் எனத்தெருக்கள்தோறும் ஈழ ஆதரவு நிகழ்ச்சிகள் ஏதாவது நடக்காத நாள் இருக்காது. விடுதலைப் போராட்டம் என்றால் என்னவென்று புரியாத வயதிலேயே விடுதலை வீரர்கள் எங்களுக்கு மாமா, அண்ணன் என்று உறவாடினார்கள். பின்னர் அவர்களே எமக்கு நாயகர்களாகவும் ஆனார்கள்.

அன்று, நிச்சயம் ஒரு ஈழத் தமிழ் குடும்பமாவது நட்பாக உறவாக இல்லாத தமிழகக் குடும்பமே இருக்க இயலாது. இன்றுபோல் ஈழத் தமிழ் ஏதிலிகள் எங்கோ ஒரு முகாமில் அடைக்கப்பட்டிருக்க வில்லை.எமக்கு அருகில், எம்மில் ஒருவராக வாழ்ந்து வந்தனர். பள்ளி தொடங்கி கல்லூரி வரை காலம் தோறும் என்னுடன் படித்த ஈழத்தமிழ்ப் பிள்ளைகள் எத்தனையோ.

அண்டை வீட்டாராக, உடன் படிப்பவர்களாக அவர்களுடன் பழகும் போது அவர்கள் காட்டிய அன்பை முழுமையாக உணர்ந்து சுகித்தவள். அதைவிட அதிகமாக அவர்களின் துயரங்களை அவர்களின் வாய்மொழியிலேயே கேட்டு வெதும்பியவள். இழப்பில்லாத குடும்பமே கிடையாதோ என்று எண்ண வைக்கும் செய்திகள். நாம் எத்தனை பாதுகாப்பான வாழ்க்கை வாழ்கிறோம் என்பதை உணர வைத்த நிகழ்ச்சிகள். அண்டை நாட்டுச் சிக்கல் அவர்கள் மூலம் அண்டை வீட்டுச் சிக்கலாகப் புரிந்தது.

இன்று அவை அனைத்தும் என் மனதில் நிழலாடுகின்றன. பழகிய ஒவ்வொரு ஈழத் தமிழரின் முகமும் மனதில் வந்து போகின்றன. யார் எங்கு இருக்கிறார்கள் எனத் தெரியாது. அதை விட வேதனை... உயிருடன் இருக்கிறார்களா என்பதற்கு எந்த உறுதியும் கிடையாது.

இதோ, 20 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது. இன்றும் ஈழம் பற்றி நாங்கள் பேசிக்கொண்டுதான் இருக்கின்றோம். நீங்களும் சோர்வு அடையாது போராடிக்கொண்டுதான் இருக்கிறீர்கள்.

இயல்பான மனித வாழ்வில் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்நாளில் தன் மனதுக்கு நெருக்கமானவர்களில் அதிகம் போனால் எத்தனை பேரைச் சாவு கொண்டுபோகப் பார்த்திருக்க முடியும்? 5..? 10..? ஆனால் உங்கள் நிலையோ? நினைத்துப் பார்க்கவும் முடிய வில்லை. அத்தனையும் தாங்கிக் கொண்டும் தளர்வின்றிப் போராடு கிறீர்கள்.

எனினும்... அண்மையில் வரும் செய்திகளைக் கேட்கக்கேட்க மனதில் கவலையைவிட அதிகமாகக் குற்ற உணர்ச்சி எழும்புகிறது. கொத்துக் கொத்தாக சாவு விழுகிறது. எங்களால் இங்கு வெறுமனே கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம்தான் நடத்த முடிகிறது. உங்களின் அவலக்குரல் எங்கள் செவிகளை எட்டிவிடாதிருக்க என்னென்ன செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்யப்படுகிறது. நொடியில் தகவல் பரிமாற்றம் சாதிக்கக்கூடிய இந்த நவீன காலத்தில்தான் உங்களுக்கு என்ன நடக்கிறது என்பதையே வெளிவிடாமல் தடுப்பதும் அவர்களுக்குச் சாத்தியப்படுகிறது.

ஆனால் புதிதாகத்தான் உங்களின் அவலம் எங்களுக்குப் புரிய வேண்டுமா? 30 ஆண்டுக்காலத்தில் சாவு எண்ணிக்கை அதிகரித்தது தவிர வேறு என்ன மாற்றம் நடந்திருக்கிறது? செய்திகள் எட்டித்தான் நாங்கள் குரல் கொடுக்க வேண்டுமா? மரணம் எனும் கோரம் முகத்தில் அறைந்தால் ஒழிய உணர்வு வராதா? மரணத்தின் வாசம் முகர்ந்து மகிழ்பவனுக்கும், மரணத்தின் நெடி துளைத்தால் மட்டுமே அழுபவருக்கும் எனக்கு வேறுபாடு தெரியவில்லை.

25 ஆண்டு காலம்... நாங்களும் நடத்தாத போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள், மாநாடுகள், கருத்தரங்குகள், பட்டினிப் போராட்டங்கள் இன்னும் என்னென்னவோ... எதை விட்டு வைத்தோம்? இத்தனையும் போதாதென, இன்று முத்துக்குமார் தொடங்கி 13 பேர், அதற்கும் முன்பாக 1995-ல் அப்துல் ரவூப் எனத் தன்னையே எரியூட்டி மாய்ந்த ஈகிகள்.

இவ்வளவுக்கும் பிறகும் எங்களால் சிங்களனையும் தடுக்க முடிய வில்லை. அவனுக்கு உதவுபவர்களையும் தடுக்க முடியவில்லை. ஒருவேளை எங்கள் போராட்டத்தில் இன்னும் சற்றுக் கூடுதலாக உண்மை வேண்டுமோ?

நீங்கள் இன்னமும் நம்பிக் கொண்டுதான் இருக்கிறீர்கள்... எங்களின் போராட்டங்களும் ஆதரவும்தான் உங்களுக்குப் பெரிய பலம் என்று. சாவை எதிர்நோக்கிய நிலையிலும் தளராது போராடும் உங்களின் உறுதிதான், எங்களையும் தொடர்ந்து போராடத் தூண்டுகிறது.

உங்களின் நம்பிக்கையை காப்பதற்காக இல்லை எனினும்... எங்களின் குற்ற உணர்ச்சிக்குப் பதில் சொல்லவாவது நாங்கள் போராடத்தான் வேண்டியிருக்கிறது.

**ஆம். எங்கள் கரங்களில் உங்களின் ரத்தம் வழிகிறது. ஜானி, திலீபன், புலந்தி அம்மான், குமரப்பா, கிட்டு, இன்னும் எத்தனையோ போராளிகள் போதாதென்று, எத்தனை எத்தனை அப்பாவி மக்கள்... பச்சிளம் குழந்தைகள். அமைதிப் படையாய் அழித்தது போதா தென்று, இன்று ராடார்களும் நச்சுக் குண்டுகளும் கொடுத்து ஒட்டு மொத்தமான அழிவிற்குக் காரணம் நாங்களும் தானே? துடைக்கத் துடைக்க வழிகிறது இரத்தம். எத்தனை முறை கழுவினாலும் நிற்காது வழிகிறது. நச்சு குண்டுகளினாலும் இரசாயன குண்டுக ளினாலும் உருகி மாண்ட குழந்தைகளின் சதைத் துண்டுகள் எங்கள் நகக்கண்களில் ஒட்டிக் கொண்டிருக் கின்றன. எத்தனை முறை உதறினாலும் விடாது பற்றி நிற்கின்றன.**

என்னய்யா.. இன்னும் 2 நாளுல எல்லாம் முடிஞ்சிடுமா என்று கிரிக்கெட் ஸ்கோர் போல விசாரிக்கும் மனமற்ற சவங்களுக்கு நடுவே வாழ்வதன் பயனா இது? முத்துக்குமாரை அப்படி ஒரு முடிவு எடுக்கத் தூண்டியது எது என இப்போது நன்றாகப் புரிகிறது.

நம் வாழ்நாளில், நாம் அறிய, ஒரு மனிதப் பேரழிவிற்கு சாட்சியாகச் இருக்கப் போகிறோமா?

எல்லாம் முடிந்த பிறகு நமக்கு மிஞ்சுவதெல்லாம் ஒரு 'கண்ணீர்க் கவிதை' தானா?

மனசாட்சியின் கேள்விகள் துளைக்கின்றன. குற்ற உணர்ச்சியும் இயலாமையும் அழுத்துகின்றன.

கைகளிலிருந்து வழியும் இரத்தத்தின் ஒவ்வொரு துளியும் அமிலமாய் எரிக்கின்றது. நகக்கண்களில் ஒட்டி நிற்கும் சதைத் துணுக்குகளில் தெரியும் குழந்தைகளின் முகங்கள், மனதை நெருப்பாய்த் தகிக்கின்றன.

**அன்பான உறவுகளே, அன்பிருந்து ஆக்கம் இல்லா கையறு நிலையில் நின்று, உங்களிடம் பாவ மன்னிப்புக் கோருகிறேன்.**

**மன்னிப்பது உங்களால் இயலாத ஒன்றுதான். எனினும் ஒருவேளை நீங்கள் எங்களை மன்னிக்கவும் கூடும்.**

**ஆனால் வரலாறு ஒருபோதும் எங்களை மன்னிக்கப் போவதில்லை.**

*குற்ற உணர்ச்சியுடன்,*

**தமிழக உறவு.**

*(நன்றி -- ராணி 17.05.2009)*

❖ ❖ ❖

# புதுமலர் பதிப்பகம்

*10/176 வைகை வீதி வீரப்பன் சத்திரம் (அஞ்சல்) ஈரோடு 638 004*
*போன் : 9443307681*

## வெளியீடுகள்

### படைப்பிலக்கியம்

| | | |
|---|---|---|
| 1. கல்லும் மண்ணும் | ரத்னம் | 35/- |
| 2. இரவுமழை | பா.செயப்பிரகாசம் | 45/- |
| 3. தலித் பற்றிய கொங்குச் சிறுகதைகள் | பெருமாள்முருகன் | 45/- |
| 4. உழவுமாடுகள் | ஞானி | 40/- |
| 5. கறுப்புக் குரல்கள் (ஆப்பிரிக்கப்பழங்குடியினரின் மரபார்ந்த கவிதைகள்) | தமிழில் லதாராமகிருஷ்ணன் | 35/- |

### மார்க்சியம்

| | | |
|---|---|---|
| 6. மார்க்சியத்தின் புதியபரிமாணங்கள் | ஞானி | 70/- |
| 7. மார்க்சியம் - அனா ஆவன்னா | தியாகு | 30/- |
| 8. மார்க்சியம் - தேடலும் திறனாய்வும் | ஞானி | 80/- |
| 9. மாக்சிம் கார்க்கியும் இந்தியாவும் | சோவியத்பலகணி | 25/- |
| 10. ஃபிடல் காஸ்ட்ரோ (நேருக்கு நேர்) | (தமிழில் அமரந்த்தா) | 70/- |
| 11. நமது படிப்பைச் சீர் செய்வோம் | மாசேதுங் | 25/- |
| 12. கியூபப் புரட்சியின் இன்றைய பொருத்தப்பாடு | கி.வெங்கடராமன் | 35/- |

### பெரியாரியல்

| | | |
|---|---|---|
| 13. பெரியார் பார்வையில் இஸ்லாமும் புத்தமும் | ஞான அலாய்சியஸ் | 45/- |
| 14. திசைமுகம் | ஓவியர்புகழேந்தி | 60/- |
| 15. இந்துத்துவ சூழலில் பெரியாரின் தேவை | கண.குறிஞ்சி | 50 |
| 16. அறிஞர்கள் பார்வையில் பெரியார் | (தொகுப்பு) | 50/- |

## ஈழம்

| | | |
|---|---|---|
| 17. தமிழீழ விடுதலைப் போராட்டமும் இந்தியாவும் | மு.திருநாவுக்கரசு | 10/- |
| 18. கண்ணீர் தேசம் | கில்பர்ட் | 25/- |
| 19. இலங்கையும் ஈழமும் | கணியன் | 05/- |
| 20. ஈழம் - உலகை உலுக்கிய கடிதங்கள் | (தொகுப்பு) | 40/- |

## வரலாறு

| | | |
|---|---|---|
| 21. வீரத்தியாகி சர்தார் பகத்சிங் | எம்.எஸ்.சுப்ரமணிய அய்யர் | 15/- |
| 22. கிளியோபாட்ரா | ஸ்டாலின் | 10/- |
| 23. ஹொரஸே மார்த்தி | அமரந்த்தா | 50/- |
| 24. கொங்குநாடு | தி.அ.முத்துசாமிக் கோனார் | 110/- |
| 25. அறை எண் 400 | ஜூலியஸ் பூசிக் | 07/- |

## திறனாய்வு

| | | |
|---|---|---|
| 26. புதுமையின் வேர்கள் | தமிழ்நாடன் | 40/- |
| 27. ஆர்.சண்முகசுந்தரத்தின் படைப்பாளுமை | பெருமாள் முருகன் | 45/- |
| 28. தொல்குடி வேளிர்- அரசியல் (செங்கம் நடுகற்கள்) | ஆர்.பூங்குன்றன் | 60/- |
| 29. படைப்பிலக்கியம் - சில சிகரங்களும் வழித்தடங்களும் | ஞானி | 40/- |

## சமூகவியல்

| | | |
|---|---|---|
| 30. மரணதண்டனை தேவையா? | கண.குறிஞ்சி | 15/- |
| 31. காவிரி உலகநீதியும் உள்நாட்டு அநீதியும் | பெ.மணியரசன் | 40/- |

## உரைநூல்

| | | |
|---|---|---|
| 32. திருக்குறள் (உரை) | கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் | 35/- |

❖ ❖ ❖

# உயிராயுதம் ஏந்தியவர்கள்


தூத்துக்குடி
முத்துக்குமார்
29.01.2009


மலேசியாவில்
ஸ்டீபன் ஜெகதீசன்
01.02.2009


பள்ளப்பட்டி
இரவி
02.02.2009


மலேசியாவில்
இராசா
06.02.2009


சீர்காழி
இரவிச்சந்திரன்
07.02.2009


சென்னை
அமரேசன்
08.02.2009


ஜெனீவாவில்
முருகதாசன்
13.02.2009


கடலூர்
சோதி(எ) தமிழ்வேந்தன்
18.02.2009


சென்னை
சிவப்பிரகாசம்
21.02.2009


சிவகாசி
கோகுலரத்தினம்
25.02.2009


வாணியம்பாடி
சீனிவாசன்
27.02.2009


பெரம்பலூர்
சிறிதர்(எ) எழில்வளவன்
05.03.2009


அரியலூர்
இராசசேகர்
15.03.2009


கடலூர்
ஆனந்த்
15.03.2009


புதுக்கோட்டை
பாலசுந்தரம்
22.03.2009


சிவகாசி
மாரிமுத்து
22.03.2009


கரூர்
சிவானந்தன்
17.04.2009


பண்ருட்டி
சுப்பிரமணி
23.04.2009

புதுமலர்